ஆகஸ்ட் - 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்

வ. எண்	பொருளடக்கம்	பக்க எண்
01.	ஐஎன்எஸ் விக்ராந்த்	03
02.	FIDE செஸ் ஒலிம்பியாட் போட்டி	03
03.	'அல் நஜா' – இந்தியா–ஓமான் கூட்டு இராணுவப்பயிற்சி	06
04.	இராம்சர் தளங்கள்: தமிழ்நாடு	15
05.	உலகின் மிகப்பெரிய மிதவை சூரிய மின்னுற்பத்தி ஆலை	18
06.	குரங்கு அம்மை: தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள்	21
07.	தேசிய வருமான வரி நாள்	24
08.	குடியரசுத்துணைத்தலைவர்: ஜகதீப் தன்கர்	26
09.	'தகைசால் தமிழர்' விருது: ஆர் நல்லக்கண்ணு தேர்வு	26
10.	CSIR: முதல் பெண் தலைமை இயக்குநர்	31
11.	ஈரநிலங்கள்: சிறப்புக்கட்டுரை	32
12.	உலக கல்லீரல் அழற்சி நாள்	36
13.	உலக இளையோர் திறன்கள் நாள்	36
14.	கொந்தகை அகழாய்வு	38
15.	செஸ் ஒலிம்பியாட் நிறைவு	38
16.	உலகின் மிகவுயரமான இரயில்வே பாலம்	40
17.	உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி	43
18.	நாட்டின் 32ஆவது யானைகள் காப்பகம்	53
19.	வாசுகி: சரக்கு இரயில்	62
20.	ஆர்ட்டெமிஸ் III: நிலவு ஆய்வுத்திட்டம்	72

மேலும் பல...

1. இந்தியாவில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை வேளாண் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது?

அ. 2

ஆ. 3

இ. 5 ☑

ஈ. 10

✓ பதினோராவது வேளாண் கணக்கெடுப்பு (2021–22) சமீபத்தில் நடுவண் உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அவர்களால் தொடங்கப்பட்டது. இந்தியாவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வேளாண் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. திறன்பேசிகள் மற்றும் கையடக்க கணினிகள்கொண்டு தரவுசேகரிப்பு நடத்தப்படுவது இதுவே முதல்முறையாகும். மொத்த விவசாய பரப்பின் அளவு, வகுப்பு வாரியான பங்கீடு, நிலப் பயன்பாடு, குத்தகை, பயிரிடும் முறை என்பன உள்ளிட்ட பல்வேறு அளவீடுகளின்கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட்டு இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

2. இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலான 'விக்ராந்த்'ஐ கட்டிய கப்பல்கட்டுந்தளம் எது?

அ. கொச்சி கப்பல்கட்டுந்தளம் ☑

ஆ. மசகன் கப்பல்கட்டுந்தளம்

இ. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள்

ஈ. ஹிந்துஸ்தான் கப்பல்கட்டுந்தளம்

✓ இந்தியாவின் முதலாவது உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலான, 'விக்ராந்த்' கொச்சின் கப்பல்கட்டுந்தளத்தால் (CSL) கட்டப்பட்டு இந்திய கடற்படைக்கு வழங்கப்பட்டது. கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் உள்ள பொதுத்துறை கப்பல்கட்டுந்தளமான CSL, 76% உள்நாட்டு பாகங்களைக்கொண்டு இந்தக்கப்பலை கட்டியுள்ளது. 'விக்ராந்த்', இந்திய கடற்படையில் இந்திய கடற்படை கப்பலாக (INS) பணியமர்த்தப்படும்.

3. சர்வதேச புலிகள் நாள் கொண்டாட்டங்களை நடத்திய தடோபா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. சிக்கிம்

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. குஜராத்

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ மகாராஷ்டிர மாநிலத்தின் தடோபா புலிகள் காப்பகம் இந்தியாவில் சர்வதேச புலிகள் நாள் கொண்டாட்டங்களை நடத்தியது. மகாராஷ்டிராவின் சந்திராபூர் வன அகாதெமியில் நடைபெற்ற 2022ஆம் ஆண்டு சர்வதேச புலிகள் நாள் கொண்டாட்டத்தில் நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சர் பூபேந்தர் யாதவ் கலந்து கொண்டார். சர்வதேச புலிகள் நாளைக் கொண்டாடுவதற்கான பேரறிவிப்பு கடந்த 2010 ஜூலை.29 அன்று புனித பீட்டர்ஸ்பெர்க்கில் செய்யப்பட்டது.

4. இந்தியாவில் முதன்முறையாக FIDE செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. தெலுங்கானா

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிஸா

✓ 44ஆவது FIDE செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் தமிழ்நாடு அரசால் நடத்தப்படுகிறது. இச்சர்வதேச போட்டியை இந்தியா நடத்துவது இதுவே முதல்முறை. 187 நாடுகளைச் சேர்ந்த செஸ் வீரர்கள் பங்கேற்கும் உலகின் மிகப்பெரிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டியான இது சென்னைக்கு மிக அருகிலுள்ள மாமல்லபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சர்வதேச நிகழ்வை மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

5. இந்திய கடற்படையானது அண்மையில் கீழ்க்காணும் எந்த நாட்டிலிருந்து இரண்டு 'MH-60 R' என்ற பன்முக இயக்கங்கொண்ட உலங்குவானூர்திகளைப் பெற்றது?

அ. ரஷ்யா

ஆ. அமெரிக்கா ☑

இ. இஸ்ரேல்

ஈ. பிரான்ஸ்

✓ இந்திய கடற்படையானது சமீபத்தில் அமெரிக்காவிடமிருந்து இரண்டு 'MH-60 R' என்ற பன்முக இயக்கங்கொண்ட உலங்குவானூர்திகளைப் பெற்றது. மூன்றாவது உலங்குவானூர்தி இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு வந்து சேரும். 2019ஆம் ஆண்டில், அமெரிக்கா தனது வெளிநாட்டு இராணுவ விற்பனை (FMS) திட்டத்தின்கீழ் 24 MH-60R பன்முக உலங்குவானூர்திகளை இந்தியாவிற்கு விற்பனை செய்ய ஒப்புதல் அளித்தது. 'MH-60R' என்பது தற்போது பயன்பாட்டில் உள்ள மிகவும் அதிநவீன கடல்சார் பன்முகப்பணிகள் செய்யும் உலங்குவானூர்தி ஆகும்.

6. கடந்த 2021ஆம் ஆண்டில், அதிகபட்ச சட்டமன்ற அமர்வுகளை நடத்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா ☑

இ. ஒடிஸா

ஈ. கர்நாடகா

✓ PRS, சட்டமன்ற ஆராய்ச்சி என்ற மதியுரையகத்தின் அண்மைய ஆய்வின்படி, கேரளாவில் 2021ஆம் ஆண்டில் 61 நாட்கள் என்ற அளவில் அதிகபட்ச சட்டமன்ற அமர்வுகள் நடைபெற்றுள்ளன. 2016 மற்றும் 2019-க்கு இடையில், சராசரியாக 53 நாட்கள் சட்டமன்ற அமர்வுகள் நடத்தப்பட்டு கேரளா முதலிடத்தில் இருந்தது. கேரளாவைத்தொடர்ந்து ஒடிஸா (43 நாட்கள்), கர்நாடகா (40 நாட்கள்), தமிழ்நாடு (34 நாட்கள்) உள்ளன.

7. அண்மையில் தொடங்கப்பட்ட, 'புதுப்பிக்கப்பட்ட விநியோகப் பிரிவுத் திட்டத்தைச்' செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

அ. எரிசக்தி அமைச்சகம் ☑

ஆ. நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது வழங்கல் அமைச்சகம்

இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

✓ நடுவண் எரிசக்தி அமைச்சகத்தின், 'புதுப்பிக்கப்பட்ட விநியோகப் பிரிவுத் திட்டத்தைப்' பிரதமர் தொடங்கிவைத்தார். எரிசக்தி விநியோக நிறுவனங்கள் அவற்றின் செயல்பாட்டுத்திறன் மற்றும் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்த உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ₹5200 கோடி மதிப்பிலான NTPCஇன் பல்வேறு பசுமை ஆற்றல் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். தேசிய சூரியசக்தி தளத்தையும் பிரதமர் அப்போது தொடங்கி வைத்தார்

8. ஒரு புதிய ஊசித்தட்டான் இனம் (*Protosticta anamalaica*) கண்டுபிடிக்கப்பட்ட பீச்சி வனவுயிரிகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா ☑

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா

✓ திருச்சூரின் பீச்சி வனவுயிரிகள் சரணாலயத்திலுள்ள மேற்குத்தொடர்ச்சிமலையில், ஆனைமலை நாணல்–வாலி (*Protosticta anamalaica*) என்ற ஒரு புதிய ஊசித்தட்டான் இனத்தை திருவாங்கூர் இயற்கை வரலாற்றுச்சங்கத்தின் பூச்சியியல் வல்லுநர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர். இதன்மூலம், கேரள மாநிலத்தில் உள்ள தும்பி இனங்களின் எண்ணிக்கை 182–ஆக உயர்ந்துள்ளது. மூணாறு நிலப்பரப்பின் பீச்சி வனவுயிரிகள் சரணாலயத்தில் உள்ள பொன்முடி மலையில் இந்தப் பூச்சி முதலில் காணப்பட்டது.

9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'Logistics Data Bank' திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑

இ. MSME அமைச்சகம்

ஈ. கனரக தொழிற்துறை அமைச்சகம்

वाणिज्य एवं
उद्योग मंत्रालय
MINISTRY OF
COMMERCE
AND INDUSTRY
सत्यमेव जयते

✓ NLDSL–NICDC சரக்குப்போக்குவரத்து தரவு வங்கி (LDB) திட்டமானது 50 மில்லியன் EXIM கொள்கலன்களைக் கையாண்டு சாதனை புரிந்துள்ளது. NICDC சரக்குப்போக்குவரத்து தரவு சேவைகளின் இச்சாதனைக்காக நடுவண் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார். National Industrial Corridor Development Corporation என்பதன் சுருக்கந்தான் 'NICDC'. இந்தியாவின் EXIM கொள்கலன் அளவின் 100 சதவீத அளவை LDB கையாளுகிறது. EXIM கொள்கலன் இயக்கத்தின் நிகழ்நேர கண்காணிப்பிற்காக இது இணைய உலகம் (IoT), பெருந்தரவு மற்றும் மேகக்கணினி அடிப்படையிலான தீர்வுமூலம் RFID தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

10. இந்தியாவின் மிகப்பெரிய நன்னீர் ஏரியான லோக்டாக் ஏரி அமைந்துள்ள மாநிலம் எது?

அ. அஸ்ஸாம்

ஆ. மணிப்பூர் ☑

இ. ஹரியானா

ஈ. தெலுங்கானா

✓ மணிப்பூர் மாநிலத்தில் அமைந்துள்ள லோக்டாக் ஏரி இந்தியாவின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும். இந்த ஏரி மணிப்பூரில் அடையாளம் காணப்பட்ட மொத்த ஈரநிலங்களில் 61 சதவீதத்தை உள்ளடக்கியுள்ளது. அண்மையில், லோக்டாக் ஏரியில் உள்ள அனைத்து மிதவை வீடுகள் மற்றும் மீன்பிடி கட்டமைப்புகளை அகற்றுவதற்கான அறிவிப்பை லோக்டாக் ஏரி மேம்பாட்டு ஆணையம் வெளியிட்டது. இது அங்குள்ள மீனவ சமூகம் மற்றும் வீட்டுவிடுதி உரிமையாளர்களிடமிருந்து கடுமையான எதிர்வினையை ஈட்டியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 11ஆவது வேளாண் கணக்கெடுப்பு தொடக்கம்: அறிதிறன்பேசி, கையடக்க கணினிமூலமாக விவரங்கள் சேகரிப்பு

பதினோறாவது வேளாண் கணக்கெடுப்பை நடுவண் வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடக்கி வைத்தார். பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தக் கணக்கெடுப்பில் முதன்முறையாக அரிதிறன்பேசி, கையடக்க கணினி ஆகியவை மூலமாக விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

இதுகுறித்து மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2021–22ஆம் ஆண்டுக்கான 11ஆவது வேளாண் கணக்கெடுப்பை நடுவண் அமைச்சர் தொடக்கிவைத்தார். இதற்கான களப்பணிகள் வரும் ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்படவுள்ளன.

இந்தக் கணக்கெடுப்பு நடைமுறையை கடந்த 1970–71ஆம் ஆண்டு முதல் நடுவண் வேளாண் அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. பத்தாவது வேளாண் கணக்கெடுப்பு கடந்த 2015–16ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

---

2. இந்தியா – ஓமான் கூட்டு இராணுவப்பயிற்சி இராஜஸ்தானில் இன்று தொடக்கம்

இந்தியா, ஓமான் கூட்டு இராணுவப் பயிற்சியான 'அல் நஜா' நான்காவது பதிப்பு ஆக.1 அன்று இராஜஸ்தான் மாநிலத்தில் தொடங்குகிறது. இந்தப் பயிற்சியில் பங்கேற்கும் ஓமான் நாட்டு பாராசூட் படை வீரர்கள் இந்தியா வந்தடைந்ததாக நடுவண் பாதுகாப்புத்துறை தெரிவித்தது.

புவியியல் ரீதியாக அரபிக்கடலால் இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஓமான் நாட்டுடன், வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்சில், அரபு லீக் மற்றும் இந்தியப்பெருங்கடல் ரிம் கூட்டமைப்பு உள்ளிட்டவற்றில் இணைந்திருப்ப–தோடு வர்த்தகம் மற்றும் இராணுவ ஒப்பந்தங்களில் இருநாடுகளும் கையெப்பமிட்டுள்ளன. சுமார் 4 பில்லியன் டாலர் அளவிற்கு இருதரப்பு வர்த்தம் நடைபெற்ற வருகிறது.

கடந்த 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஒப்பந்தங்களையொட்டி, இந்தியா–ஓமான் நாடுகளுக்கிடை–யே 'அல் நஜா' என்ற கூட்டு இராணுவப்பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்த அல் நஜாவின் நான்காவது பதிப்பு ஆக.1–ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை இராஜஸ்தான் மாநிலத்தில் வெளிநாட்டுப் பயிற்சி முனையான மகாஜன் பீல்ட் பயர் ரேஞ்ச்சில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக ராயல் ஓமான் இராணுவத்தின் பாராசூட் படையைச் சேர்ந்த 60 வீரர்கள் இந்தியா வந்துள்ளனர். இந்திய ராணுவத்தின் சார்பாக 18ஆவது போர் வாகன காலாட்படையைச் சேர்ந்த வீரர்கள் குழு இதில் கலந்துகொள்ளுகிறது.

தீவிரவாத எதிர்தாக்குதல் நடவடிக்கைகள், பிராந்திய பாதுகாப்பு செயல்பாடுகள் மற்றும் அமைதியை நிலைநிறுத்தும் நடவடிக்கைகளுடன் உடற்தகுதி பயிற்சி, செயல்முறை மற்றும் நடைமுறைகளில் இந்தக் கூட்டுப் பயிற்சிகளில் கவனஞ்செலுத்தப்படுகிறது.

---

1. தேசிய பங்குச்சந்தையின் (NSE) புதிய MD மற்றும் CEO–ஆக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. ஆஷிஷ் சௌகான் ☑

ஆ. K V காமத்

இ. உர்ஜித் படேல்

ஈ. அருந்ததி பட்டாச்சார்யா

✓ தேசிய பங்குச்சந்தையின் (NSE) புதிய MD மற்றும் CEO–ஆக ஆஷிஷ் சௌஹானை சந்தை ஒழுங்காற்றுநரான SEBI நியமித்துள்ளது. ஆஷிஷ் சௌகான் தற்போது மும்பை பங்குச்சந்தையின் (BSE) MD மற்றும் CEOஆக உள்ளார். BSE மற்றும் அதன் துணை நிறுவனமான Central Depository Services Ltd., (CDSL), அவரது தலைமையின்கீழ் வெற்றிகரமான IPO–க்களை அறிமுகப்படுத்தியது.

2. கைவினைக் கிராமத் திட்டம் என்பது எந்த நடுவண் அமைச்சகத்தின் முனைவாகும்?

அ. நடுவண் கலாச்சார அமைச்சகம்

ஆ. நடுவண் ஜவுளி அமைச்சகம் ☑

இ. நடுவண் உள்துறை அமைச்சகம்

ஈ. நடுவண் MSME அமைச்சகம்

✓ கைவினைஞர்களின் நிலைத்த வாழ்வாதாரமாக கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதை, 'தி கிராஃப்ட்ஸ் வில்லேஜ் திட்டம்' நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 'சுற்றுலாவுடன் ஜவுளியை இணைப்பதற்கான' நடுவண் ஜவுளி அமைச்சகத்தின் முனைவாகும். இது கைவினைக் குழுக்களுக்கு உட்கட்டமைப்பு ஆதரவை வழங்குவதன் மூலம் கைவினை மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் எட்டுக் கைவினைக் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

✓ அவை திருப்பதி (ஆந்திர பிரதேசம்), வதாஜ் (குஜராத்), நைனி (உத்தர பிரதேசம்), இரகுராஜ்பூர் (ஒடிசா), அனேகுண்டி (கர்நாடகா), மாமல்லபுரம் (தமிழ்நாடு), தாஜ் கஞ்ச் (உத்தர பிரதேசம்) மற்றும் அமர் (இராஜஸ்தான்) ஆகும்.

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'சபஹர் துறைமுகம்' அமைந்துள்ள நாடு எது?



அ. ஆப்கானிஸ்தான்

ஆ. நேபாளம்

இ. ஈரான் ☑

ஈ. கஜகஸ்தான்

✓ சபஹர் துறைமுகம் ஈரானில் அமைந்துள்ள ஓர் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாகும்; இது மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான வணிக போக்குவரத்து மையமாகும். இந்தியாவிற்கும் மத்திய ஆசியாவிற்கும் இடையே சரக்குப்போக்குவரத்தை சிக்கனமாக்குவதற்கான இந்திய தொலைநோக்குத்திட்டமான பன்னாட்டு வடக்கு தெற்கு போக்குவரத்து வழித்தடத்தின் (INSTC) தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் 'சபஹர் நாள்' கொண்டாடப்படுகிறது.

✓ 'சபஹர் நாளை' முன்னிட்டு, நடுவண் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துகள் அமைச்சகம், இந்திய போர்ட்ஸ் குளோபல் லிமிடெட் (IPGL) உடன் இணைந்து, சபஹர் மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கேற்பதற்காக மும்பையில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தது.

4. இந்தியா–ஓமன் கூட்டு இராணுவப் பயிற்சியான, 'அல் நஜா' நடத்தப்படுகிற மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. இராஜஸ்தான் ☑

இ. சிக்கிம்

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ இந்திய இராணுவமும் ஓமன் ராயல் ஆர்மியும் இணைந்து சமீபத்தில் இந்தியாவின் இராஜஸ்தானில் 13 நாள் கூட்டு இராணுவப் பயிற்சியை தொடங்கின. இந்தியா–ஓமன் கூட்டு இராணுவப் பயிற்சியின் நான்காவது பதிப்பு, 'அல் நஜா' பயங்கரவாத எதிர்ப்பு, பிராந்திய பாதுகாப்பு மற்றும் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் கவனஞ்செலுத்துகிறது.

5. இந்தியாவில் குரங்கம்மை நோய் நிலைமையை கண்காணிப்பதற்காக நடுவணரசால் சமீபத்தில் அமைக்கப்பட்ட பணிக்குழுவின் தலைவர் யார்?

அ. அமிதாப் காந்த்

ஆ. V K பால் ☑

இ. மன்சுக் மாண்டவியா

ஈ. பாரதி பவார்

✓ இந்தியாவில் குரங்கம்மை நோயின் தாக்கத்தைக் கண்காணிக்க நடுவணரசு தனிப்படை அமைத்துள்ளது. இது NITI ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) டாக்டர் V K பால் தலைமையில் உள்ளது. இந்தப்பணிக்குழுவில் நடுவண் சுகாதார அமைச்சகம், மருந்து மற்றும் உயிரித் தொழில்நுட்ப செயலாளரும் இடம்பெற்றுள்ளார். நோய் கண்டறிதல் வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் நோய்க்கு எதிரான தடுப்பூசியை ஆராய்வது குறித்து இது அரசுக்கு ஆலோசனை வழங்கும். இந்தியாவில் இதுவரை நான்கு குரங்கம்மை பாதிப்பு (கேரளாவில் மூன்று, தில்லியில் ஒன்று) பதிவாகியுள்ளன.

6. ஒவ்வோர் ஆண்டும், 'நெல்சன் மண்டேலா நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.14

ஆ. ஜூலை.18 ☑

இ. ஜூலை.19

ஈ. ஜூலை.25

✓ 'நெல்சன் மண்டேலா நாள்' ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.18ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையானது கடந்த 2009ஆம் ஆண்டில் ஜூலை.18ஆம் தேதியை நெல்சன் மண்டேலா நாளாக அறிவித்தது. தென் ஆப்பிரிக்காவில் முழுமையான மக்களாட்சித் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவர் நெல்சன் மண்டேலா ஆவார்.

7. தேசிய மின்னாளுகை சேவை வழங்கல் மதிப்பீட்டில் கீழ்க்காணும் எந்த நடுவணமைச்சகத்தின் இணையதளம் முதலிடத்தைப் பிடித்துள்ளது?

அ. உள்துறை அமைச்சகம் ☑

ஆ. கலாச்சார அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. நிதி அமைச்சகம்

✓ தேசிய மின்னாளுகை சேவை வழங்கல் மதிப்பீட்டில் உள்துறை அமைச்சகத்தின் இணையதளம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. 2021ஆம் ஆண்டில் அதன் அறிவுப்பங்காளர்களான NASSCOM மற்றும் KPMG உடன் இணைந்து நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை ஆகியவற்றின்மூலம் நடத்தப்பட்ட நடுவணரசின் அமைச்சகங்களின் இணையதளங்களின் சேவை வழங்கல் மதிப்பீட்டில் 'டிஜிட்டல் போலீஸ்' இணையதளம் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

8. அண்மையில் அமைக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) குறித்த உயரதிகாரம்கொண்ட குழுவின் தலைவர் யார்?

அ. இரமேஷ் சந்த்

ஆ. அமிதாப் காந்த்

இ. M S சுவாமிநாதன்

ஈ. சஞ்சை அகர்வால் ☑

✓ நடுவணரசு முன்னாள் வேளாண்மை துறை செயலாளர் சஞ்சை அகர்வால் தலைமையில் உயரதிகாரம்கொண்ட குழுவை அமைத்துள்ளது. அக்குழுவானது குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) பொறிமுறையை மிகவும் பயனுள்ள மற்றும் வெளிப்படையானதாகக் கருதுகிறது. மூன்று சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்களை அரசாங்கம் ரத்து செய்த எட்டு மாதங்களுக்குப் பிறகு இது அமைக்கப்பட்டது. இக்குழுவில் NITI ஆயோக் உறுப்பினர் இரமேஷ் சந்த் மற்றும் IFFCO, ICAR–இன் பிரதிநிதிகள் மற்றும் கர்நாடகா, ஆந்திரா, சிக்கிம் மற்றும் ஒடிஸாவின் பிரதிநிதிகள் உள்ளனர்.

9. 'J C டேனியல் விருது' என்பது எந்த மொழியில் திரைத்துறையில் வழங்கப்படும் உயரிய விருதாகும்?

அ. தமிழ்

ஆ. மலையாளம் ☑

இ. மராத்தி

ஈ. கன்னடம்

✓ பிரபல திரைப்பட இயக்குநர் K P குமரனுக்கு கடந்த 2021ஆம் ஆண்டுக்கான 'J C டேனியல் விருது' வழங்கப்பட்டது. இது மலையாள திரைத்துறையின் மிகவுயரிய விருதாகும். கலாசார விவகாரங்கள் துறையின்கீழ் இயங்கும் இலாப நோக்கற்ற நிறுவனமான கேரள மாநில சலசித்ரா அகாதெமியால் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது.

10. 2021–இல் இந்தியாவுக்குப் பணமனுப்புவதில் முதலிடம் வகிக்கிற நாடு எது?

அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. அமெரிக்கா ☑

இ. சிங்கப்பூர்

ஈ. கனடா

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய ஆய்வின்படி, மொத்தப் பணப்பரிமாற்றத்தில் 23 சதவீத பங்கைக்கொண்டு, இந்தியாவின் பணப்பரிவர்த்தனையின் முதன்மையான நாடாக ஐக்கிய அரபு அமீரகத்தை ஐக்கிய அமெரிக்க நாடுகள் விஞ்சியுள்ளது. 2021ஆம் ஆண்டில் 4.6% வளர்ச்சியுடன் $87 பில்லியன் டாலர்களைப் பெற்றதால், இந்தியா உலகின் மிகப்பெரிய பெறுநராக உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் அமைகிறது சென்னையின் 2ஆவது விமான நிலையம்

காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் சென்னையின் இரண்டாவது விமான நிலையம் அமையவுள்ளது. உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம் அனுமதி அளித்ததும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கும் என்று மத்திய இணை அமைச்சர் வி கே சிங் தெரிவித்தார்.

மேலும், உடான் திட்டத்தின்கீழ் மண்டலங்களை இணைக்கும் வகையில் தமிழ்நாட்டில் நெய்வேலி, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் வேலூர் ஆகிய 4 விமான நிலையங்களை புதுப்பித்து தரமுயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பரந்தூரில் விமான நிலையம் அமைக்க ஏற்கெனவே 4,971 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. சுமார் ₹60 ஆயிரம் கோடியில் விமான நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து 73 கிமீ தொலைவில் அமைந்துள்ள பரந்தூருக்கு 2 மணி நேரத்தில் சென்றுவிடலாம். காஞ்சிபுரத்தில் இருந்து 15 கிமீ சென்னை – பெங்களூரு 6 வழிச்சாலையில் இருந்து 10 கி.மீ. தொலைவில் பரந்தூர் அமைந்துள்ளது.

---

2. ஜூலை GST வருவாய் ₹1.49 லட்சம் கோடி: தமிழ்நாட்டில் ₹8,449 கோடி வசூல்

நாட்டில் கடந்த ஜூலை மாத சரக்கு மற்றும் சேவை வரியாக (GST) ₹1,48,995 கோடி வசூலாகியுள்ளது. இதில் தமிழ்நாட்டில் ₹8,449 கோடி GST வசூலானது.

இது தொடர்பாக நடுவண் நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் GST அமல்படுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் GST வசூல் புதிய உச்சத்தை தொட்டது. அந்த மாதம் ₹1,67,540 கோடி GST வசூலானது.

இந்நிலையில், கடந்த ஜூலை மாதம் ₹1,48,995 கோடி GST வசூலானது. இது GST அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து வசூலான இரண்டாவது அதிகபட்ச வருவாய் ஆகும். கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜூலை மாதம் சரக்குகள் இறக்குமதிமூலம் கிடைத்த வருவாய் 48 சதவீதம் அதிகமாகவும், உள்நாட்டு பரிவர்த்தனை (சேவைகள் இறக்குமதி உள்பட) மூலம் கிடைத்த வருவாய் 22 சதவீதம் அதிகமாகவும் இருந்தன.

GST வசூலில் நடுவண் GST, மாநில GST, ஒருங்கிணைந்த GST, செஸ் வரி ஆகியவை அடங்கும். அதன் விவரம் பட்டியலில் வருமாறு: ஜூலை GST ₹1,48,995 கோடி; நடுவண் GST ₹25,751 கோடி; மாநில GST ₹32,807 கோடி; ஒருங்கிணைந்த GST ₹79,518 கோடி (சரக்கு இறக்குமதி மூலம் வசூலான ₹41,420 கோடியும் அடங்கும்)

செஸ் ₹10,920 கோடி (சரக்கு இறக்குமதிமூலம் வசூலான ₹995 கோடியும் அடங்கும்)

தமிழ்நாட்டில் 34% அதிகரிப்பு: கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழ்நாட்டில் ₹6,302 கோடி GST வசூலானது. இது நிகழாண்டு ஜூலை மாதம் 34% அதிகரித்து ₹8,449 கோடி (சரக்குகள் இறக்குமதி மீதான GSTஐ சேர்க்காமல்) வசூலாகியுள்ளது. கடந்த ஜூலை மாதம் அதிக GST வசூலான மாநிலங்களில் மகாராட்டிரம், கர்நாடகம், குஜராத்தை தொடர்ந்து தமிழ்நாடு 4ஆவது இடத்தில் உள்ளது.

---

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற ராக்கிகர்கி என்பது எந்த மாநிலத்தில் அமைந்துள்ள ஒரு பழைமையான தலமாகும்?

அ. ஹரியானா ☑

ஆ. குஜராத்

இ. ஒடிஸா

ஈ. பஞ்சாப்

✓ ஹரியானாவின் இராக்கிகர்கியில் அமைந்துள்ள பழங்கால மேடுகள் உட்பட இருபது பாரம்பரிய தலங்கள், 'தேசிய முக்கியத்துவம்' வாய்ந்தவையாக அடையாளங்காணப்பட்டுள்ளன. தில்லியில் உள்ள அனங்டல், ஆந்திர பிரதேச மாநிலத்தின் சிந்தகுந்தாவில் உள்ள பாறை ஓவியம்; லேவில் உள்ள பாறை ஓவிய தளம்; இமாச்சல பிரதேச மாநிலம் காலேஷ்வரம் மகாதேவர் கோவில் உள்ளிட்டவை இவ்வாறு அடையாளங்காணப்பட்ட பிற இடங்களாகும்.

2. பேரழிவை உண்டாக்கும் ஆயுதம் மற்றும் அவற்றின் விநியோக அமைப்பு (திருத்த) மசோதா – 2022 உடன் தொடர்புடைய அமைச்சகம் எது?

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

இ. வெளியுறவு அமைச்சகம் ☑

ஈ. கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் & நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம்

विदेश मंत्रालय
MINISTRY OF
EXTERNAL AFFAIRS

✓ பேரழிவை உண்டாக்கும் ஆயுதம் மற்றும் அவற்றின் விநியோக முறைமைகள் (சட்டவிரோத நடவடிக்கைகள் தடை) திருத்த மசோதா – 2022'ஐ நாடாளுமன்றம் சமீபத்தில் நிறைவேற்றியது. வெளியுறவு அமைச்சகம் அம்மசோதாவை அறிமுகப்படுத்தியது. இது 2005ஆம் ஆண்டு சட்டத்தை திருத்த விழைகிறது. மேலும், பேரழிவு ஆயுதங்கள் மற்றும் அவற்றின் விநியோகம் தொடர்பான எந்தவொரு தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கும் நிதியுதவி செய்வதில் இருந்து மனிதர்களை அது தடுக்கிறது.

3. 2022 – காமன்வெல்த் விளையாட்டில் இந்தியாவிற்காக தங்கப்பதக்கம் வென்ற அச்சிந்தா ஷூலியுடன் சார்ந்த விளையாட்டு எது?

அ. பளு தூக்குதல் ☑

ஆ. குத்துச்சண்டை

இ. டேபிள் டென்னிஸ்

ஈ. மட்டைப்பந்து

✓ இருபது வயதான அச்சிந்தா ஷூலி 2022 – காமன்வெல்த் விளையாட்டில் 73 கிலோகிராம் எடை தூக்கும் பிரிவில் இந்தியாவுக்காக தங்கப்பதக்கத்தை வென்றார். அவர் 313 கிலோகிராம் (ஸ்னாட்ச்சில் 143 கிலோ மற்றும் கிளீன் & ஜெர்க்கில் 170 கிலோ) கூட்டு முயற்சியில் முதலிடத்தைப் பெற்றார். முன்னதாக மீராபாய் சானு மற்றும் ஜெர்மி லால்ரினுங்கா ஆகியோர் தங்கப்பதக்கங்களையும், விந்தியாராணி தேவி மற்றும் சங்கேத் சர்கார் ஆகியோர் வெள்ளிப்பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

4. 'இசுலாமிய பெண்கள் உரிமை நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.31

ஆ. ஆகஸ்ட்.1 ☑

இ. ஆகஸ்ட்.3

ஈ. ஆகஸ்ட்.5

✓ 'முத்தலாக்' விதிக்கு எதிரான சட்டத்தை அமல்படுத்தியதைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் முதல் தேதி, 'இசுலாமிய பெண்கள் உரிமை நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது. தலாக்–இ–பித்தாத் எனப்படும் முத்தலாக் சட்டவிரோதமானது ஆகும். இந்திய சட்டப்படி குற்றவாளிகளுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

5. மாணவர்களின் கற்றல் விளைவை மேம்படுத்துவதற்காக NITI ஆயோக் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மாநிலம் எது?

அ. உத்தரகாண்ட்

ஆ. அருணாச்சல பிரதேசம் ☑

இ. அஸ்ஸாம்

ஈ. மேற்கு வங்காளம்

सत्यमेव जयते
NITI Aayog

✓ அருணாச்சல பிரதேச மாநில அரசு, மாநிலத்தில் உள்ள 3,000–க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் விளைவை மேம்படுத்துவது தொடர்பாக NITI ஆயோக்குடனான ஒரு முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூன்று ஆண்டு கூட்டாண்மையையும் (2022 – 25) இரண்டு இலட்சம் குழந்தைகளைச் சென்றடைவதையும் நோக்கமாகக் கொண்டது. பள்ளிக் கல்வி உருமாற்றத் திட்டமானது மாநிலங்களுக்கான NITI ஆயோக்கின் மேம்பாட்டு ஆதரவு சேவைகள் முனைவின் கீழ் உள்ளது.

6. BCCI நெறிமுறைகள் அதிகாரி மற்றும் குறைகேள் அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. இரஞ்சன் கோகோய்

ஆ. வினீத் சரண் ☑

இ. A K சிக்ரி

ஈ. V K சிங்

✓ உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வினீத் சரண், BCCIஇன் நெறிமுறைகள் அதிகாரியாகவும், குறைதீர்ப்பாளராகவும் ஓராண்டாக காலியாக இருந்த இவ்விரட்டைப் பணியிடங்களை நிரப்பியுள்ளார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் நிறைவடைந்த ஓய்வுற்ற நீதியரசர் D K ஜைன் அவர்களைத் தொடர்ந்த வினீத் சரண் இந்தப் பதவிக்கு வந்துள்ளார். ஒடிசா மாநில உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதியரசரான இவர், கர்நாடகா மற்றும் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நீதியரசராகப் பணியாற்றியுள்ளார்.

7. அண்மையில் திருகுமான் குறித்த தனது முதல் கணக்கெடுப்பை நடத்திய இந்திய மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. கர்நாடகா

இ. ஆந்திர பிரதேசம் ☑

ஈ. கோவா

✓ ஆந்திர பிரதேச மாநில வனவிலங்குத் துறை, தௌலேசுவரம் மற்றும் யானம் இடையேயான கோதாவரியில் உள்ள தீவுகளில் முதன்முறையாக திருகுமான்களைக் கணக்கெடுக்கும் பணியைத் தொடங்கியுள்ளது. அழிந்துவரும் அவ்வுயிரினங்களைக் காக்க ஒரு பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குவது இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

8. முழு நில உரிமைகொண்ட முதன்மை துறைமுகமாக மாறிய இந்தியாவின் முதல் துறைமுகம் எது?

அ. ஜவஹர்லால் நேரு துறைமுகம், மகாராஷ்டிரா ☑

ஆ. கொச்சி துறைமுகம், கேரளா

இ. மர்மகோவா துறைமுகம், கோவா

ஈ. காண்ட்லா துறைமுகம், குஜராத்

ज ने प न्यास
JNPT

✓ மகாராஷ்டிர மாநிலத்தின் ஜவகர்லால் நேரு துறைமுகம் இந்தியாவின் முதல் 100 சதவீத நில உரிமைகொண்ட முதன்மை துறைமுகமாக மாறியுள்ளது. அதன் அனைத்து கப்பல்களும் PPP மாதிரியில் இயக்கப்படுகின்றன. JNP, நாட்டின் முன்னணி கொள்கலன் துறைமுகங்களுள் ஒன்றாகும். மேலும் சிறந்த 100 சர்வதேச துறைமுகங்களில் அது 26ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

9. 2022 – ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. 82

ஆ. 85

இ. 87 ☑

ஈ. 84

✓ 2022 – ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில், 57 நாடுகளுக்கு எளிதாக அணுகும் வகையில் இந்திய கடவுச்சீட்டு 87ஆவது இடத்தில் உள்ளது. ஜப்பான் 193 நாடுகளுக்கு எளிதாக அணுகும் வகையில் முதல் இடத்தில் உள்ளது. சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா 192 நாடுகளுக்கான எளிதான அணுகலுடன் உலகின் அடுத்த ஆற்றல்வாய்ந்த கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ளன. 2020ஆம் ஆண்டில் இந்திய கடவுச்சீட்டு வெறும் 23 இடங்களுக்கு மட்டுமே எளிதாக அணுகும் வகையில் இருந்தது.

10. சீர்மிகு நகரங்கள் – Smart City Mission திட்டத்தின்கீழ் நிதியைப் பயன்படுத்துவதில் முதலிடம் பிடித்த மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கர்நாடகா

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்

Smart City
MISSION TRANSFORM-NATION

✓ அரசின் சமீபத்திய தரவுகளின்படி, சீர்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ் நிதியைப் பயன்படுத்திய மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. நடுவணரசால் வெளியிடப்பட்ட ₹4333 கோடியில் தமிழ்நாடு ₹3932 கோடிக்கு மேல் செலவழித்துள்ளது. உத்தர பிரதேச மாநிலம் ₹3142 கோடியில் ₹2699 கோடியைப் பயன்படுத்தி இரண்டாம் இடத்தில் உள்ளது. சீர்மிகு நகரங்கள் திட்டமானது கடந்த 2015 ஜூன்.25 அன்று தொடங்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தூய்மைக்கடல், பாதுகாப்பான கடல் இயக்கம். சென்னை மெரினா உட்பட 75 கடற்கரைகள் தூய்மைப்படுத்தப்பட உள்ளன

தூய்மைக்கடல், பாதுகாப்பான கடல் இயக்கம் என்பது கடற்கரைப் பகுதியை தூய்மையாக்கும் பணியில் குடிமக்கள் 75 நாட்கள் பங்கேற்கும் இயக்கமாகும். இந்த இயக்கம் கடந்த ஜூலை மாதம் 5ஆம் தேதி தொடங்கியது.

நாடு முழுவதும் 75 கடற்கரைகளில் ஒவ்வொரு கிலோமீட்டர் பகுதியிலும் 75 தன்னார்வலர்கள் இந்தத் தூய்மைப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இந்த இயக்கப்பணிகள் சர்வதேச கடலோரத் தூய்மை நாளான வரும் செப்.17ஆம் தேதி நிறைவடையும். அப்போது இந்தியாவிலேயே 75 கடற்கரையில் 7,500 கிமீட்டருக்கும் மேற்பட்ட கடற்கரை பகுதிகளை தூய்மைப்படுத்திய மிகப்பெரிய சாதனையாக இது அமையும். இதற்காக சுமார் ₹10 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 75 கடற்கரைகளில் தமிழ்நாட்டில் உள்ள 8 கடற்கரைகளும் இதில் அடங்கும். தமிழ்நாட்டில், சென்னையில் உள்ள மெரினா, பெசன்ட் நகர், திருவான்மியூர், இராமேஸ்வரம் அருகே மண்டபத்தில் ஆரியமான், பிறப்பன்வலசை, தூத்துக்குடியில் வஉசி, முத்துநகர், முல்லக்காடு, புதுச்சேரியில் காந்தி கடற்கரை ஆகிய கடற்கரைகள் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

1. 'சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷான் 2.0' என்ற திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

அ. சுகாதார அமைச்சகம்

ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑

இ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்

महिला एवं बाल विकास मंत्रालय
MINISTRY OF WOMEN AND CHILD DEVELOPMENT
सत्यमेव जयते

✓ நடுவண் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், 'சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷான் 2.0' என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயற்பாட்டு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டமான இது, 15ஆவது நிதி ஆணைய காலமான 2021-22 முதல் 2025-26 வரை செயல்படுத்துவதற்காக இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள், பருவ மகளிர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Nationally Determined Contribution' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ. பொருளாதாரம்

ஆ. பருவநிலை மாற்றம் ☑

இ. பாதுகாப்பு

ஈ. தொழிற்துறை

✓ பாரிசு ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பருவநிலை மாற்றம் தொடர்பான ஐநா கட்டமைப்பு மாநாட்டிற்கு (UNFCCC) இந்த NDC-கள் தெரிவிக்கப்படவுள்ளன. இந்தியா கடைசியாக 2015ஆம் ஆண்டு தனது NDC-ஐ சமர்ப்பித்தது. 2030 ஆம் ஆண்டுக்குள் அதன் GDPஇல் 45% வரை CO_2 உமிழ்வு தீவிரத்தை குறைக்கவும், 2030ஆம் ஆண்டுக்குள் புதைபடிவமற்ற எரிபொருள் அடிப்படையிலான எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு 50 சதவீதம் வரையிலான ஒட்டுமொத்த நிறுவப்பட்ட மின்னாற்றல் திறனை அடையவும் இந்தியா உறுதிபூண்டுள்ளது.

3. 'முதலமைச்சர் சம கல்வி நிவாரணம், உதவி மற்றும் மானியம் (சீராக்)' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ. தெலுங்கானா

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. ஹரியானா ☑

ஈ. ஒடிசா



✓ ஹரியானா மாநில முதலமைச்சர் மனோகர் லால் கட்டார் அண்மையில், 'முதலமைச்சர் சம கல்வி நிவாரணம், உதவி மற்றும் மானியம் (சீராக்)' என்ற திட்டத்தைத்தொடங்கினார். பட்ஜெட் தனியார் பள்ளிகளில் அரசுப்பள்ளிகளின் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவு (EWS) மாணவர்களுக்கு, 'இலவச கல்வி' வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பெற்றோர் ஆண்டு வருமானம் ₹1.8 இலட்சத்துக்கும் குறைவாக உள்ள அரசுப் பள்ளி மாணவர்கள் தனியார் பள்ளிகளில் சேரலாம்.

4. 2022 ஆகஸ்ட் மாத நிலவரப்படி, இந்தியாவில் எத்தனை ஸ்டார்ட்-அப்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

அ. 25000 ஆ. 50000

இ. 75000 ☑ ஈ. 1,00,000

75,000

- ✓ 75000 ஸ்டார்ட்–அப் நிறுவனங்களுடன் இந்தியா சாதனை படைத்துள்ளதாக நடுவண் வணிகம் & தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்துள்ளார். தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை (DPIIT) 75,000–க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்–அப்களை அங்கீகரித்துள்ளது. 808 நாட்களில் முதல் பத்தாயிரம் ஸ்டார்ட்–அப்களும், சமீபத்திய பத்தாயிரம் ஸ்டார்ட்–அப்கள் 156 நாட்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

5. இராம்சர் தளங்களாக அறிவிக்கப்பட்ட வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் மற்றும் கூந்தங்குளம் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. ஒடிஸா

இ. கர்நாடகா

ஈ. உத்தரகாண்ட்

- ✓ இந்தியாவிலிருந்து மேலும் 10 சதுப்பு நிலங்கள் இராம்சர் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த பரப்பளவு 12,50,361 ஹெக்டேர் ஆகும். இதன்மூலம் நாட்டின் மொத்த இராம்சர் தளங்கள் 64 ஆக மாறியுள்ளன. 10 புதிய இராம்சர் தளங்களில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் மற்றும் கூந்தங்குளம் பறவைகள் சரணாலயம் உட்பட தமிழ்நாட்டில் உள்ள ஆறு தளங்களும், கோவா, கர்நாடகா, மத்திய பிரதேசம் மற்றும் ஒடிசாவில் தலா ஒன்றும் அடங்கும்.

6. ஒவ்வோர் ஆண்டும், 'உலக செஸ் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.20 ☑

ஆ. ஆகஸ்ட்.20

இ. செப்டம்பர்.20

ஈ. அக்டோபர்.20

- ✓ உலக சதுரங்க நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.20 அன்று கொண்டாடப்படுகிறது. இது சர்வதேச சதுரங்க நாள் என்றும் அழைக்கப்படுகிறது. 1924ஆம் ஆண்டு இதே நாளில், சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE) பாரிஸில் நிறுவப்பட்டது. ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது (UNESCO) கடந்த 1966ஆம் ஆண்டில் இந்த நாளைக் கொண்டாடுவதற்கான யோசனையை முன்மொழிந்தது.

7. 2022 – உலக மூளை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?



அ. Brain Health for all ☑

ஆ. Brain: The CPU

இ. Brain for Knowledge

ஈ. Knowledge is Brain

- ✓ உலக மூளை நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.22 அன்று, பொது விழிப்புணர்வை அதிகரிக்கவும், மூளை நலம் தொடர்பான வாதங்களை ஊக்குவிக்கவும் கடைப்பிடிக்கப்படுகிறது. "Brain Health for all" என்பது நடப்பு 2022 ஆம் ஆண்டில் வரும் உலக மூளை நாளுக்கானக் கருப்பொருளாகும். இந்த நாள், உலகளவில் ஐந்து முக்கிய கருப்பொருள்களில் கவனஞ்செலுத்தும். அவை – விழிப்புணர்வு, தடுப்பு, வாதம், கல்வி மற்றும் அணுகல்.

8. 2023 – ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடம் எது?

அ. இந்தியா **ஆ. சீனா ☑**

இ. இந்தோனேசியா ஈ. நேபாளம்

✓ ஒத்திவைக்கப்பட்ட ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதி முதல் அக்.8ஆம் தேதி வரை சீனாவின் ஹாங்சோவில் நடைபெறும் என்று ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் (OCA) உறுதிப்படுத்தியுள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2022ஆம் ஆண்டு செப்டம்பரில் நடத்த திட்டமிடப்பட்டது; ஆனால் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனாவில் COVID–19 வழக்குகளின் அதிகரிப்பு காரணமாக, 2023ஆம் ஆண்டு வரை ஒத்திவைப்பதாக OCA அறிவித்தது.

9. 2022இல் நடைபெறும் '13ஆவது பீட்டர்ஸ்பெர்க் காலநிலை பேச்சுவார்த்தை' நடைபெறும் இடம் எது?

அ. சிகாகோ

ஆ. பெர்லின் ☑

இ. நெதர்லாந்து

ஈ. சுவிட்சர்லாந்து

✓ 13ஆவது பீட்டர்ஸ்பெர்க் காலநிலை பேச்சுவார்த்தையானது சமீபத்தில் பெர்லினில் தொடங்கியது. இரண்டு நாள் நடைபெறும் இவ்வருடாந்திர காலநிலை அமைச்சர்கள் சந்திப்பிற்கு (COP–27) ஜெர்மனி மற்றும் எகிப்து தலைமை தாங்குகிறது. COP–27–இன் முக்கிய குறிக்கோளான காலநிலை நடவடிக்கையை மேம்படுத்துவதில் உள்ள வேறுபாடுகளைத் களைவதற்கு ஒருமித்த கருத்தை உருவாக்கவும், அரசியல் வழிகாட்டுதலை வழங்கவும் இம்முறைசாரா அமைச்சர்கள் கூட்டம் எண்ணுகிறது.

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற இந்தியாவின் முதல் பயணிகள் செல்லும் டிரோனின் பெயர் என்ன?

அ. ஆகாஷ்

ஆ. வருணா ☑

இ. ஜடாயு

ஈ. கருடன்

✓ இந்தியாவின் முதல் பயணிகள் செல்லக்கூடிய டிரோனான 'வருணா', மனிதர்களை ஏற்றிக்கொண்டு 25 கிமீட்டர் வரை செல்லும் திறன்கொண்டது. அதால் 130 கிலோகிராம் எடை வரை சுமந்துசெல்லவியலும். தொடர்ச்சியாக 25–33 நிமிடங்கள் வரை இதால் பறக்கவியலும்.

✓ இந்தியாவின் முதல் பயணிகள் செல்லக்கூடிய டிரோனான 'வருணா'வின் செயல்விளக்கத்தை பிரதமர் மோடி அண்மையில் பார்வையிட்டார். 'வருணா' என்ற இந்த டிரோனை 'சாகர் டிபென்ஸ் எஞ்சினியரிங்' என்ற ஸ்டார்ட்–அப் நிறுவனம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியா – மொரீஷியஸ் ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு ஒப்பந்தத்தின்கீழ், இந்தியா–மொரீஷியஸ் உயர் அதிகார வர்த்தகக் குழுவின் முதலாவது அமர்வு வெற்றிகரமாக நடைபெற்றது

இந்தியா–மொரீஷியஸ் உயரதிகார வர்த்தகக் குழுவின் முதலாவது அமர்வு புது தில்லியில் 2022 ஆகஸ்ட்.1 முதல் 3 வரை நடைபெற்றது.

2021 ஏப்.1 முதல் அமலில் உள்ள இந்தியா–மொரீஷியஸ் இடையேயான ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஒப்பந்தத்தின் பொதுவான செயல்பாடு மற்றும் அமலாக்கம் குறித்து ஆய்வுசெய்வதற்காக உயர் நிலை கூட்டு வர்த்தகக் குழு அமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஆப்பிரிக்க நாடு ஒன்றுடன் இந்தியா கையெழுத்திட்டுள்ள முதலாவது ஒப்பந்தமாகும்.

இருநாடுகளுக்கும் இடையே 2019–20இல் $690.02 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இருதரப்பு வர்த்தகம், 2021–22இல் $786.72 மில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்திருப்பதற்கு இந்தக் கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பரஸ்பர சுங்க நிர்வாக உதவி ஒப்பந்தம் செய்து கொள்ள இருதரப்பிலும் விருப்பம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விரைவில் விவாதத்தை தொடங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அடுத்த அமர்வை 2023இல் நடத்துவதற்கு இருதரப்பும் முடிவு செய்துள்ளது.

---

2. பருவநிலை மாற்றம்: மேம்படுத்தப்பட்ட பங்களிப்புக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பருவநிலை மாற்ற இலக்கை அடைய தேசிய அளவிலான மேம்படுத்தப்பட்ட பங்களிப்புக்கு (NDC) நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. கடந்த ஆண்டு நவம்பரில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டில், பிரதமர் மோடி அறிவித்த 5 அம்சக்கொள்கைகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

மேம்படுத்தப்பட்ட NDC–இன்கீழ், கரியமில வாயு வெளியேற்றத்தை வரும் 2030–க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45 சதவீதம் குறைக்க நடுவணரசு முடிவு செய்துள்ளது. மேலும், புதைபடிவமற்ற எரிசக்தி ஆதாரத்தின் வாயிலாக வரும் 2030–க்குள் 50 சதவீதம் கூட்டு மின்சக்தியைப் பெறவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச வெப்பநிலை அதிகரிப்பை தொழிற்புரட்சிக்கு முந்தைய அளவான 2 டிகிரி செல்சியஸுக்கு குறைவாக கொண்டு வருவதை இலக்காக கொண்டு ஒரு நாடு வகுக்கும் திட்டம் அல்லது வியூகமே தேசிய அளவிலான மேம்படுத்தப்பட்ட பங்களிப்பு (NDC) ஆகும். இதற்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டில், இந்தியாவின் புதைபடிவமற்ற எரிசக்தி திறன் வரும் 2030க்குள் 500 GW திறனை எட்டும் என பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

---

1. UNESCOஇன் முக்கியமான அழிந்துவரும் பாரம்பரியக் கூர்நோக்ககங்களின் பட்டியலில், கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் வானியல் ஆய்வுக்கூடம் சேர்க்கப்பட்டுள்ளது?

அ. மகாராஷ்டிரா

ஆ. பீகார் ☑

இ. மேற்கு வங்கம்

ஈ. கேரளா

✓ முசாபர்பூரில் உள்ள LS கல்லூரியில் உள்ள வானியல் ஆய்வுக்கூடம் UNESCO–இன் உலகின் முக்கியமான அழிந்துவரும் பாரம்பரியக் கூர்நோக்ககங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. கடந்த 1916ஆம் ஆண்டில் இந்த வானியல் ஆய்வகம் உருவாக்கப்பட்டது. பல பத்தாண்டுகளாக செயல்பட்டு வந்த இந்த வானியல் ஆய்வகத்தில், கடந்த 1995இல் சில வானியல் உபகரணங்கள் காணாமல் போனதைத் தொடர்ந்து அது மூடி முத்திரையிடப்பட்டது.

2. IT மற்றும் ITeS தொழில்நுட்ப பூங்காவை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கீழ்க்காணும் எந்த மாநிலமும் லார்சன் & டூப்ரோவும் கையெழுத்திட்டன?

அ. தமிழ்நாடு

ஆ. குஜராத் ☑

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

✓ வதோதராவில் IT மற்றும் IT அடிப்படையிலான சேவைகளளிக்கும் (ITeS) தொழில்நுட்ப பூங்காவை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் லார்சன் & டூப்ரோவும் குஜராத் மாநில அரசாங்கமும் கையெழுத்திட்டன. ₹7,000 கோடி முதலீட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் L&T இந்த IT பூங்காவை உருவாக்கும். இது ஓர் ஆண்டில் 2,000 பொறியாளர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் பணி வழங்கும்; மேலும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10,000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளையும் அது உருவாக்கும்.

3. உலகின் மிகப்பெரிய மிதவை சூரிய மின்னுற்பத்தி நிலையம் கட்டப்படவுள்ள மாநிலம் எது?

அ. இராஜஸ்தான்

ஆ. மத்திய பிரதேசம் ☑

இ. குஜராத்

ஈ. பீகார்

✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் அண்மைய அறிவிப்பின்படி, உலகின் மிகப்பெரிய மிதவை சூரிய மின் உற்பத்தி நிலையமானது மத்திய பிரதேச மாநிலத்தின் கந்துவாவில் கட்டப்படவுள்ளது. இந்த ஆலை 2022–23ஆம் ஆண்டிற்குள் 600 MW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பீடு ₹3000 கோடிக்கும் மேல் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சூரிய மின் உற்பத்தித் திட்டம் தெலுங்கானாவில் உள்ள இராமகுண்டத்தில் NTPC–ஆல் இயக்கப்பட்டு வருகிறது.

4. வருமான வரித்துறையின் TIN 2.0 தளத்தில், முதன்முறையாக எந்த வங்கியின் கொடுப்பனவு நுழைவு வாயில் (payment gateway) இடம்பெற்றுள்ளது?

அ. பாரத வங்கி

ஆ. பெடரல் வங்கி ☑

இ. பஞ்சாப் தேசிய வங்கி

ஈ. ஆக்சிஸ் வங்கி

✓ பெடரல் வங்கியானது வருமான வரித்துறையின் TIN 2.0 தளத்தில் அதன் கொடுப்பனவு நுழைவாயில் பட்டியலிட்ட இந்தியாவின் முதல் வங்கியாக மாறியுள்ளது. கடன்/பற்றட்டை, UPI, NEFT/RTGS மற்றும் இணையவழி வங்கிச்

சேவை முறைமை போன்ற முறைகளைப் பயன்படுத்தி வரி செலுத்துவோர் பணஞ்செலுத்துவதற்கு இந்தக் கொடுப்பனவு நுழைவாயில் உதவுகிறது.

5. 2022ஆம் ஆண்டிற்கான ஐநா பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவிற்கு தலைமை வகிக்கிற நாடு எது?

அ. சீனா

ஆ. இரஷ்யா

இ. இந்தியா ☑

ஈ. கஜகஸ்தான்

✓ அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட 15 நாடுகளைக் கொண்ட ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தூதரக அதிகாரிகள் பங்கேற்கும், தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான சிறப்புக் கூட்டத்தை இந்தியா நடத்தவுள்ளது. இது அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது. ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரமற்ற உறுப்பினராக இந்தியா இரண்டாண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அக்கவுன்சிலில் இந்தியாவின் பதவிக்காலம் இந்த ஆண்டு டிசம்பரில் முடிவடைகிறது. 2022ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாத எதிர்ப்பு குழுவின் தலைவராக இந்தியா உள்ளது.

6. இந்தியாவில், 'தேசிய ஒலிபரப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.23 ☑

ஆ. ஆகஸ்ட்.23

இ. செப்டம்பர்.23

ஈ. அக்டோபர்.23

✓ தேசிய ஒலிபரப்பு நாள் என்பது இந்தியாவில் ஜூலை.23 அன்று அனுசரிக்கப்படும் வருடாந்திர நிகழ்வாகும்; இது நம் வாழ்வில் வானொலியின் தாக்கத்தை நினைவூட்டுகிறது. இந்தியாவின் அதிகாரப்பூர்வ ஒலிபரப்பு நிறுவனமான 'பிரசார் பாரதி'யில் அகில இந்திய வானொலியும் (AIR) தூர்தர்ஷனும் அடங்கும். ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்-பட்ட இந்தியன் பிராட்காஸ்டிங் கம்பெனி லிட் (IBC) கடந்த 1936ஆம் ஆண்டில் அகில இந்திய வானொலியாக (AIR) மாற்றப்பட்டது.

7. NITI ஆயோக்கின் சமீபத்திய அறிக்கையின்படி R&D (GERD)–க்கான இந்தியாவின் மொத்தச் செலவினம் என்ன?

அ. $43/ நபர் ☑

ஆ. $83/ நபர்

இ. $123/ நபர்

ஈ. $183/ நபர்

✓ NITI ஆயோக்கின் இந்திய புத்தாக்க குறியீடு – 2021–இன்படி, ஆராய்ச்சி & மேம்பாட்டிற்கான (R&D) இந்தியாவின் மொத்தச் செலவினம் உலகிலேயே மிகக்குறைவானவற்றுள் ஒன்றாகும். அது $43/ தனிநபர் என்றளவில் உள்ளது. இந்தியா இந்தச் செலவினத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் குறைந்தபட்சம் ரஷ்யா ($285) மற்றும் பிரேசில் ($173) போன்ற BRICS அல்லது ஆசியான் நாடுகளுக்கு இணையாக இருக்க வேண்டும் என்று இந்தக் குறியீட்டில் கூறப்பட்டுள்ளது. இந்திய அரசு R&D–க்கு 55%–க்கும் மேல் செலவு செய்கிறது.

8. சமீபத்தில் வெளியிடப்பட்ட, 'E–AMRIT செயலியுடன் தொடர்புடைய துறை எது?

அ. மின்–வாகனப் போக்குவரவு ☑ ஆ. விளையாட்டு

இ. தினை சாகுபடி ஈ. பெண்கள் அதிகாரமளித்தல்

✓ NITI ஆயோக் ஆனது ஐக்கிய இராஜ்ஜியத்துடன் இணைந்து மின்–வாகனப் போக்குவரவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த e–AMRIT (Accelerated e–Mobility Revolution for India's Transportation) செயலியை அறிமுகப்படுத்தியது. இந்தியாவில் அதிநவீன வேதியியல் மின்கல மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி சந்தை பற்றிய அறிக்கையையும் இது வெளியிட்டது. மின்–வாகனங்கள், மின்னேற்ற உட்கட்டமைப்பு மற்றும் மின்கல சேமிப்பு ஆகிய துறைகளில் NITI ஆயோக் இங்கிலாந்து அரசாங்கத்துடன் கூட்டிணைந்து செயல்பட்டு வருகிறது.

9. இந்தியா, எந்த உலகளாவிய குழுவுடன் இணைந்து, 'நாடுகடந்த குற்றங்கள் குறித்த கூட்டத்தை' நடத்தியது?

அ. பிம்ஸ்டெக்

ஆ. பிரிக்ஸ்

இ. ஆசியான் ☑

ஈ. ஜி–20

✓ நாடுகடந்த குற்றங்கள் தொடர்பான 9ஆவது ஆசியான்–இந்திய மூத்த அதிகாரிகள் கூட்டம் அமையில் மெய்நிகர் முறையில் நடைபெற்றது. நாடுகடந்த குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஆசியான்–இந்தியா வேலைத் திட்டத்தின் கட்டமைப்பின்கீழ் ஒத்துழைப்பை மேம்படுத்துதற்கான வழிகள் குறித்து இருதரப்பினரும் விவாதித்தனர். நாடுகடந்த குற்றங்கள் குறித்த 10ஆவது ஆசியான்–இந்தியா SOMTC ஆலோசனைக் கூட்டம் இந்தோனேசியாவில் 2023–இல் நடைபெறும்.

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற Monitoring App for Seamless Inspection (MASI) உடன் தொடர்புடையது எது?

அ. நலப்பராமரிப்பு நிறுவனங்களைக் கண்காணித்தல்

ஆ. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களைக் கண்காணித்தல் ☑

இ. விளையாட்டு நிறுவனங்களில் ஆய்வு

ஈ. கல்வி நிறுவனங்களில் ஆய்வு

✓ கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2,000 குழந்தைகள் சிறப்பு தத்தெடுப்பு/காப்பு நிறுவனங்களில் இறந்துள்ளனர் என்று மக்களவையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி பதிலளித்தார். கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 27,085 குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது (NCPCR) ஒரு செயலியை உருவாக்கியுள்ளது. அது குழந்தை பராமரிப்பு நிறுவனங்களைக் கண்காணிக்கும் 'Monitoring App for Seamless Inspection (MASI)' என்ற செயலியாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத எதிர்ப்பு கூட்டம்

ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் உறுப்புநாடுகள் பங்கேற்கும் பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டத்தை அக்.29ஆம் தேதி இந்தியா நடத்தவுள்ளது. அந்தக் கூட்டத்தில் அமெரிக்கா, ரஷியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் 5 நிரந்தர உறுப்புநாடுகளும், 10 நிரந்தரமற்ற உறுப்புநாடுகளும் உள்ளன. நிரந்தரமற்ற உறுப்புநாடாகக் கடந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியா பொறுப்பேற்றுக் கொண்டது. இந்தியாவின் பதவிக்காலம் டிசம்பர் மாதத்துடன் நிறைவடைய உள்ள நிலையில், பயங்கரவாதத்துக்கு எதிரான ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் சிறப்பு கூட்டத்தை நடத்தவுள்ளது.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவுடைய நடப்பாண்டுக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்து வருகிறது. அக்குழுவின் சார்பிலேயே சிறப்பு கூட்டம் நடத்தப்படவுள்ளது. அக்டோபர்.29–ஆம் தேதி

நடக்கவுள்ள அக்கூட்டத்தில் ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்புநாடுகளான அமெரிக்கா, ரஷியா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், அல்பேனியா, பிரேஸில், கேபன், கானா, ஐயர்லாந்து, கென்யா, மெக்ஸிகோ, நார்வே, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள உள்ளனர்.

நவீன தொழில்நுட்பங்கள் அதீத வளர்ச்சிகண்டு வரும் நிலையில், அவற்றை பயங்கரவாத குழுக்கள் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பது தொடர்பாகக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக அதிகாரபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு நவீன தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும் விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐநாவுக்கான இந்தியத்தூதர் ருசிரா கம்போஜ், சிறப்பு கூட்டத்துக்குத் தலைமையேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத எதிர்ப்புக் குழு நடத்தும் சிறப்புக் கூட்டம் பெரும்பாலும் அமெரிக்காவின் நியூயார்க்கிலேயே நடைபெறும். ஆனால், நடப்பாண்டில் அக்கூட்டம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. அமெரிக்காவுக்கு வெளியே சிறப்புக் கூட்டம் நடைபெறுவது இது 7–ஆவது முறையாகும்.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பைக் கடந்த ஆண்டு ஆகஸ்டில் இந்தியா ஏற்றிருந்தது. நடப்பாண்டு டிசம்பரிலும் அப்பொறுப்பை இந்தியா மீண்டும் ஏற்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

2. குரங்கு அம்மை தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள்

நாட்டில் குரங்கு அம்மை பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், இந்நோய் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது? என்ற வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய பட்டியலை நடுவண் சுகாதார அமைச்சகம் வெளியிட்டது.

குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்ட நபருடன் அடிக்கடி அல்லது நீண்ட தொடர்பில் இருந்தால் யாருக்கும் வேண்டுமானாலும் இந்நோய் தொற்றக்கூடும்; நோயாளியின் சுவாச துளிகள், கொப்பளங்களில் இருந்து வடியும் நீர் என நேரடியாகவோ அல்லது அவர்களது துணிகள்மூலம் மறைமுகமாகவோ இந்நோய் பரவும் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

செய்ய வேண்டியவை என்ன?

குரங்கு அம்மை பரவாமல் தடுக்க, பாதிக்கப்பட்ட நபரை மற்றவர்களிடமிருந்து முதலில் தனிமைப்படுத்த வேண்டும். சுத்திகரிப்பான் அல்லது சோப்புகள்மூலம் கைகளை கழுவுவதுடன், நோயாளிக்கு அருகில் செல்லும்போது முகக் கவசமும் கையுறையும் அணிவது அவசியம். கிருமிக்கொல்லிகளை பயன்படுத்தி சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்த வேண்டும்.

செய்யக்கூடாதவை என்ன?

குரங்கு அம்மை நோயாளிகளின் உடைகள், படுக்கை விரிப்புகள், துண்டுகள் உள்ளிட்டவற்றை வேறு யாருடனும் பகிரக்கூடாது. நோயாளிகளின் துணிகளை நோய் பாதிப்பு இல்லாத நபர்களின் துணிகளுடன் சேர்த்து துவைக்கக் கூடாது. குரங்கம்மை அறிகுறிகள் இருப்பதாக தோன்றினால், பொது நிகழ்ச்சிகளுக்கு செல்வதை தவிர்க்கவேண்டும். குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அறிகுறிகள் உள்ளவர்களை புறக்கணித்து, களங்கப்படுத்தக் கூடாது.

21 நாள்கள் கண்காணிப்பு:

குரங்கம்மையால் பாதிக்கப்பட்ட அல்லது நோய் பாதிப்பு சாத்தியமுள்ள நபருடன் நெருங்கிய, உடல்ரீதியான தொடர்பிலிருந்தவர்கள் 21 நாள்களுக்கு கண்காணிக்கப்படவேண்டும். அவர்களுக்கு அறிகுறிகள் இல்லாவிட்டாலும் இரத்த தானமோ, செல், திசு, உடல் உறுப்பு, உயிரணு தானமோ செய்யக்கூடாது.

அறிகுறிகள் என்னென்ன?

காய்ச்சல், அரிப்பு, நிணநீர் முடிச்சுகள் வீக்கம்போன்ற அறிகுறிகளுடன் குரங்கு அம்மை பாதிப்பு தொடங்கும். காய்ச்சல் ஆரம்பித்ததில் இருந்து 3 நாள்களுக்குள் வலியுடன் கூடிய கொப்பளங்கள் ஏற்படும். 2 முதல் 4 வாரங்களுக்கு பின் குணமாகும் காலம் தொடங்கும். 4 வாரங்களுக்குள் தானாகவோ சரியாகும் நோயாக இது பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில், குரங்கு அம்மையால் ஏற்படும் இறப்பு விகிதம் 3 முதல் 6 சதவீதமாக உள்ளது என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கரோனாவைத் தொடர்ந்து, உலக நாடுகளை அச்சுறுத்தும் நோயாக குரங்கு அம்மை மாறியுள்ளது. விலங்குகளிடம் இருந்து மனிதனுக்கு பரவிய குரங்கு அம்மை பாதிப்பை, சர்வதேச சுகாதார நெருக்கடியாக உலக சுகாதார நிறுவனம் அண்மையில் அறிவித்தது.

---

1. 'யுத் அபியாஸ்' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் இராணுவப்பயிற்சியாகும்?

அ. ஜப்பான்

ஆ. அமெரிக்கா ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. பிரான்ஸ்

✓ இந்தியாவும் அமெரிக்காவும் வரும் அக்டோபர் மாதத்தில் உத்தரகாண்டின் ஔலியில், 'யுத் அபியாஸ்' என்ற பெயரில் 15 நாட்கள் நீடிக்கும் பிரம்மாண்ட இராணுவப் பயிற்சியை நடத்தும். அப்பயிற்சியின் 18ஆவது பதிப்பு பல சிக்கலான பயிற்சிகளை உள்ளடக்கியதாக திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின் கடைசிப்பதிப்பு கடந்த 2021 அக்டோபரில் அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்றது. கடந்த 2016 ஜூனில், அமெரிக்கா இந்தியாவை, 'முதன்மை பாதுகாப்பு பங்காளர்' என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

2. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட லேசர்-வழிகாட்டப்பட்ட ATGM-களை சோதனை செய்த அமைப்பு எது?

அ. HAL

ஆ. DRDO ☑

இ. BEL

ஈ. BHEL

✓ இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பும் (DRDO) இந்திய ராணுவமும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட லேசர்-வழிகாட்டப்பட்ட பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுகணைகளை (ATGM) சமீபத்தில் சோதனை செய்தன. இது மகாராஷ்டிராவில் உள்ள கவசப்படை மையம் மற்றும் பள்ளியின் ஆதரவுடன் KK தளத்தில் உள்ள முதன்மை போர் பீரங்கியான அர்ஜுனிலிருந்து சோதனை செய்யப்பட்டது.

3. 75 கிராமப்புறப் பள்ளிகளைச் சேர்ந்த 750 மாணவிகளால் உருவாக்கப்பட்ட, இஸ்ரோவால் ஏவப்படவுள்ள செயற்கைக்கோளின் பெயர் என்ன?

அ. பாரத்சாட்

ஆ. ஆசாதிசாட் ☑

இ. கிராம்சாட்

ஈ. கம்யூனிசாட்

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து சிறு செயற்கைக்கோள் ஏவுகலத்தை விண்ணில் செலுத்தவுள்ளது. இது இஸ்ரோவால் தயாரிக்கப்பட்ட சிறு மற்றும் எடைகுறைந்த வணிக ஏவுகலம் ஆகும்.

✓ 75ஆவது விடுதலை ஆண்டைக்குறிக்கும் வகையில் விண்வெளியில் பறக்கவிடப்படும் இந்திய நாட்டின் மூவர்ணக் கொடியையும் அந்த ஏவுகலம் சுமந்துசெல்லும். இந்த ஏவுகலம் EOS-02 என்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் மற்றும் கியூப்சாட் ஆசாதிசாட் ஆகியவற்றைக் கொண்டுசெல்லும்; இது, இந்தியாவின் கிராமப்புறங்களில் உள்ள 75 பள்ளிகளைச் சேர்ந்த 750 பள்ளி மாணவிகளால் உருவாக்கப்பட்டது. இந்தச் செயற்கைக்கோளில் தேசிய கீதத்துடன் ஒரு சிறப்புப் பாடலும் இடம்பெற்றிருக்கும்.

4. 2022 – ஆகஸ்ட் பணவியல் கொள்கைக்குழு கூட்டத்திற்குப் பிறகு ரெப்போ விகிதம் என்ன?

அ. 5.0 % ஆ. 5.2 %

இ. 5.4 % ☑ ஈ. 5.75 %

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையிலான பணவியல் கொள்கைக்குழு ரெப்போ விகிதத்தை 50 அடிப்படை புள்ளிகள் உயர்த்தி 5.40 சதவீதமாக உயர்த்தியது. தொடர்ந்து அதிகரித்து வரும் பண வீக்கத்தை கட்டுப்படுத்த இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இம்முடிவிற்குப்பிறகு, ரெப்போ விகிதம் தொற்றுநோய்க்கு முந்தைய காலகட்டத்தில் இருந்த 5.15 சதவீதத்திற்கு மேல் உள்ளது. மூன்று தொடர்ச்சியான பணவியல் கொள்கை கூட்டங்களில் ரெப்போவின் ஒட்டுமொத்த உயர்வு 140 அடிப்படை புள்ளிகளுக்குச் சென்றுள்ளது.

5. தைவானைச் சுற்றி மிகப்பெரிய இராணுவப் பயிற்சிகளை நடத்திய நாடு எது?

அ. சீனா ☑

ஆ. இரஷ்யா

இ. இந்தியா

ஈ. கஜகஸ்தான்

- தைவானைச்சுற்றி சீனா மிகப்பெரிய ராணுவப்பயிற்சியைத் தொடங்கியுள்ளது. அப்போது சீனாவால் எறிகணைகள் ஏவப்பட்டது மற்றும் போர் விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்கள் நிலைநிறுத்தப்பட்டன. அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் தைவான் பயணத்திற்குப் பதிலடியாக இது நடத்தப்பட்டது. தைவானுக்குச் சென்ற முதல் அமெரிக்க உயரதிகாரி பெலோசி ஆவார். இந்தப் பயிற்சிகள் அதன் விமான தகவல் பகுதி வழியாகச் செல்லும் 18 பன்னாட்டு வழித்தடங்களை சீர்குலைக்கும் என்று தைவான் அமைச்சரவை கூறியது.

6. IUCN ஆனது எவ்வகை பட்டாம்பூச்சிகளை, 'அழிந்துவரும் உயிரினங்கள் பட்டியலில்' சேர்த்துள்ளது?

அ. அரச வண்ணத்துப்பூச்சி ☑

ஆ. மயில் வண்ணத்துப்பூச்சி

இ. சிவப்பு அதிகாரி வண்ணத்துப்பூச்சி

ஈ. நீலன்கள் வண்ணத்துப்பூச்சி

- நாடோடி இனமான 'அரச வண்ணத்துப்பூச்சி'யை, இயற்கைப் பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியம் 'அழிந்துவரும் உயிரினங்கள்' பிரிவில் பட்டியலிட்டுள்ளது. IUCN ஆனது அரச வண்ணத்துப்பூச்சியின் கிளையினத்தை (*Danaus plexippus*) அழிந்துவரும் நிலையில் சேர்த்துள்ளது; அது அக்கிளையினங்கள் காடுகளில் அழிந்துபோகும் அபாயத்தை எதிர்கொள்வதைக் குறிக்கிறது. வாழ்விட இழப்பு, பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி பயன்பாடு மற்றும் கால நிலைமாற்றம் ஆகியவை அவ்வண்ணத்துப்பூச்சியின் அழிவுக்கு முதன்மை அச்சுறுத்தல்களாக உள்ளன.

7. இந்தியாவில் வருமான வரி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.24 ☑

ஆ. ஆகஸ்ட்.24

இ. செப்டம்பர்.24

ஈ. ஜனவரி.24

- நாட்டில் வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவுகூரும் வகையில், வருமான வரித்துறை ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.24ஆம் தேதியை வருமான வரி நாளை அனுசரிக்கிறது. 1857ஆம் ஆண்டு விடுதலைப் போரின் போது ஆங்கிலேய ஆட்சியால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட, 1860ஆம் ஆண்டு இதே நாளில், சர் ஜேம்ஸ் வில்சன் இந்தியாவில் முதன்முறையாக வருமான வரியை அறிமுகப்படுத்தினார். இந்தியாவில் வருமான வரி விதித்து 150 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையில் கடந்த 2010ஆம் ஆண்டு முதன்முறையாக வருமான வரி நாள் கொண்டாடப்பட்டது.

8. 'முதலாவது கேலோ இந்திய பெண்கள் வாள்சண்டை லீக்' நடைபெறும் இடம் எது?

அ. சென்னை **ஆ. புது தில்லி ☑**

இ. குவாலியர் ஈ. பாட்னா

✓ முதலாவது கேலோ இந்திய பெண்கள் வாள்சண்டை லீக் சமீபத்தில் புது தில்லியின் தல்கடோரா உள்விளையாட்டு அரங்கில் தொடங்கியது. பெண்களுக்கான தேசிய அளவிலான வாள்வீச்சுப் போட்டி இதுவே முதல்முறையாகும். 20 மாநிலங்களின் 300–க்கும் மேற்பட்ட பெண்கள் இந்நிகழ்வில் பங்கேற்கின்றனர். டோக்கியோ ஒலிம்பியன் மற்றும் இலக்கு ஒலிம்பிக் போடியம் திட்டம் (TOPS) தடகள வீராங்கனை பவானி தேவியும் இதில் பங்கேற்கிறார்.

9. அண்மையில், பிரத்யேக, 'சுற்றுலாக் கொள்கை – 2021'ஐ அறிமுகப்படுத்திய இந்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. ஜார்கண்ட் ☑

இ. சிக்கிம்

ஈ. அஸ்ஸாம்

✓ ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், 'ஜார்கண்ட் சுற்றுலாக்கொள்கை–2021'ஐ வெளியிட்டார். இக்கொள்கையானது மாநிலத்தின் சுற்றுலாத்துறையை புத்துயிர் மற்றும் மறுசீரமைப்பு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 'ஜார்கண்ட் சுற்றுலாக்கொள்கை 2021' ஆனது ஜார்க்கண்ட் அரசாங்கத்துடன் கூட்டாக இணைந்து FICCIஆல் ஏற்பாடு செய்யப்பட்டது. இது, 2025ஆம் ஆண்டுக்குள் மிகவும் விரும்பப்படும் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக ஜார்கண்ட் மாநிலத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

10. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் இந்தியக் குழுவை உற்சாகப்படுத்த, 'கிரியேட் ஃபார் இந்தியா' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ. இந்திய விளையாட்டு ஆணையம் ☑

ஆ. தேசிய விளையாட்டு பல்கலைக்கழகம்

இ. இந்திய இராணுவ விளையாட்டு நிறுவனம்

ஈ. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்

SAI
SPORTS AUTHORITY OF INDIA

✓ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் இந்தியக் குழுவை உற்சாகப்படுத்த, 'இந்தியாவுக்காக உருவாக்கு' என்ற பிரச்சாரத்துடன் இந்திய விளையாட்டு ஆணையம் புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது. பர்மிங்காமில் நடைபெறும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் 16 பிரிவுகளில் 215 பேர்கொண்ட இந்திய தடகளப் பிரிவு பங்கேற்க உள்ளது. அந்தப் பங்கேற்பாளர்கள் #create4India மற்றும் #cheer4India என்ற ஹேஷ்டேக்குகளைப் பயன்படுத்தி உள்ளீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வட்டி விகிதத்தை 0.5% உயர்த்தியது ஆர்பிஐ

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தை (ரெப்போ விகிதம்) இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 0.5% உயர்த்தியுள்ளது. அதன்காரணமாக, வீட்டுக்கடன், வாகனக்கடன், மாதாந்திர தவணைத் தொகை உள்ளிட்டவற்றுக்கான வட்டியை வங்கிகள் உயர்த்தவுள்ளன.

நாட்டில் பணவீக்கம் 2 முதல் 6 சதவீதத்துக்குள் இருக்க வேண்டுமென RBI இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால், கடந்த ஜனவரி மாதம் முதலே பணவீக்கம் 6 சதவீதத்துக்கு அதிகமாக உள்ளது. அதைக் கட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் ரெப்போ வட்டி விகிதம் ஏற்கெனவே கடந்த மே மாதம் முதல் 0.9 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

1.4 சதவீதம் உயர்வு:

வட்டி விகிதத்தை உயர்த்துவதற்கு நிதிக் கொள்கை குழுவின் ஆறு உறுப்பினர்களும் ஒருமனதாக ஆதரவு தெரிவித்தனர். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடந்த மே மாதத்தில் இருந்து ரெப்போ வட்டி விகிதம் 1.4 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

பணவீக்கம்:

பணவீக்கமானது நடப்பு 2022–23–ஆம் நிதியாண்டில் 6.7 சதவீதமாக இருக்கும் என RBI கணித்துள்ளது. நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் பணவீக்கம் 7.1 சதவீதமாகவும், மூன்றாவது காலாண்டில் 6.4 சதவீதமாகவும் இருக்கும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சி:

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) நடப்பு நிதியாண்டில் 7.2 சதவீதமாக இருக்கும் என்று RBI தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் GDP வளர்ச்சி 16.2 சதவீதமாகவும், இரண்டாவது காலாண்டில் 6.2 சதவீதமாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. RBI நிதிக் கொள்கை குழுவின் அடுத்த கூட்டம் செப்.28 முதல் 30–ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

2. குடியரசுத்துணைத்தலைவராக ஜகதீப் தன்கர் தேர்வு

குடியரசுத்துணைத்தலைவர் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் ஜகதீப் தன்கர் (71) வெற்றி பெற்றார். அவர் நாட்டின் 14–ஆவது குடியரசு துணைத்தலைவராக ஆக.11 அன்று பதவியேற்பார்.

இந்தத்தேர்தலில் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் மொத்தமுள்ள 780 எம்.பிக்களில் 725 எம்.பிக்கள் வாக்களித்தனர். இதைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மாலை 6 மணிக்கு தொடங்கியது. மக்களவையில் பாஜகவுக்கு பெரும்பான்மை உள்ள நிலையில், மாநிலங்களவையில் அக்கட்சி சார்பில் 91 எம்.பிக்கள் உள்ளனர். இதன் காரணமாக ஏற்கெனவே எதிர்பார்த்தபடி, தேர்தலில் ஜகதீப் தன்கர் வெற்றி பெற்றார். தேர்தலில் வாக்களித்த 725 எம்.பிக்களில் 528 பேர் (74.36%) ஜகதீப் தன்கருக்கும், 182 பேர் மார்கரெட் ஆல்வாவுக்கும் வாக்களித்தனர். 15 எம்.பிக்களின் வாக்குகள் செல்லாது என அறிவிக்கப்பட்டது.

கடந்த 1997–ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல்களில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் ஜகதீப் தன்கர்தான். மேலும், பைரோன் சிங் ஷெகாவத்துக்குப்பிறகு ராஜஸ்தானில் இருந்து குடியரசுத்துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது நபர் என்ற பெருமையையும் ஜகதீப் தன்கர் பெற்றார்.

---

3. தகைசால் தமிழர் விருது: ஆர் நல்லகண்ணு தேர்வு!

தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஆர் நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்ளைப் பெருமைப்படுத்தும் வகையில், 2021ஆம் ஆண்டு முதல் "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருது தமிழ்நாடு அரசு வழங்கிவருகிறது.

இளம் வயதிலேயே பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு, விடுதலைப் போராட்ட வீரராகத் தன் இளம் வயதைச் சிறைச் சாலையிலும், தலைமறைவு வாழ்க்கையிலும் கழித்தவரும் ஏழை எளிய மக்களுக்காகக் குரல் கொடுத்து, சமூக நல்லிணக்கத்தினையும், சுற்றுச்சூழலையும் காத்திடத் தொடர்ந்து பாடுபட்டு வருவதுடன், சிறந்த தன்னலமற்ற

அரசியல்வாதியாகவும் பணியாற்றி, தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பை அளித்த தமிழருமான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர் நல்லகண்ணுவுக்கு 2022ஆம் ஆண்டிற்கான "தகைசால் தமிழர் விருது" வழங்க தேர்வுக் குழுவினரால் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

"தகைசால் தமிழர்" விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர் நல்லகண்ணுவுக்கு, ₹10 இலட்சத்துக்கான காசோலையும், பாராட்டுச்சான்றிதழும், வரும் சுதந்திர நாள் விழாவில் முதல்வர் மு க ஸ்டாலின் வழங்குவார். 2021ஆம் ஆண்டுக்கான "தகைசால் தமிழர்" விருது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரான N சங்கரையாவுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

4. புவி கண்காணிப்பு செயற்கைக்கோளுடன் இன்று விண்ணில் பாய்கிறது எஸ்எஸ்எல்வி ராக்கெட்

புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோளான இஓஎஸ்–02 உடன் எஸ்எஸ்எல்வி ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (ஆக.7) விண்ணில் ஏவப்படுகிறது. சிறிய ரக செயற்கைக்கோளுக்காக வடிவமைக்கப்பட்ட, எடை குறைந்த முதலாவது ராக்கெட் திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்தொடர்பு, தொலையுணர்வு மற்றும் வழிகாட்டி செயற்கைக்கோள் திட்டங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) செயல்படுத்தி வருகிறது. அதற்காக, பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி வகை ராக்கெட்டுகள் மூலம் செயற்கைக்கோள்கள் விண்ணில் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன. இதில் பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 1,750 கிலோ வரையும், ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 4,000 கிலோ வரை எடைகொண்ட செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த முடியும்.

இந்த நிலையில், சர்வதேச விண்வெளித் துறையில் சிறிய செயற்கைக்கோள்களை ஏவுவதற்கான தேவை அதிகரித்துள்ளது. இதை கருத்தில்கொண்டு 500 கிலோ வரையிலான எடை குறைந்த செயற்கைக்கோள்களை புவியின் தாழ்வட்ட சுற்றுப்பாதைக்கு கொண்டுசெல்ல சிறியரக எஸ்எஸ்எல்வி ராக்கெட்டுகளை இஸ்ரோ புதிதாக வடிவமைத்துள்ளது. இதன் எடை அதிகபட்சம் 120 டன்.

இம்முறை அந்த வகை ராக்கெட், இஓஎஸ்–02 (மைக்ரோசாட்–2ஏ) செயற்கைக்கோளுடன் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 9.18 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது.

அதற்கான 5 மணிநேர கவுன்ட்டவுன் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு தொடங்கியது. இஓஎஸ்–02 செயற்கைக்கோளானது 145 கிலோ எடைகொண்டது. இது கடலோர நிலப்பயன்பாடு, ஒழுங்குமுறை, நகர்ப்புற, கிராமப்புற மேலாண்மை, பயன்பாடற்ற நிலங்களுக்கான எல்லை வரைபடம் தயாரிப்பு உள்ளிட்ட பணிகளுக்கு உதவியாக இருக்கும். இதில் உள்ள 2 நவீன கேமராக்கள் மூலம் 6 மீ அளவுக்கு துல்லியமாகப் படம்பிடிக்க முடியும்.

கல்விசார் செயற்கைக்கோள்: இதனுடன் ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின்மூலம் 'ஆசாதிசாட்' (8 கிலோ) எனும் கல்விசார் செயற்கைக்கோளும் விண்ணில் செலுத்தப்படுகிறது. இச்செயற்கைக்கோள் நாடு முழுதும் கிராமங்களில் உள்ள 75 பள்ளிகளைச் சேர்ந்த மாணவிகள் கூட்டு இணைப்பில் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

5. வேளாண் ஏற்றுமதி 31% அதிகரிப்பு: மத்திய அரசு

இந்தியாவின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்களின் ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் 31 சதவீதம் (7408 மில்லியன் டாலர்) அதிகரித்துள்ளது என்று மத்திய அரசு வணிக நுண்ணறிவு, புள்ளியியல் தலைமை இயக்ககம் வெளியிட்ட தரவுகளின்படி, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் ஒட்டுமொத்த ஏற்றுமதி ஏப்ரல்–ஜூன் 2022இல் 7408 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலப்பகுதியில் இது 5663 மில்லியன் டாலர்களாக இருந்தது. ஏப்ரல்–ஜூன் 2022–23–க்கான ஏற்றுமதி இலக்கு 5890 மில்லியன் அமெரிக்க டாலர்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் எடுத்த முயற்சிகள் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மொத்த ஏற்றுமதி இலக்கில் 31 சதவீதத்தை எட்டுவதற்கு உதவியுள்ளன.

வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் தலைமை இயக்குநரகதின் தரவுகளின்படி, புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி 4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. அதேசமயம் பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதியும் 59.71 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் இறைச்சி, பால் மற்றும் கோழிப் பொருள்களின் ஏற்றுமதி 9.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. பிற தானியங்களின் ஏற்றுமதி 29 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. பிற தானியங்களின் ஏற்றுமதி ஏப்ரல்–ஜூன் 2021–இல் 237 மில்லியன் டாலரில் இருந்து ஏப்ரல்–ஜூன் 2022–இல் 306 மில்லியன் டாலராக அதிகரித்ததாக புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. 150 பாரம்பரிய இடங்களில் தேசியக் கொடி தொல்லியல் துறை ஏற்பாடு

சுதந்திர தின விழாவையொட்டி ஆக.15–ஆம் தேதி 150 பாரம்பரிய சின்னங்கள், இடங்களில் தேசியக் கொடியேற்ற இந்திய தொல்லியல் துறை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து தொல்லியல் துறை அதிகாரிகள் கூறியதாவது:

சுதந்திர தின அம்ருத பெருவிழாவை முன்னிட்டு இந்திய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 150 பாரம்பரிய சின்னங்கள், இடங்களில் தேசியக்கொடி ஏற்றப்படும். பதேபூர் சிக்ரி, போர்பந்தரில் உள்ள மகாத்மா காந்தி பிறந்த இடம், லக்னௌவில் உள்ள பிரிட்டிஷார் காலத்திய குடியிருப்பு, பைஸாபாதின் குலாப்பரி, வேலூர் கோட்டை, வாரங்கல் கோட்டை, சித்ரதுர்கா, அஜந்தா எல்லோரா குகைகள் உள்ளிட்ட இடங்களில் தேசியக்கொடி ஏற்றுவதற்கான ஏற்பாடுகளை தொல்லியல் துறை மேற்கொண்டு வருகிறது. இந்த இடங்களை மூவண்ணத்தில் ஒளிரச்செய்யவும் நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் 3,693 பாரம்பரிய சின்னங்கள், இடங்கள் உள்ளன. சுதந்திர தின அம்ருத பெருவிழாவையொட்டி இந்த இடங்களில் ஆக.5 முதல் 15–ஆம் தேதி வரை பார்வையாளர்கள் இலவசமாகப் பார்வையிட மத்திய கலாசார அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

---

1. NITI ஆயோக்கின் நிர்வாகக்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர் யார்?

அ. NITI ஆயோக் CEO

ஆ. இந்தியக்குடியரசுத்தலைவர்

இ. இந்தியப்பிரதமர் ☑

ஈ. நடுவண் நிதியமைச்சர்

✓ புது தில்லியில் NITI ஆயோக்கின் 7ஆவது நிர்வாகக்குழு கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றது. பிரதமர் NITI ஆயோக்கின் அதிகாரபூர்வ தலைவராக உள்ளார். இச்சந்திப்பு மத்திய மற்றும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாற்றுப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்புவகைகள் மற்றும் வேளாண் சமூகங்களின் தன்னிறைவை எட்டுதல், தேசிய கல்விக் கொள்கை – பள்ளிக்கல்வியின் அமலாக்கம், தேசிய கல்விக் கொள்கை – உயர்கல்வியின் அமலாக்கம், நகர்ப்புற நிர்வாகம் உள்ளிட்டவை இந்தக் கூட்டத்தின் விவாதப்பொருளில் இடம்பெற்றது.

2. டெலாய்ட் இந்தியாவை அதன் ஆலோசகராக நியமித்த மாநிலம் எது?

அ. உத்தர பிரதேசம் ☑

ஆ. கர்நாடகா

இ. ஒடிஸா

ஈ. தெலுங்கானா

✓ உத்தர பிரதேச மாநில அரசானது டெலாய்ட் இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. உத்தர பிரதேச மாநிலத்தின் பொருளாதாரத்தை $1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்துவதற்கான இலக்கை அடைவதற்கான ஆலோசகராக டெலாய்ட் இந்தியாவை அது நியமித்தது. உயரதிகாரம்கொண்ட குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. Deloitte India நிறுவனம் துறை வாரியான ஆய்வுக்கு பிறகு எதிர்கால செயல்திட்டத்தை முன்வைக்கவுள்ளது.

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'டோனி போலோ வானூர்தி நிலையம்' அமைந்துள்ள மாநிலம் எது?

அ. அஸ்ஸாம்

ஆ. அருணாச்சல பிரதேசம் ☑

இ. சிக்கிம்

ஈ. மேற்கு வங்காளம்

✓ அருணாச்சல பிரதேச மாநில அரசு இட்டாநகரில் கட்டப்பட்டு வரும் மூன்றாவது வானூர்தி நிலையத்திற்கு, 'டோனி போலோ வானூர்தி நிலையம்' என்று பெயர்சூட்டியுள்ளது. இது தலைநகரில் உள்ள ஒரே விமான நிலையமாகவும், பாசிகாட் மற்றும் தேசு விமான நிலையங்களுக்குப் பிறகு அருணாச்சல பிரதேச மாநிலத்தில் அமையும் மூன்றாவது விமான நிலையமாகவும் உள்ளது. அம்மாநிலத்தின் பழங்குடிகள் மொழியில், 'டோனி' என்றால் 'ஞாயிறு' என்றும் 'போலோ' என்றால் 'திங்கள்' என்றும் பொருளாகும்.

4. அனைத்து அதிகாரப்பூர்வ விருதுகளுக்கான பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்ளும் இணையதளத்தின் பெயர் என்ன?

அ. பாரத் இணையதளம்

ஆ. இராஷ்ட்ரிய இணையதளம் ☑

இ. ஆத்மநிர்பார் இணையதளம்

ஈ. இந்தியா விருதுகள் இணையதளம்

✓ இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள்/துறைகள்/முகமைகளின் அனைத்து விருதுகளையும் ஒரே டிஜிட்டல் தளத்தின்கீழ் கொண்டுவருவதற்காக, இந்திய அரசாங்கத்தால் பொதுவான 'இராஷ்ட்ரிய புரஸ்காரம்' என்னும்

இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட பல்வேறு விருதுகளுக்கு தனிநபர்கள் அல்லது நிறுவனங்களைப் பரிந்துரைக்க இந்தத் தளம் உதவும். அண்மையில் அரசாங்கம், 'வயோஸ்ரேஷ்ட சம்மான்' மற்றும் 'பத்ம' விருதுகளுக்கான பரிந்துரைகளை வரவேற்றது.

5. இந்தியாவின் 14ஆவது குடியரசுத்துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

அ. ஜகதீப் தங்கர் ☑

ஆ. மார்கரெட் அல்வா

இ. கல்யாண் சிங்

ஈ. சிவராஜ் பாட்டீல்

✓ 2022 இந்தியத்துணைக்குடியரசுத்தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் மார்கரெட் அல்வாவை தோற்கடித்து ஜக்தீப் தங்கர் வெற்றிபெற்றார். இந்தியாவின் 14ஆவது இந்தியத்துணைக்குடியரசுத்தலைவராக இருக்கும் தங்கர், தற்போதைய இந்தியத்துணைக்குடியரசுத்தலைவராக இருக்கும் M வெங்கையாவைத் தொடர்ந்து இந்தப் பதவிக்கு வந்துள்ளார். ஜனதா தள அரசில் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணையமைச்சராகப் பணியாற்றியுள்ள ஜகதீப் தங்கர், 2019 ஜூலையில் மேற்கு வங்க ஆளுநரானார்.

6. இந்தியாவில், 'கார்கில் வெற்றி நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.26 ☑

ஆ. ஜனவரி.26

இ. அக்டோபர்.26

ஈ. மார்ச்.26

✓ பாகிஸ்தானுக்கு எதிரான கார்கில் போரின் வெற்றியின் 23ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், இந்தியா ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.26 அன்று 'கார்கில் வெற்றி நாளைக்' கொண்டாடுகிறது. 1998ஆம் ஆண்டு எல்லைக்கட்டுப்பாட்டுக்கோடு (LoC) வழியாக இந்திய எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தானியர்களுக்கு எதிராக கார்கில் போர் நடைபெற்றது. 1999 ஜூலை.26 அன்று, பாகிஸ்தான் படைகள் இந்தியப் பகுதியிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயத்தை இந்திய இராணுவம் ஏற்படுத்தியது.

7. 'உலக நீரில் மூழ்கும் நிகழ்வுகளைத் தடுத்தல் நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.25 ☑

ஆ. ஆகஸ்ட்.25

இ. செப்டம்பர்.25

ஈ. ஜனவரி.25

✓ 'உலக நீரில் மூழ்கும் நிகழ்வுகளைத் தடுத்தல் நாளானது' ஆண்டுதோறும் ஜூலை.25 அன்று அனுசரிக்கப்படுகிறது. ஐநா பொதுச்சபை இந்நாளை 2021 ஏப்ரலில் அங்கீகரித்தது. ஐநாவின் கூற்றுப்படி, ஆண்டுதோறும் சுமார் 236,000 பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர்; அது உலகெங்கிலும் ஒரு பெரிய பொதுச் சுகாதாரப்பிரச்சனையாக உள்ளது. உலகெங்கிலும் உள்ள 1 முதல் 24 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் இறப்புக்கான முக்கிய காரணங்களில் நீரில் மூழ்குவதும் ஒன்றென உள்ளது.

8. 'பால ரக்ஷா' என்ற செயலியை அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?

அ. ஆயுஷ் அமைச்சகம் ☑ ஆ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ. சட்டம் & நீதி அமைச்சகம் ஈ. சுகாதார & குடும்பநல அமைச்சகம்

MINISTRY OF AYUSH

✓ அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் (AIIA) சிறார்களுக்கான தடுப்பூசி மையத்தை நடுவண் ஆயுஷ் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் திறந்து வைத்தார். ஆயுர்வேதத்தின்மூலம் சிறார்களுக்கான தடுப்பு நலவாழ்வு குறித்து பெற்றோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, 'பால ரக்ஷா' செயலியையும் அமைச்சர் அறிமுகம் செய்து வைத்தார். சிறார்களின் நலம் மற்றும் நோயெதிர்ப்பு ஆற்றலில் ஏற்படும் தாக்கம் குறித்து பெற்றோர்களிடமிருந்து கருத்துக்களை இந்தச் செயலி சேகரிக்கும்.

9. 'வியத்தகு இந்தியா கார்கில் மராத்தான் மற்றும் சுற்றுலா விழா, 2022'ஐ நடத்திய நகரம் எது?

அ. சிம்லா

ஆ. மணாலி

இ. கார்கில் ☑

ஈ. ஸ்ரீநகர்

✓ இரண்டு நாள் நடைபெறும், 'லடாக் சுற்றுலா விழா–2022' கார்கில் மாவட்டத்தில் சமீபத்தில் தொடங்கியது. கார்கில் மாவட்டத்தின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை உலகுக்கு எடுத்துரைக்கும் வகையில் பல கலாச்சார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும். இந்த நிகழ்ச்சியில், 'வியத்தகு இந்தியா கார்கில் மராத்தான் போட்டியும்' தொடங்கப்பட்டது. பாரம்பரிய உணவரங்குகள், குதிரை போலோ, வில்வித்தை உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுகளின் காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரும் செப்டம்பரில் ஜான்ஸ்கார் திருவிழா நடைபெறவுள்ளது.

10. தூய பால் மற்றும் பதப்படுத்தப்பட்ட பாலுக்கு விதிக்கப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரி (GST) % எவ்வளவு?

அ. 0% ☑

ஆ. 5%

இ. 12%

ஈ. 18%

✓ தூய பால் மற்றும் பதப்படுத்தப்பட்ட பாலுக்கு சரக்கு மற்றும் சேவைகள் வரியில் (GST) முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று அரசு அண்மையில் தெளிவுபடுத்தியுள்ளது. பெட்டியில் அடைக்கப்பட்டவை தவிர வேறு வடிவங்களில் விற்கப்படுகிற தயிர் மற்றும் மோர் உள்ளிட்ட பிற பால் பொருட்களுக்கும் GSTஇல் இருந்து விலக்கு அளிக்கப்படும். உயர்வெப்பநிலைகொண்டு பதப்படுத்தப்பட்டு, பாக்கெட்டில் அடைக்கப்பட்ட பால் பொருட்களுக்கு 5% GST பொருந்தும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சிஎஸ்ஐஆர் முதல் பெண் தலைமை இயக்குநராக தமிழகத்தின் கலைச்செல்வி நியமனம்!

இந்தியாவின் உயர்அறிவியல் தொழில் ஆராய்ச்சி ஆய்வு நிறுவனமான சிஎஸ்ஐஆர்–இன் முதல் பெண் தலைமை இயக்குநராக தமிழ்நாட்டைச் சேந்த கலைச்செல்வி நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள 38 ஆராய்ச்சி நிறுவனங்களுடன் செயல்படும் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கூட்டமைப்பை (சிஎஸ்ஐஆர்) வழிநடத்தும் முதல் பெண் தலைமை இயக்குநராக தமிழகத்தைச் சேர்ந்த மூத்த விஞ்ஞானி நல்லதம்பி கலைச்செல்வி நியமிக்கப்பட்டார். தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய நகரமான அம்பாசமுத்திரத்தில் அவர் தனது பள்ளிப்படிப்பை தமிழ்வழியில் பயின்றார்.

---

2. ஈரநிலங்கள் – இயற்கை சுத்திகரிப்பு நிலையங்கள்!

நிலவாழ் சூழல் மண்டலத்துக்கும், நீர்வாழ் சூழல் மண்டலத்துக்கும் இடையே அமைந்துள்ள ஈரநிலங்கள் இயற்கை சுத்திகரிப்பு நிலையங்களாகத் திகழ்கின்றன. இவை உலகின் பல்லுயிர்த் தன்மையைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உலகின் மொத்தப்பரப்பளவில் 6 சதவீதமே ஈரநிலங்கள் உள்ளன. 40% தாவர & விலங்கின உயிரினங்களுக்கு இவை இருப்பிடமாக உள்ளன. காடுகள் பெருமளவில் கார்பன்–டை–ஆக்சைடு வாயுவை உள்ளிழுத்து ஆக்சிஜனை வெளியேற்றி புவியின் நுரையீரலாகச் செயல்படுகின்றன.

அதேபோன்று, நீரில் விரவியுள்ள வண்டல் படிவுகள், திண்ம மாசுக்களை வடிகட்டி சுத்திகரிக்கும் ஈரநிலங்களைப் 'புவியின் சிறுநீரகங்கள்' (இயற்கை சுத்திகரிப்பு நிலையங்கள்) எனலாம். வெள்ளப்பெருக்கின்போது நுரைப்பஞ்சு போன்று செயல்பட்டு அதிகப்படியான வெள்ளநீரை உறிஞ்சி பாதிப்பைக் குறைப்பதில் ஈர நிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஐநா கருத்துப்படி, கடந்த 50 ஆண்டுகளில் 35% ஈரநிலங்கள் அழிந்துள்ளன. ஈரநிலங்களைப் பாதுகாக்க கடந்த 1971–ஆம் ஆண்டு ஈரானின் இராம்சர் நகரில் ஒப்பந்தம் கையொப்பமானது. இதில் 172 நாடுகள் இராம்சர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தில் கடந்த 1982–ஆம் ஆண்டு பிப்.1–ஆம் தேதி இந்தியா கையொப்பமிட்டது.

இராம்சர் ஒப்பந்தப் பட்டியலில் 9 தகுதிகளின் அடிப்படையில் சேர்க்கப்படும் ஈரநிலங்கள் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெறுகின்றன. உலகில் இதுவரை 2,455 ஈரநிலங்கள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் மொத்தப்பரப்பில் ஈரநிலங்களின் பரவல் 4 .6 சதவீதமாகும். மேற்கு வங்கத்தின் சுந்தரவனக்காடுகள் (பரப்பு 4,230 ச.கி.மீ.) இந்தியாவின் மிகப்பெரிய ஈரநிலப்பகுதியாகும். தமிழகத்திலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம், கரிக்கிலி பறவைகள் சரணாலயம், பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், மிஸோரத்தின் பாலா சதுப்பு நிலம், மத்திய பிரதேசத்தின் சக்யாசாகர் ஏரி ஆகிய 6 ஈரநிலங்கள் இராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக கடந்த ஜூலை 26–ஆம் தேதி அறிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, கடந்த ஆக.3–ஆம் தேதி கோவாவின் நந்தா ஏரி, கர்நாடகத்தின் ரங்கண்ணாதிட்டு பறவைகள் சரணாலயம், மத்திய பிரதேசத்தின் சிர்பூர் ஏரி, ஒடிஸா மகாநதியின் சட்கோசியா பள்ளத்தாக்கு மற்றும் தமிழகத்திலிருந்து 6 ஈரநிலங்களும் இப்பட்டியலில் இடம்பெற்றதன்மூலம் இந்தியாவில் இராம்சர் அங்கீகாரம் பெற்ற சதுப்புநிலங்களின் எண்ணிக்கை 64–ஆக உயர்ந்துள்ளது. தெற்கு ஆசிய நாடுகளில் அதிக அளவிலான இராம்சர் ஈர நிலங்களை இந்தியா பெற்றுள்ளது.

ஈர நிலங்களின் வகைகள்

இயற்கையாக உருவானவை

ஆறுகள்	சதுப்பு நிலங்கள்
ஏரிகள்	அலையாத்திக் காடுகள்
குளங்கள்	பவளப்பாறைகள்

மனிதரால் உருவாக்கப்பட்டவை

நீர்த்தேக்கங்கள்	உப்பளம்
விளைநிலங்கள்	மீன்வளர்ப்புக் குளங்கள்

மாநிலங்கள் ஈரநிலங்களின் பரப்பு (ஹெக்டேர்)

குஜராத் – 34,74,950

ஆந்திர பிரதேசம் – 14,47,133

உத்தர பிரதேசம் – 12,42,530

மேற்கு வங்கம் – 11,07,097

மகாராஷ்டிரம் – 10,14,522

தமிழ்நாடு – 9,02,534

சிறப்பம்சங்கள்

1. வடிகட்டியாக செயல்பட்டு நீரைச் சுத்திகரித்தல்

2. வட மற்றும் குறைவான மழைப்பொழிவு காலங்களில் நீர்ப்பாதுகாப்பை உறுதிசெய்தல்

3. நீர்சுழற்சி, கார்பன் சுழற்சி மற்றும் நைட்ரஜன் சுழற்சியைத் தொடர்ந்து இயங்கச்செய்தல்

4. பிற சூழல் மண்டலங்களைக் காட்டிலும் ஈரநில சூழல் மண்டலங்கள் கூடுதல் மதிப்புடையன

5. பல்லுயிர்த்தன்மையைப் பாதுகாத்தல்

6. உணவுச்சங்கிலித்தொடரை உறுதிசெய்தல்

7. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தணித்தல்

8. உள்ளூர் சமூகங்களுக்கு பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்பை வழங்குதல்

9. வலசை பறவைகளுக்கு தங்கும் விடுதிகளாகச் செயல்படுதல்

10. மண்ணரிப்பைத் தடுத்தல்

11. புயல் மற்றும் சுனாமி போன்ற கடலோரப் பேரிடர் பாதிப்பை தணிப்பதில் அலையாத்திக் காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள்...

1. கழிவுநீர் வெளியேற்றத்தால் ஏற்படும் மாசுபாடு

2. அயல் இனத்தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பரவல்

3. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்

4. கட்டட இடிபாட்டு கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டப்படுதல்

5. ஈரநிலங்களில் வாழும் உயிரினங்களை வேட்டையாடுதல்

6. நீர்நிலையின் மேற்பரப்பில் பாசி படர்தல்

7. அதிகளவிலான மீன்பிடிப்பு

8. கடல் நீரின் வெப்பநிலை அதிகரிப்பால் பவளப்பாறைகள் சிதைவடைதல்

தமிழ்நாட்டின் ஈரநிலங்கள் (இராம்சர் பட்டியலில்)

1. கோடியக்கரை பறவைகள் சரணாலயம், நாகப்பட்டினம் – 38,500 ஹெக்டேர்

2. பள்ளிக்கரணை சதுப்புநிலம், சென்னை – 1,248 ஹெக்டேர்

3. கரிக்கிலி பறவைகள் சரணாலயம், செங்கல்பட்டு – 58 ஹெக்டேர்

4. பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், கடலூர் – 1,479 ஹெக்டேர்

5. கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், திருநெல்வேலி – 72 ஹெக்டேர்

6. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், செங்கல்பட்டு – 40 ஹெக்டேர்

7. வேம்பனூர் ஈரநிலம், கன்னியாகுமரி – 20 ஹெக்டேர்

8. வெள்ளோடு பறவைகள் சரணாலயம், ஈரோடு – 77 ஹெக்டேர்

9. உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம், திருவாரூர் – 44 ஹெக்டேர்

10. மன்னார் வளைகுடா உயிர்க்கோளக்காப்பகம், இராமநாதபுரம் – 52,672 ஹெக்டேர்

1. ₹4.3 இலட்சம் கோடி மதிப்புள்ள 5G அலைக்கற்றைகளின் _____Ghz-க்கான இந்தியாவின் மிகப்பெரிய அலைக்கற்றை ஏலம் சமீபத்தில் தொடங்கியது.

அ. 1.2 ஜிகாஹெர்ட்ஸ்

ஆ. 12 ஜிகாஹெர்ட்ஸ்

இ. 7.2 ஜிகாஹெர்ட்ஸ்

ஈ. 72 ஜிகாஹெர்ட்ஸ் ☑

✓ ₹4.3 இலட்சம் கோடி மதிப்பிலான 72 ஜிகாஹெர்ட்ஸ் 5ஜி அலைக்கற்றைகளுக்கான இந்தியாவின் மிகப்பெரிய அலைக்கற்றை ஏலம் சமீபத்தில் தொடங்கியது. ரிலையன்ஸ் ஜியோ, பாரதி ஏர்டெல், வோடபோன் ஐடியா மற்றும் கௌதம் அதானியின் அதானி நிறுவனத்தின் ஒரு பிரிவு 5ஜி அலைக்கற்றை ஏலத்தில் பங்கேற்கின்றன. பல்வேறு தாழ் (600 மெகா ஹெர்ட்ஸ், 700 மெகா ஹெர்ட்ஸ், 800 மெகா ஹெர்ட்ஸ், 900 மெகா ஹெர்ட்ஸ், 1800 மெகா ஹெர்ட்ஸ், 2100 மெகா ஹெர்ட்ஸ், 2300 மெகா ஹெர்ட்ஸ்), இடை (3300 மெகா ஹெர்ட்ஸ்) மற்றும் உயர் (26 ஜிகாஹெர்ட்ஸ்) அலைவரிசைகளில் அலைக்கற்றை ஏலம் நடத்தப்படுகிறது.

2. உலகின் பரபரப்பான முதல் இருபது வானூர்தி நிலையங்களின் ACI பட்டியலில் 13ஆம் இடத்தில் உள்ள இந்திய வானூர்தி நிலையம் எது?

அ. இந்திரா காந்தி பன்னாட்டு வானூர்தி நிலையம், புது தில்லி ☑

ஆ. சென்னை பன்னாட்டு வானூர்தி நிலையம்

இ. சத்ரபதி சிவாஜி பன்னாட்டு வானூர்தி நிலையம், மும்பை

ஈ. கெம்பேகௌடா பன்னாட்டு வானூர்தி நிலையம், பெங்களூரு

✓ ஏர்போர்ட்ஸ் கவுன்சில் இன்டர்நேஷனல் (ACI) உலகின் பரபரப்பான முதல் 20 விமான நிலையங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. ஹார்ட்ஸ்ஃபீல்ட்-ஜாக்சன் அட்லாண்டா பன்னாட்டு வானூர்தி நிலையம் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. அவ்வானூர்தி நிலையம் அமெரிக்காவில் உள்ளது. பட்டியலின் முதல் ஏழு வானூர்தி நிலையங்களும் அமெரிக்காவில் அமைந்துள்ளதுதான். முதல் 20 வானூர்தி நிலையங்கள், 2021இல், உலகளாவிய போக்குவரத்தில் 19 சதவீதத்தினைக் கொண்டுள்ளன. புது தில்லியில் உள்ள இந்திரா காந்தி பன்னாட்டு வானூர்தி நிலையம் இந்தப் பட்டியலில் 13ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

3. இந்திய ராணுவத்திற்கு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விரைவாக எதிர்வினையாற்றும் போர் வாகனத்தை வழங்கிய நிறுவனம் எது?

அ. TATA அதிநவீன அமைப்பு ☑

ஆ. பாரத் மின்னணு நிறுவனம்

இ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட்

ஈ. DRDO

✓ TATA அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் ஆனது இந்திய இராணுவத்திற்கு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விரைவாக எதிர்வினையாற்றக் கூடிய போர் வாகனத்தை வழங்கியுள்ளது. இந்த ராணுவ வாகனங்கள் அனைத்து வானிலை மற்றும் அனைத்து நிலப்பரப்புகளிலும் தேசத்தின் போர்த்திறனை அதிகரிக்கும். மேலும் மேம்பட்ட பாதுகாப்பை இது வழங்கும். இவ்வாகனத்தின் அறிமுகம், இந்திய ராணுவத்தின் செயல்பாட்டுத் திறனை மென்மேலும் மேம்படுத்தும் என்று கூறப்படுகிறது.

4. 2022 – உலக கல்லீரல் அழற்சி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Leaving No one Behind.

ஆ. Hepatitis can't wait. ☑

இ. One dies every 30 seconds.

ஈ. Ramping up Healthcare.

✓ உலக கல்லீரல் அழற்சி நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.28 அன்று கல்லீரல் அழற்சியின் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. "Hepatitis can't wait – கல்லீரல் அழற்சி காத்திராது" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக கல்லீரல் அழற்சி நாளுக்கானக் கருப்பொருள் ஆகும். கல்லீரல் அழற்சி தொடர்பான நோயால் ஒவ்வொரு 30 வினாடிக்கும் ஒருவர் இறக்கிறார்.

✓ கல்லீரல் அழற்சி B தீநுண்மத்தை (HBV) கண்டுபிடித்து, அந்தத் தீநுண்மத்திற்கு நோய் கண்டறிதல் பரிசோதனை மற்றும் தடுப்பூசியை உருவாக்கிய நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர் டாக்டர் பாரூச் பிளம்பெர்க்கின் பிறந்தநாள் என்பதால் ஜூலை.28ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.

5. 2022 – உலக இளையோர் திறன்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

WYSD WORLD YOUTH SKILLS DAY 15 JULY 2022

அ. Transforming Youth Skills for the Future ☑

ஆ. Reimagining Youth Skills Post Pandemic

இ. Learning to Learn for Life and Work

ஈ. Skills Development to Improve Youth Employment

✓ 2014ஆம் ஆண்டு ஐநா பொதுச்சபையின் பேரறிவிப்பிற்குப் பிறகு ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.15ஆம் தேதி அன்று உலக இளையோர் திறன்கள் நாள் கொண்டாடப்படுகிறது. "Transforming Youth Skills for the Future" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக இளையோர் திறன்கள் நாளுக்கானக் கருப்பொருளாகும். வேலைவாய்ப்பு, நல்ல வேலை மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றுக்கான திறன்களுடன் இளையோர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

6. 'உலக இயற்கை பாதுகாப்பு நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.28 ☑

ஆ. ஜனவரி.28

இ. அக்டோபர்.28

ஈ. மார்ச்.28

✓ இயற்கை வளங்களின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.28ஆம் தேதியன்று உலக இயற்கை பாதுகாப்பு நாள் கொண்டாடப்படுகிறது. "Forests and Livelihoods: Sustaining People and Planet" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட உலக இயற்கை பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருளாகும். IUCN ஆனது மனித நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழலில் அவற்றின் தாக்கத்தைக் கண்காணித்து வருகிறது.

7. சதுப்புநில சுற்றுச்சூழலைக் காப்பதற்கான உலக நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.26 ☑ ஆ. ஆகஸ்ட்.26

இ. செப்டம்பர்.26 ஈ. ஜனவரி.26

✓ சதுப்புநில சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான உலக நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.26ஆம் தேதி அன்று கொண்டாடப்படுகிறது. தனித்துவம் மிகுந்த சுற்றுச்சூழலமைப்பான சதுப்புநிலங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உலக நாள், 2015ஆம் ஆண்டில் ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) பொது தீர்மானத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. இங்கிலாந்தின் லீசெஸ்டர் கிரிக்கெட் மைதானத்திற்கு எந்த இந்திய கிரிக்கெட் வீரரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?

அ. கபில் தேவ்

ஆ. சுனில் கவாஸ்கர் ☑

இ. சச்சின் டெண்டுல்கர்

ஈ. மகேந்திர சிங் தோனி

✓ இங்கிலாந்தின் லீசெஸ்டர் கிரிக்கெட் மைதானத்திற்கு இந்திய கிரிக்கெட் வீரரும், முன்னாள் கேப்டனுமான சுனில் கவாஸ்கரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. 10,000 ரன்களை எடுத்த முதல் கிரிக்கெட் வீரர் மற்றும் அதிக சதம் (34) அடித்தவர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார். 1983 உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியிலும் அவர் இடம்பிடித்திருந்தார். ஐக்கிய அமெரிக்காவின் (USA) கென்டக்கி பகுதியில் சுனில் கவாஸ்கர் பெயரில் மற்றொரு மைதானம் அமைந்துள்ளது.

9. 'ஹிம் டிரோன்–ஏ–தோன்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய இந்திய ஆயுதப்படை எது?

அ. இந்திய வான்படை

ஆ. இந்திய கடற்படை

இ. இந்திய இராணுவம் ☑

ஈ. இந்திய கடலோர காவல்படை

✓ இந்திய டிரோன் கூட்டமைப்புடன் இணைந்து, 'ஹிம் டிரோன்–ஏ–தோன்' என்ற திட்டத்தை இந்திய இராணுவம் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டம் தொழிற்துறை, கல்வியாளர்கள், மென்பொருள் உருவாக்குநர்கள் மற்றும் டிரோன் உற்பத்தியாளர்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைக்கிறது.

✓ இந்தியாவின் டிரோன் சூழலமைப்புக்கான இந்திய இராணுவத்தின் இந்த ஆதரவு, 'உலகளவில் கிடைக்கும் சிறந்தவற்றை'விட, 'உள்நாட்டில் கிடைப்பது மேலானவை' என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

10. 'புது தில்லி பன்னாட்டு நடுவர் மையத்தின்' புதிய பெயர் என்ன?

அ. பாரத் பன்னாட்டு நடுவர் மையம்

ஆ. இந்திய பன்னாட்டு நடுவர் மையம் ☑

இ. பிரதமர் நடுவர் மையம்

ஈ. ஆத்மநிர்பர் நடுவர் மையம்

✓ நடுவணரசு, மக்களவையில், 'புது தில்லி பன்னாட்டு நடுவர் மையம் (திருத்த) மசோதா, 2022'ஐ முன்வைத்தது. புது தில்லி பன்னாட்டு நடுவர் மையச் சட்டம், 2019ஐ திருத்த, சட்ட அமைச்சர் கிரண் ரிஜ்ஜு மசோதாவை முன்வைத்தார். இது நகர அளவிலான நோக்கத்திற்குப்பதிலாக, பரந்த நாடு அளவிலான நோக்கத்தை வழங்குவதற்காக, அந்நடுவர் மையத்தை, 'இந்திய பன்னாட்டு நடுவர் மையம்' என மறுபெயரிட எண்ணுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கொந்தகை அகழாய்வில் 74 சூது பவள மணிகள் கண்டெடுப்பு

கொந்தகை அகழாய்வில் முதுமக்கள் தாழிக்குள் 74 சூது பவள மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் எட்டாம் கட்ட அகழாய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கொந்தகையில் நடைபெற்று வரும் அகழாய்வுப் பணியில் இதுவரை 57 முதுமக்கள் தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு தாழியினுள் அடர்சிவப்பு நிறமுடைய 74 சூது பவள மணிகள் உள்ளன. பழங்காலத்தில் இறந்தவர்களை தாழியுனுள் வைத்து புதைக்கும்போது, அவர்கள் பயன்படுத்திய பொருள்களையும் வைத்து புதைப்பது வழக்கம். அந்தவகையில், தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள சூது பவள மணிகளும் வைக்கப்பட்டிருக்கலாம். இவை அனைத்தும் 3 செமீ நீளமுள்ள பவளமணிகள். இதனை இறந்தவர் மாலையாக அணிந்திருக்கலாம் என தொல்லியலாளர்கள் தெரிவித்தனர்.

---

2. செஸ் ஒலிம்பியாட் நிறைவு: 17 இந்தியர்களுக்கு பதக்கம்

மாமல்லபுரத்தில் நடந்த 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் மொத்தம் 17 இந்தியர்கள் பதக்கம் வென்றுள்ளனர். இதில் 2 பேருக்கு தனிநபர் தங்கம், ஒரு வெள்ளி, தலா 4 வெண்கலம், அணிகள் சார்பில் 10 பேருக்கு வெண்கலம் என 17 பதக்கங்கள் அடங்கும்.

தமிழ்நாடு அரசு, சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE), அகில இந்திய செஸ் கூட்டமைப்பு (AICFI) சார்பில் ₹100 கோடி செலவில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் மாமல்லபுரம் போர் பாயிண்ட் ஷெரட்டன் ஹோட்டலில் கடந்த ஜூலை 28ஆம் தேதி தொடங்கியது.

ஓபன் பிரிவில் 187, மகளிர் பிரிவில் 162 நாடுகளைச் சேர்ந்த ஈராயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். மொத்தம் 11 சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. நிறைவு நாளான செவ்வாய்க்கிழமை 11–ஆம் சுற்று ஆட்டங்கள் பரபரப்பாக நடைபெற்றன. ஓபன் பிரிவில் உஸ்பெகிஸ்தான், ஆர்மீனியா, இந்திய பி அணிகள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றன.

மகளிர் பிரிவில் உக்ரைன், ஜார்ஜியா, இந்திய ஏ அணிகள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

இந்திய பி, ஏ அணிகளுக்கு வெண்கலம்:

இந்திய பி அணியில் அதிபன், குகேஷ், பிரக்ஞானந்தா, நிஹால் சரீன், ரௌனக் சத்வானி இடம்பெற்றிருந்தனர். இந்திய மகளிர் ஏ அணியில் ஹரிகா துரோணவல்லி, கொனேரு ஹம்பி, ஆர் வைஷாலி, பக்தி குல்கர்னி, தான்யா சச்தேவ் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் வெண்கலப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

குகேஷ், நிஹால் சரீனுக்கு தங்கம்:

விளையாட்டு வீரர்களின் வெற்றி, ரேட்டிங் அடிப்படையில் வழங்கப்படும் தனிநபர் பதக்கங்களில் இந்திய இளம் வீரர்கள் டி குகேஷ், நிஹால் சரீன் ஆகியோர் தங்கம் வென்றனர். ஏ அணி வீரர் அர்ஜுன் எரிகைசி வெள்ளியும் பி அணி வீரர் பிரக்ஞானந்தா வெண்கலமும் வென்றனர். மகளிர் பிரிவில் தான்யா சச்தேவ், திவ்யா தேஷ்முக், ஆர் வைஷாலி வெண்கலம் வென்றனர்.

---

3. ₹25 கோடியில் ஒலிம்பிக் தங்கவேட்டை திட்டம்: முதல்வர் மு க ஸ்டாலின் அறிவிப்பு

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வகையில் விளையாட்டு வீரர்களை உருவாக்க, ₹25 கோடியில் ஒலிம்பிக் தங்கவேட்டை திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

ஒலிம்பிக் தங்கவேட்டை: தமிழ்நாட்டில் உலகத்தரம்வாய்ந்த விளையாட்டு வீரர்கள், ஒலிம்பிக் பதக்கங்கள் வெல்வோரை உருவாக்கும் பொருட்டு "ஒலிம்பிக் தங்கவேட்டை" என்ற திட்டம் ₹25 கோடியில் நடைமுறைப்படுத்த

–ப்படவுள்ளது. இதன்படி, ஐம்பது விளையாட்டு வீரர்கள் தேர்வுசெய்யப்பட்டு, நான்கு ஆண்டுகளில் அவர்களின் திறன்களை மேம்படுத்த ₹60 கோடி செலவுசெய்யப்படும்.

இந்தியாவின் முதல் சர்வதேச மாஸ்டர் ஆரோனுக்கு கௌரவம்

செஸ் ஒலிம்பியாட் நிறைவு விழாவில், இந்தியாவின் முதல் செஸ் சர்வதேச மாஸ்டர் மானுவல் ஆரோன் கௌரவிக்கப்பட்டார்.

---

4. 44ஆவது செஸ் ஒலிம்பியாட் நிறைவு: ஹங்கேரியிடம் FIDE கொடி ஒப்படைப்பு

சர்வதேச செஸ் கூட்டமைப்பின் கொள்கை விளக்கப்பாடலுடன் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் விழா நிறைவுபெற்றது. அதனைத் தொடர்ந்து செஸ் போட்டியின் அடையாளமாக கொண்டுவரப்பட்ட தீப்பந்தம் அணைக்கப்பட்டது. முன்னதாக சர்வதேச செஸ் கூட்டமைப்பின் கொடி ஹங்கேரி நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. 45ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஹங்கேரியில் நடைபெறவுள்ளது.

---

5. திறமையான தலைமைத்துவ திட்டம்

2022 ஜூலையில், இந்திய வான்படை, எகிப்திய வான்படையுடன் இணைந்து, கைரோ மேற்கு வான்படை தளத்தில் உள்ள ஆயுதப்பள்ளியில் ஒருமாதகால கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டன. இருநாட்டுப் படைகளின் போர் வானூர்திகளு –க்கு இடையே, முதன்முறையாக இக்கூட்டுப்பயிற்சி நடத்தப்பட்டது. இந்திய வான்படையின், போர்தந்திர உத்திகள் மற்றும் வான்படை போர்தந்திர மேம்பாட்டு நிறுவனத்தின் மூன்று சுகோய்–30 ரக MKI வானூர்திகள் இதில் இடம்பெற்றன. மேலும், போர் வானூர்திகளின் பயிற்றுவிப்பாளர் அறுவர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

---

1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற V பிரணவ் என்பாருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. துப்பாக்கி சுடுதல்

ஆ. சதுரங்கம் ☑

இ. பளு தூக்குதல்

ஈ. தடகளம்

✓ சென்னையைச் சேர்ந்த செஸ் வீரர் V பிரணவ் ருமேனியாவில் நடந்த போட்டியில் வெற்றிபெற்று இந்தியாவின் 75ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆனார். 15 வயதான அவர், ருமேனியாவில் உள்ள பையா மாரில் நடந்த லிம்பீடியா ஓபனில் தனது மூன்றாவது மற்றும் இறுதி GM நெறியைப்பெற்று கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்றார். அவர் 9 சுற்றுகளிலிருந்து ஏழு புள்ளிகள் பெற்று போட்டியை நிறைவு செய்தார். பிரணவ், தமிழ்நாட்டின் இருபத்தேழாவது கிராண்ட்மாஸ்டர் ஆவார்.

2. உலகின் மிகவுயரமான இரயில்வே பாலம் அமைந்துள்ள இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. சிக்கிம்

ஆ. ஜம்மு-காஷ்மீர் ☑

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. அஸ்ஸாம்

✓ ஜம்மு–காஷ்மீரில் அமைந்துள்ள செனாப் பாலம் உலகின் மிகவுயரமான இரயில்பாலமாகும். உலகின் மிகவுயரமான இந்த இரயில்வே பாலத்தின் எஃகு வளைவு கடந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது; அதே வேளையில் மேம்பாலத்தளம் கட்டி முடிக்கப்படவுள்ளது. செனாப் இரயில்வே பாலத்தின் மேல்தளம் பொன்னிணைப்புடன் கட்டி முடிக்கப்படும் போது அது உலகின் மிகவுயரமான இரயில் பாலத்திற்கான சாதனையை எட்டும்.

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மனிஷா கல்யாண் என்பாருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. மட்டைப்பந்து

ஆ. கால்பந்து ☑

இ. குத்துச்சண்டை

ஈ. பளு தூக்குதல்

✓ மனிஷா கல்யாண் மற்றும் சுனில் சேத்ரி ஆகியோர் முறையே AIFF'இன் சிறந்த மகளிர் மற்றும் ஆடவர் கால்பந்து வீராங்கனை மற்றும் வீரராக தேர்வுசெய்யப்பட்டனர். சர்வதேச அரங்கில் தற்போது விளையாடிக்கொண்டிருக்கும் வீரர்கள் அதிக கோல் அடித்தவர்களில் மூன்றாமிடத்தில் உள்ளார் இவர். கடந்த 2007இல் முதன்முதலில் சிறந்த வீரர் ஆனார். அடுத்து 2011, 2013, 2014, 2017, 2018–19, தற்போது 2021–22 என மொத்தம் 7 முறை சிறந்த வீரராக தேர்வுசெய்யப்பட்டார். மனிஷா கல்யாண், கடந்த சீசனுக்கான 'பெண்களுக்கான ஆண்டின் சிறந்த வளர்ந்துவரும் கால்பந்து வீராங்கனை' விருதை வென்றிருந்தார்.

4. 2022 – உலக உயிரி எரிபொருள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.8

ஆ. ஆகஸ்ட்.10 ☑

இ. ஆகஸ்ட்.12

ஈ. ஆகஸ்ட்.14

- ✓ உயிரி எரிபொருளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் ஆண்டுதோறும் ஆக.10 அன்று 'உலக உயிரி எரிபொருள் நாள்' கொண்டாடப்படுகிறது. 1893ஆம் ஆண்டு இதே நாளில், ஜெர்மன் கண்டுபிடிப்பாளர் சர் ருடால்ப் டீசல் தனது டீசல் இயந்திரத்தை கடலை எண்ணெய் கொண்டு வெற்றிகரமாக இயக்கினார்.

- ✓ விலங்குகளின் கழிவுகள், பாசிகள், தொழிற்சாலைகள் மற்றும் வேளாண் கழிவுகளிலிருந்து உயிரி–எரிபொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. புதைபடிவ எரிபொருட்களைப் போலல்லாமல், அவை குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் திரவம் அல்லது வாயு வடிவில் அவை கிடைக்கப் பெறுகின்றன. அவை சுற்றுச்சூழலுக்கு உகந்தவை, புதுப்பிக்கத்தக்கவை மற்றும் மக்கும் தன்மை கொண்டவை. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், கடந்த 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு உலக உயிரி எரிபொருள் நாளைக் கொண்டாடத் தொடங்கியது.

5. 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் திறந்தநிலைப் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற நாடு எது?

அ. இந்தியா

ஆ. உக்ரைன்

இ. உஸ்பெகிஸ்தான் ☑

ஈ. ரஷ்யா

- ✓ சென்னையில் நடைபெற்ற 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் ஓபன் பிரிவில் உஸ்பெகிஸ்தான் அணி தங்கப் பதக்கத்தையும், ஆர்மேனியா மற்றும் இந்தியா–2 அணிகள் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கத்தையும் வென்றன என சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE) தெரிவித்துள்ளது. பெண்கள் பிரிவில் உக்ரைன் தங்கப்பதக்கமும், ஜார்ஜியா வெள்ளிப்பதக்கமும், முதலிடம் வகிக்கும் இந்தியா–1 அணி வெண்கலமும் வென்றன.

6. அண்மையில் திறக்கப்பட்ட இரண்டாம் தலைமுறை (2G) எத்தனால் ஆலையை உருவாக்கிய நிறுவனம் எது?

அ. HPCL

ஆ. IOCL ☑

இ. BPCL

ஈ. ONGC

- ✓ ஹரியானா மாநிலம் பானிபட்டில் இரண்டாம் தலைமுறை (2G) எத்தனால் ஆலையை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். நாட்டில் உயிரி–எரிபொருள் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அதிகரிக்க 2G உயிரி–எரிபொருள் ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த எத்தனால் ஆலையை இந்திய எண்ணெய் நிறுவனம் (IOCL) ₹900 கோடி மதிப்பீட்டில் உருவாக்கியுள்ளது. இந்த ஆலையால் ஆண்டுதோறும் சுமார் 2 இலட்சம் டன் அரிசி வைக்கோலைப் பயன்படுத்தி ஆண்டுக்கு சுமார் 3 கோடி லிட்டர் எத்தனாலை உற்பத்தி செய்யவியலும்.

7. டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டை (Digital Payments Index) வெளியிடுகிற இந்திய நிறுவனம் எது?

அ. NPCI

ஆ. NITI ஆயோக்

இ. இந்திய ரிசர்வ் வங்கி ☑

ஈ. நிதி அமைச்சகம்

- ✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டை (DPI) வெளியிடுகிறது. இது ஒவ்வோர் ஆண்டும் முறையே ஜூலை மற்றும் ஜனவரி மாதம், மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் வெளியிடப்படுகிறது. இக்குறியீடு அண்மைய பதிப்பான 2022 மார்ச் நிலவரப்படி, 349.30–ஆக உயர்ந்துள்ளது; அது 2021 செப்டம்பரில் 304.06–ஆக இருந்தது. இது, நாடு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை விரைவாக ஏற்றுக்கொள்ளவதைக் குறிக்கிறது. RBI–DPI ஆனத 2018 மார்ச்சை அடிப்படைக் காலமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

8. 2024ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் முதன்முறையாக இந்திய அரங்கை நிறுவவுள்ள நிறுவனம் எது?

அ. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் ☑

ஆ. TATA குழுமம்

இ. அதானி இண்டஸ்ட்ரீஸ்

ஈ. மஹிந்திரா மற்றும் மஹிந்திரா

✓ ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (RIL) மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கம் (IOA) இணைந்து 2024ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் முதன்முறையாக இந்திய அரங்கை நிறுவவுள்ளன. இந்திய விளையாட்டு வீரர்களின் செயல்திறனை உயர்த்துவதையும், தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக்கொண்டு IOA உடனான நீண்டகால கூட்டாண்மையை RIL அறிவித்தது. இந்தியா, 140ஆவது IOC அமர்வை 2023 ஜூனில் மும்பையில் உள்ள ஜியோ பன்னாட்டு மையத்தில் நடத்துகிறது.

9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மார்த்தாண்டம் சூரியன் கோவில் அமைந்துள்ள மாநிலம்/UT எது?

அ. தெலுங்கானா

ஆ. ஜம்மு காஷ்மீர் ☑

இ. ஹரியானா

ஈ. பீகார்

✓ ஜம்மு–காஷ்மீர் மாநிலம் அனந்தநாகில் மார்த்தாண்டம் சூரியன் கோவில் அமைந்துள்ளது. முன்னதாக, துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா பங்கேற்ற விழாவில், இந்திய தொல்லியல் துறை அங்கு சிவப்புக்கொடி ஏற்றியது. அண்மையில், இந்து யாத்திரீகர்கள் குழு அக்கோவிலுக்குள் 1 மணிநேர பிரார்த்தனை அமர்வை நடத்தியது. இந்தத் தளம், 'உயிரற்ற' பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது; அங்கு அனுமதியின்றி எந்தச் சடங்கும் நடத்தவியலாது.

10. தேர்தல் ஆணையத்தின் கூற்றுப்படி, எத்தனை வயதுக்கு மேற்பட்ட இளையோர்கள், வாக்காளர் அட்டைக்காக முன்கூட்டியே விண்ணப்பிக்கலாம்?

அ. 15

ஆ. 16

இ. 17 ☑

ஈ. 18

✓ இந்திய தேர்தல் ஆணையத்தின்படி (ECI), பதினேழு வயதுக்கு மேற்பட்டவர்கள் தற்போது வாக்காளர் பட்டியலில் சேர்வதற்கு முன்கூட்டியே விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு காலாண்டிலும் வாக்காளர் பட்டியல் புதுப்பிக்கப்படும். முன்னதாக, ECIஇன் பரிந்துரைகளுக்குப் பிறகு, சட்ட அமைச்சகம் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் நான்கு தகுதித் தேதிகளை வழங்குவதற்காக திருத்தியது: ஜனவரி.1, ஏப்ரல்.1, ஜூலை.1 மற்றும் அக்டோபர்.1 ஆகிய தேதிகளில் இளையோர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவுசெய்ய தகுதியுடையவர்கள்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி யு யு லலித்

உச்சநீதிமன்றத்தின் 49ஆவது தலைமை நீதிபதியாக யு யு லலித் (உதய் உமேஷ் லலித்) நியமனம் செய்யப்பட்டார். அந்த நியமன உத்தரவில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு கையொப்பமிட்டார். தற்போதைய தலைமை நீதிபதி என் வி ரமணா வரும் 26–ஆம் தேதி ஓய்வுபெற்ற பிறகு, புதிய தலைமை நீதிபதியாக யு யு லலித் ஆகஸ்ட் 27–ஆம் தேதி பதவியேற்பார்.

இதுகுறித்து மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையில், 'அரசியமைப்புச் சட்டப்பிரிவு 124, துணைப்பிரிவு (2) அளித்துள்ள அதிகாரத்தின் அடிப்படையில், உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக யு யு லலித்தை குடியரசுத்தலைவர் நியமித்துள்ளார். வரும் ஆகஸ்ட் 27–ஆம் தேதிமுதல் இந்த நியமனம் நடைமுறைக்கு வரும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 மாதங்கள் மட்டுமே... உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக வரும் ஆகஸ்ட் 27–ஆம் தேதி பதவியேற்கும் நீதிபதி யு யு லலித், மூன்று மாதங்களுக்கு குறைவாக மட்டுமே தலைமை நீதிபதி பதவியை வகிப்பார். அவர் வரும் நவம்பர் 8–ஆம் தேதி ஓய்வு பெற உள்ளார்.

நேரடி நியமனம் பெறும் இரண்டாவது தலைமை நீதிபதி: தலைமை நீதிபதியாக யு யு லலித் நியமிக்கப்பட்டதன் மூலமாக, வழக்குரைஞராக இருந்து நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாகவும், பின்னர் தலைமை நீதிபதியாகவும் ஆகும் இரண்டாவது நபர் என்ற பெருமையை அடைந்துள்ளார். பிரபல மூத்த வழக்குரைஞராக இருந்து வந்த யு யு லலித், கடந்த 2014 ஆக.13–ஆம் தேதி நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

இவருக்கு முன்பாக, நீதிபதி எஸ் எம் சிக்ரி, வழக்குரைஞராக இருந்து நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாகவும், அதன் பிறகு நாட்டின் 13–ஆவது தலைமை நீதிபதியாகவும் கடந்த 1971–ஆம் ஆண்டு ஜனவரியில் பதவியேற்றார்.

---

2. பிரதமரின் நகர்ப்புற வீடு கட்டும் திட்டம் 2024 வரை நீட்டிப்பு: அமைச்சரவை ஒப்புதல்

பிரதமரின் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்தை 2024–ஆம் ஆண்டு டிசம்பர் 31–ஆம் தேதி வரை நீட்டிக்க நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதமரின் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்தை 2024ஆம் ஆண்டு டிசம்பர் 31–ஆம் தேதி வரை நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்கீழ் வீடுகளைக் கட்டி முடிக்க மாநில, யூனியன் பிரதேச அரசுகள் கூடுதல் கால அவகாசம் கோரியிருந்த நிலையில், இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகளுக்கு நடுவணரசு சார்பில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

கடந்த 2015–ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டத்துக்கு ₹2.03 இலட்சம் கோடி நிதியுதவி அளிக்க நடுவணரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதில் ஏற்கெனவே ₹1.18 இலட்சம் கோடி மாநில, யூனியன் பிரதேச அரசுகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், 2024–ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை ₹85,406 கோடி விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. காமன்வெல்த் சாம்பியன்ஷிப்: தங்கம் வென்றார் பவானி தேவி!

காமன்வெல்த் வாள்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பவானி தேவி தங்கம் வென்றார். இங்கிலாந்தில் நடைபெற்று வந்த காமன்வெல்த் போட்டிகளில், 22 தங்கம் உள்பட மொத்தம் 61 பதக்கங்களுடன் இந்தியா 4ஆம் இடம்பிடித்து சாதனை படைத்தது. இதனைத் தொடர்ந்து, இலண்டனில் காமன்வெல்த் பென்சிங் சாம்பியன்ஷிப் போட்டிகள் தொடங்கியுள்ளன. இதில், சீனியர் வாள்வித்தை போட்டியில் இந்தியா சார்பில் தமிழ்நாட்டின் பவானி தேவி கலந்துகொண்டார். ஆஸ்திரேலிய வீராங்கனை வஸ்லேவாவை எதிர்கொண்ட பவானி தேவி, 15–10 என்ற புள்ளிக்கணக்கில் வஸ்லேவாவை வீழ்த்தி தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

1. அண்மையில் காலமான இஸ்ஸி மியாகே என்பாருடன் தொடர்புடை துறை எது?

அ. வேளாண்மை

ஆ. வடிவமைப்பு ☑

இ. பொருளாதாரம்

ஈ. அறிவியல்

✓ மூத்த ஜப்பானிய வடிவமைப்பாளர் இஸ்ஸி மியாகே தனது 84ஆவது வயதில் சமீபத்தில் காலமானார். அவர் தனது புதுமையான தொழில்நுட்பம் சார்ந்த ஆடை வடிவமைப்புகள், கண்காட்சிகள் மற்றும் வாசனை திரவியங்களுக்கு பெயர்பெற்றவர். அவர், சுருக்கங்கள் இல்லாத ஆடைகளின் மடிப்புக்கு பெயர்பெற்றவர். ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸுக்கு ஒரு கருப்பு கடலாமைக் கழுத்துப் பட்டை வடிவம் கொண்ட ஆடையை அவர் வடிவமைத்துத் தந்தார். அவர் 2006–இல் கியோட்டோ பரிசுடன் பல்வேறு விருதுகள் மற்றும் பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

2. நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், 'நெதன்னா பீமா' திட்டத்தை அறிமுகப்படுத்திய இந்திய மாநிலம் எது?

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. தெலுங்கானா ☑

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிஸா

✓ தேசிய கைத்தறி நாளை முன்னிட்டு, தெலுங்கானா முதலமைச்சர் கே சந்திரசேகர் ராவ் நெசவாளர்களுக்கான 'நெதன்னா பீமா' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். தகுதியான பயனாளிகள் எதிர்பாராவசமாக இறந்தால், நெசவாளர்களின் குடும்பங்களுக்கு இந்தத்திட்டம் ₹5 லட்சம் காப்பீடு வழங்கும். தெலுங்கானா மாநில அரசு, 'நெதன்னா பீமா' என்ற திட்டத்திற்காக இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்துடன் (LIC) கூட்டிணைந்துள்ளது.

3. பிரான்ஸின் உயரிய குடிமக்கள் விருதான செவாலியர் டி லா லீஜியன் டி'ஹானூர் உடன் கௌரவிக்கப்படவுள்ள இந்திய அரசியல்வாதி யார்?

அ. நரேந்திர மோடி

ஆ. இராகுல் காந்தி

இ. சசி தரூர் ☑

ஈ. இராம்நாத் கோவிந்த்

✓ காங்கிரஸ் மூத்த தலைவர் சசி தரூருக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய குடிமக்கள் விருதான செவாலியர் டி லா லீஜியன் டி ஹானூர் விருது வழங்கப்படவுள்ளது. அவரது எழுத்துக்கள் மற்றும் பேச்சுகளுக்காக பிரெஞ்சு அரசாங்கம் அவரைக் கௌரவிக்கிறது. இவ்விருது நேஷனல் ஆர்டர் ஆப் தி லீஜியன் ஆப் ஹானர் என்றும் அழைக்கப்படுகிறது. இது, 1802–இல் நெப்போலியன் போனபார்ட்டால் நிறுவப்பட்டது.

4. நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக கீழ்க்காணும் எந்த ஒழுங்குமுறை அமைப்புடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ONDC கையெழுத்திட்டுள்ளது?

அ. NABARD

ஆ. SIDBI ☑

இ. EXIM வங்கி

ஈ. NHB

✓ டிஜிட்டல் வர்த்தகத்திற்கான கட்டற்ற வலையமைப்பானது (ONDC) தொடர்புடைய நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக SIDBI உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தக் கூட்டாண்மையின்கீழ், ONDC நெறிமுறை மற்றும் குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்பு (MVP) பற்றிய ONDC பேரமர்வுகள் MSME–களுக்கு நடத்தப்படும்.

5. பிரதமர் ஆவாஸ் யோஜனாவை (நகர்ப்புறம்) எந்த ஆண்டு வரை தொடர்வதற்கு நடுவண் அமைச்சரவை (2022 ஆகஸ்ட் நிலவரப்படி) ஒப்புதல் அளித்தது?

அ. 2023

ஆ. 2024 ☑

இ. 2027

ஈ. 2030

✓ பிரதமர் ஆவாஸ் யோஜனாவை (நகர்ப்புறம்) 2024 டிசம்பர் வரை தொடர நடுவணமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. 'அனைவருக்கும் வீடு' திட்டமானது 2015 ஜூனில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான அசல் காலக்கெடு, 2022 மார்ச் மாதத்திற்குள் அனைத்து தகுதியுள்ள நகர்ப்புற பயனாளிகளுக்கும் வீடுகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

6. ஓய்வூதியம் பெறுவோர் தங்கள் உயிர்வாழ் சான்றிதழைச் சமர்ப்பிப்பதற்காக 'முகத்தை அடையாளம் காணும் வசதியை' அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ. LIC

ஆ. EPFO ☑

இ. PFRDA

ஈ. IRDAI

✓ தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியமானது ஓய்வூதியம் பெறுவோர் தங்கள் டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழைச் சமர்ப்பிக்க புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய, 'முகத்தை அடையாளம் காணும் வசதி'யின்கீழ், ஓய்வூதியம் பெறுவோர் தற்போது நாட்டில் எங்கிருந்தும் EPFO இணையதளத்தில் தங்கள் டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழைச் சமர்ப்பிக்கலாம். நடுவண் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் இந்த 'முக அங்கீகார தொழில்நுட்பத்தைத்' தொடங்கி வைத்தார்.

7. 2022–இல் வரும் 'ஆட்கடத்தலுக்கு எதிரான உலக நாளுக்கானக்' கருப்பொருள் என்ன?

அ. Use and abuse of technology ☑

ஆ. Leaving no one trafficked

இ. Rehabilitation of the trafficked

ஈ. Fellow Human Beings

✓ 'ஆட்கடத்தலுக்கு எதிரான உலக நாள்' ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.30 அன்று அனுசரிக்கப்படுகிறது. "Use and abuse of technology" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். "புளூ ஹார்ட்" பிரச்சாரமும் தொடங்கப்பட்டது. 'நீல இதயம்' என்பது ஆட்கடத்தலுக்கு ஆளாவோரின் துயரத்தையும், சக மனிதர்களை வாங்கும் மற்றும் விற்பவர்களின் உணர்ச்சியற்ற மனத்தையும் குறிக்கிறது.

8. இந்தியாவில், 'தேசியக்கொடி நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.22 ☑ ஆ. ஆகஸ்ட்.15

இ. ஜனவரி.26 ஈ. அக்டோபர்.02

✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.22 அன்று இந்தியாவில் 'தேசியக்கொடி நாள்' கொண்டாடப்படுகிறது. கடந்த 1947ஆம் ஆண்டு இதே நாளில், இந்திய அரசியல் நிர்ணய சபை தேசியக்கொடியை ஏற்றுக்கொண்டது. 1947 ஜூலை.22 அன்று இந்திய அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்கள் தில்லியில் உள்ள அரசியலமைப்பு மண்டபத்தில் கூடிய போது, சுதந்திர இந்தியாவுக்கான தேசியக்கொடியை ஏற்றுக்கொள்வதற்கான ஜவஹர்லால் நேருவின் தீர்மானம் முதன்முதலாக விவாதிக்கப்பட்டது.

9. 'VINBAX-2022' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடத்தப்படும் ஓர் இருதரப்பு இராணுவப் பயிற்சியாகும்?

அ. பிரான்ஸ்

ஆ. ஜப்பான்

இ. வியட்நாம் ☑

ஈ. ஓமன்

✓ இந்தியாவும் வியட்நாமும் இணைந்து வியட்நாம்-இந்தியா இருதரப்பு இராணுவப்பயிற்சியான 'VINBAX-2022'இன் 3ஆவது பதிப்பைத்தொடங்கியுள்ளன. ஹரியானாவில் உள்ள சண்டிமந்திரில் இருபது நாள் நடைபெறும் இராணுவப் பயிற்சி நடைபெறவுள்ளது. ஒரு பொறியாளர் நிறுவனம் மற்றும் ஒரு மருத்துவக் குழுவை அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான ஐநா குழுவின் ஒரு பகுதியாகப் பயன்படுத்துவதே இந்தப் பயிற்சியின் கருப்பொருளாகும்.

10. NHA-இன் சமீபத்திய அறிவிப்பின்படி, CoWIN செயலி, எந்தத் திட்டத்திற்காக மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது?

அ. PM மாத்ரு வந்தனா யோஜனா

ஆ. PM சுவஸ்திய சுரக்ஷா யோஜனா

இ. PM சுரக்ஷித் மாத்ரித்வா அபியான்

ஈ. உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டம் ☑

✓ தற்போது, உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டத்திற்காக (Universal Immunisation Programme) CoWIN செயலி மீண்டும் உருவாக்கப்படுகிறது. CoWIN தலைவரும், தேசிய நலவாழ்வு ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரியுமான டாக்டர் ஆர் எஸ் சர்மா, தாய்மார்கள் மற்றும் சிசுக்களுக்குத் தடுக்கக்கூடிய நோய்களுக்கான தடுப்பூசி மையங்கள் மற்றும் அடுத்தடுத்த தடுப்பூசிகளுக்கான நினைவூட்டல்களைக் கண்டறிய இந்தச் செயலி உதவும் என அறிவித்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 12-08-2022 – உலக யானைகள் நாள்

---

2. நல் ஆளுமை விருது: தமிழ்நாடு அரசு அறிவிப்பு

இந்த ஆண்டுக்கான நல்ஆளுமை விருதுக்கு தேர்வாகியுள்ளோர் விவரங்களை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. ஆண்டுதோறும் விடுதலை நாள் விழாவையொட்டி, அரசுத்துறைகள், அரசு ஊழியர்கள், அரசு சார்பு அமைப்புகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் சிறந்த செயல்பாடுகளைப் பாராட்டி நல் ஆளுமை விருதுகள் வழங்கப்படுவது வழக்கம். இதுபோன்று, நிகழாண்டிலும் விடுதலை நாளின்போது நல்ஆளுமை விருதுகள் வழங்கப்படவுள்ளன.

செங்கல் சூளையில் பணிபுரிந்தவர்களை மீட்டெடுத்து தொழில்முனைவோராக வாழ்க்கைத்தரத்தை உயர்த்திய பணிக்காக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரும், திருநங்கைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த

முயற்சிகளை எடுத்தமைக்காக செங்கல்பட்டு மாவட்ட சமூக நல அலுவலரும் நல்ஆளுமை விருதுக்கு தேர்வாகியுள்ளனர்.

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கி நிலத்தடி நீரை செறிவூட்டும் பணிகளைச் செய்தமைக்காக, திண்டுக்கல், சிவகங்கை மாவட்ட ஆட்சியர்கள் விருதுக்கு தேர்வாகியுள்ளனர். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பேறுகால நலனை தகவல் தொழில்நுட்ப உதவிகளுடன் கண்காணித்து சிறப்பான சுகாதார திட்டத்தை முன்னெடுத்த காரணத்துக்காக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரும் நல்ஆளுமை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

வேளாண் இயந்திரங்களை கைப்பேசி செயலி வழியாக வாடகைக்குவிடும் திட்டத்தை அமல்படுத்தியதற்காக தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறையின் முதன்மைப் பொறியாளரும், சென்னையில் ஆதரவற்ற, மனநிலை பாதித்தோரை மீட்டு பராமரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியதற்காக சென்னை பெருநகர காவல்துறை ஆணையாளருக்கு நல் ஆளுமை விருது அளிக்கப்படவுள்ளது. நல் ஆளுமை விருதானது, விருதும், தலா ₹2 லட்சம் பரிசுத்தொகையும் அடங்கியதாகும்.

---

3. குடியரசுத்துணைத்தலைவரின் பணிகள்

குடியரசுத் தலைவர் பதவிக்கு அடுத்து நாட்டின் இரண்டாவது மிகவுயரிய பதவி குடியரசுத்துணைத்தலைவர் பதவியாகும். புதிய குடியரசுத் துணைத் தலைவராக ஜகதீப் தன்கர் பொறுப்பேற்றுள்ள நிலையில், அவர் பல்வேறு முக்கிய பணிகளை மேற்கொள்ளவுள்ளார். அவருக்கான பணிகள் மற்றும் அதிகாரங்கள் குறித்த பார்வை:

மாநிலங்களவைத் தலைவர்:

குடியரசுத் துணைத் தலைவரின் முக்கிய பணி, மாநிலங்களவைத் தலைவராகச் செயல்படுவது. நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது அவையை வழிநடத்தும் அவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவையின் மாண்பை முறையாகக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்வார்.

அவை நடவடிக்கைகள் முறையாக இருப்பதை உறுதிசெய்யும் அவர், நடுவண் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே தோன்றும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துவைப்பதிலும் முக்கிய பங்காற்றுவார். அவைக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை தீர்மானிக்கும் முழு பொறுப்பும் அவைத் தலைவருக்கே உள்ளது.

தற்காலிக குடியரசுத்தலைவர்:

நாட்டின் குடியரசுத் தலைவரின் இறப்பு, ராஜிநாமா, பதவிநீக்கம் உள்ளிட்ட சமயங்களில் தற்காலிக குடியரசுத் தலைவராகத் துணை குடியரசுத்தலைவரே செயல்படுவார். அடுத்த குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அவர் அப்பொறுப்பில் நீடிப்பார். தற்காலிக குடியரசுத்தலைவராக அவர் பதவி வகித்தாலும்கூட, குடியரசுத் தலைவருக்கு உண்டான அனைத்து அதிகாரங்களும் அவருக்கு உண்டு.

அத்தகைய சமயங்களில் குடியரசுத்தலைவருக்கு உண்டான அனைத்து சலுகைகளும் குடியரசுத் துணைத் தலைவருக்குக் கிடைக்கும். அவர் குடியரசுத்தலைவராகப் பணியாற்றும் சூழலில், மாநிலங்களவையை வழிநடத்த இயலாது. அத்தகைய சமயங்களில் அவையின் துணைத்தலைவரோ அல்லது குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் நபரோ அவையை வழிநடத்துவார்.

பதவியில் நீடிக்கலாம்:

பொதுவாக குடியரசுத் துணைத்தலைவர் ஐந்து ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். அவருடைய பதவிக்காலம் நிறைவடைந்தபோதிலும், புதிய குடியரசுத் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனில் அவர் பதவியில் தொடர்ந்து நீடிக்கலாம். அதற்குத் தடை ஏதுமில்லை. புதிய குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்பேற்கும் வரை அவர் அப்பதவியில் தொடரலாம்.

ராஜிநாமா:

குடியரசுத் துணைத் தலைவர் தனது பதவிக்காலம் நிறைவடையும் முன்பே ராஜிநாமா செய்ய விரும்பினால், அதற்கான கடிதத்தைக் குடியரசுத்தலைவரிடம் வழங்கவேண்டும். ராஜிநாமா கடிதம் ஏற்கப்பட்ட நாளில் அவர் பணியில் இருந்து விடுவிக்கப்படுவார்.

பதவிநீக்கம்:

குடியரசுத் துணைத் தலைவரைப் பதவிநீக்கம் செய்ய விரும்பினால், மாநிலங்களவையில் 14 நாள்களுக்கு முன்பே அதற்கான தீர்மானத்தைத் தாக்கல் செய்யவேண்டும். அத்தீர்மானத்துக்கு அவைக்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும். மேலும், அத்தீர்மானத்துக்கு மக்களவை உறுப்பினர்களில் பாதி பேர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அதற்குப் பிறகே குடியரசுத் துணைத் தலைவரைப் பதவிநீக்கம் செய்யவியலும். நாட்டில் இதுவரை எந்தக் குடியரசு துணைத்தலைவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டது கிடையாது.

---

4. தாதாபாய் நௌரோஜியின் லண்டன் இல்லத்துக்கு 'புளூ பிளேக்' அந்தஸ்து

விடுதலைப் போராட்ட வீரரும் பொருளாதார நிபுணருமான தாதாபாய் நௌரோஜி தெற்கு இலண்டனில் வாழ்ந்த இல்லத்துக்கு 'நீலத்தகடு' (புளூ பிளேக்) அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள 'இங்கிலீஷ் ஹெரிடேஜ் சாரிட்டி' (ஆங்கில பாரம்பரிய அறக்கட்டளை) என்ற அமைப்பானது இலண்டனில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களுக்கு 'நீலத்தகடு' என்ற அந்தஸ்தை வழங்கி வருகிறது. அத்தகைய கட்டடங்களின் முக்கியத்துவம் குறித்தும் அதில் வாழ்ந்த நபர்களின் விவரங்கள் குறித்தும் நீலத்தகடில் பொறிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைபடும்படி கட்டடத்தில் பொருத்தப்படும்.

இந்நிலையில், விடுதலைப் போராட்ட வீரரும் சிறந்த பொருளாதார நிபுணருமான தாதாபாய் நௌரோஜி 20–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தெற்கு இலண்டனில் வசித்த இல்லத்துக்கு 'புளூ பிளேக்' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் 75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, அந்தக் கட்டடத்தில் நீலத்தகடானது புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

அந்தத்தகட்டில், "இந்தியாவின் தேசியவாதியும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருமான தாதாபாய் நௌரோஜி (1825–1917) வசித்த வீடு இது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமை தாதாபாய் நௌரோஜியையே சேரும். தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை பி.ஆர்.அம்பேத்கர் ஆகியோர் இலண்டனில் வசித்த இல்லங்களுக்கு ஏற்கெனவே 'புளூ பிளேக்' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

5. 2023–இலிருந்து 20% எத்தனால் பெட்ரோல்

இந்தியாவில் வரும் அடுத்த ஆண்டிலிருந்து எத்தனால் கலந்த பெட்ரோல் விநியோகிக்கப்படும் என்று நடுவண் அரசு அறிவித்துள்ளது. இது குறித்து எண்ணெய் வளத்துறை அமைச்சர் ஹர்தீப் புரி கூறியதாவது:

20% எத்தனால் கலந்த பெட்ரோல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இந்தியா முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் விநியோகிக்கப்படும். எஞ்சிய பகுதிகள் முழுவதும் எத்தனால் பெட்ரோல் விநியோகம் 2025–ஆம் ஆண்டுக்குள் விரிவுபடுத்தப்படும் என்றார் அவர். கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கவும் சுற்றுசூழலைப் பாதுகாக்கவும் பெட்ரோலில் எத்தனால் கலக்கப்படுகிறது. ஏற்கெனவே, கடந்த மாதத்துக்குள் 10 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல் விநியோக்கப்பட வேண்டும் என்ற இலக்கை இந்தியா அதற்கு முன்னரே நிறைவேற்றியுள்ளது.

---

1. இந்தியாவில், 'டிஜிட்டல் கடன் வழங்கும் நடவடிக்கைகளை' ஒழுங்குபடுத்துகிற நிறுவனம் எது?

அ. நிதி அமைச்சகம்

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ. இந்திய தேசிய கொடுப்பனவு கழகம்

ஈ. NITI ஆயோக்

✓ டிஜிட்டல் கடன் வழங்கும் நடவடிக்கைகளுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிகளை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்டுள்ளது. மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்படும் அல்லது சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களால் மட்டுமே கடன் வழங்குதலை மேற்கொள்ள முடியும் என்றும் இந்திய ரிசர்வ் வங்கி குறிப்பிட்டுள்ளது. இணையவழி கடன் வழங்கும் முறைமைகள்மூலம் கடன் வழங்குவதால் வரும் சிக்கல்களைத் தணிக்கும் முயற்சியாக இது வெளியிடப்பட்டுள்ளது.

2. 'இமயமலை தாண்டிய பல பரிமாண இணைப்பு வலையமைப்புடன்' தொடர்புடைய நாடுகள் எவை?

அ. இந்தியா-நேபாளம்

ஆ. சீனா-நேபாளம் ☑

இ. இந்தியா-வங்காளதேசம்

ஈ. சீனா-வங்காளதேசம்

✓ 'இமயமலை தாண்டிய பல பரிமாண இணைப்பு வலையமைப்பின்'கீழ் நேபாளத்துடன் எல்லை தாண்டிய இரயில் போக்குவரத்துக்கான சாத்தியக்கூறு ஆய்வுக்கு நிதியளிக்க சீனா ஒப்புக்கொண்டுள்ளது. இது பட்டை மற்றும் பாதை முனைவின் ஒருபகுதியாகும். நாட்டில் சீனாவின் உதவி திட்டங்களுக்கு $118 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்க சீனா உறுதியளித்தது. மானிய உதவியின்கீழ் கெய்ருங்-காத்மாண்டு இரயில்வே போக்குவரத்துக்கான சாத்தியக்கூறு ஆய்வை சீனா மேற்கொள்ளும்.

3. 'SPARK' என்னும் மெய்நிகர் விண்வெளி தொழில்நுட்ப பூங்காவை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ. NITI ஆயோக்

ஆ. DRDO

இ. ISRO ☑

ஈ. BEL

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) சமீபத்தில் அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக, மெய்நிகர் விண்வெளி தொழில்நுட்ப பூங்காவான 'SPARK'ஐ அறிமுகம் செய்தது. இது ISRO தலைவர் S சோமநாத்தால் தொடங்கப்பட்டது. இந்த மெய்நிகர் விண்வெளி அருங்காட்சியகத்தில் ஏவுகலங்கள், செயற்கைக்கோள்கள், அறிவியல் திட்டங்கள் மற்றும் இந்தியாவின் விண்வெளித் துறையின் முன்னோடிகள் தொடர்பான பல ஆவணங்கள், படங்கள் மற்றும் காணொளிகள் உள்ளன.

4. அடல் ஓய்வூதியத்திட்ட விதிகளில் சமீபத்திய மாற்றங்களின்படி, எவ்வகை பயனாளிகள் விலக்கப்பட்டுள்ளனர்?

அ. நடுவணரசு ஊழியர்கள்

ஆ. மாநில அரசு ஊழியர்கள்

இ. வருமான வரி செலுத்துவோர் ☑

ஈ. வெளிநாடுவாழ் இந்தியர்கள்

✓ 2022 அக்.1 முதல் அமலுக்கு வரும் அடல் ஓய்வூதியத் திட்ட விதிகளில் அரசாங்கம் மாற்றங்களைச் செய்துள்ளது. நிதி அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, வருமான வரி செலுத்துபவராக இருக்கும் அல்லது வருமான வரி செலுத்துபவராக இருக்கும் எந்தவொரு குடிமகனும் இதில் சேரத் தகுதிபெற மாட்டார்கள். வருமான வரி செலுத்தும் முதலீட்டாளர் அக்.1 அல்லது அதற்குப்பிறகு இத்திட்டத்தில் சேர்ந்தால், அவர்கள் கணக்கு மூடப்படும்.

5. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'NIPAM' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ. மின்னணுப் பொருட்கள் உற்பத்தி

ஆ. அறிவுசார் சொத்து ☑

இ. பருவநிலை மாற்றம்

ஈ. உணவு விநியோகம்

✓ தேசிய அறிவுசார் சொத்து விழிப்புணர்வு இயக்கம் (NIPAM) என்பது அறிவுசார் சொத்து விழிப்புணர்வை பரப்புவதற்கும் அடிப்படை பயிற்சிகளை வழங்குவதற்குமான ஒரு திட்டமாகும். 2022 ஆகஸ்ட்.15 வரையிலான காலக்கெடுவிற்கு முன்னதாகவே, 2022 ஜூலை.31 அன்று ஒரு மில்லியன் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் இலக்கை இந்தத் திட்டம் பூர்த்தி செய்துள்ளது.

6. 2024 பாரிஸ் ஒலிம்பிக்கின் அதிகாரப்பூர்வ முழக்கவரி (Slogan) என்ன?

அ. Inclusive and Impressive

ஆ. Games Wide Open ☑

இ. Global Partnership

ஈ. Brotherly and Beautiful

✓ 2024 பாரிஸ் ஒலிம்பிக்கின் அமைப்பாளர்கள் இரசிகர்களுக்கான நுழைவுச்சீட்டுகளின் விலைகளை அறிவித்ததை அடுத்து அதற்கான அதிகாரப்பூர்வ முழக்கவரி (Games Wide Open) வெளியிடப்பட்டது. பிரெஞ்சு மொழியில், 'Ouvrons Grand les Jeux' என்பது அம்முழக்கவரி. 2024 கோடைகால ஒலிம்பிக்ஸ் அல்லது 33ஆவது ஒலிம்பியாட் 2024 ஜூலை–ஆகஸ்டில் நடைபெறவுள்ளது.

7. பன்னாட்டு போர் விமானங்கள் பயிற்சியான, 'பிட்ச் பிளாக்'ஐ நடத்தும் நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ஆஸ்திரேலியா ☑

இ. பிரான்ஸ்

ஈ. இஸ்ரேல்

✓ பன்னாட்டு போர் விமானங்கள் பயிற்சியான, 'பிட்ச் பிளாக்' நிகழ்வை ஆஸ்திரேலியா நடத்துகிறது. பதினேழு நாடுகள் பங்கேற்கும் பயிற்சியில் இந்தியா பங்கேற்கவுள்ளது. இதில் 17 நாடுகளைச்சேர்ந்த சுமார் 100 விமானங்கள் மற்றும் 2,500 இராணுவ வீரர்கள் பங்கேற்றுள்ளனர். மற்ற பங்கேற்பாளர்களுள் ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, நெதர்லாந்து, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், கொரிய குடியரசு, சிங்கப்பூர், தாய்லாந்து, UAE, UK மற்றும் US ஆகியவை அடங்கும்.

8. அண்மையில் வெளியான, 'லாக் டௌன் லிரிக்ஸ்' என்ற நூலை எழுதியவர் யார்?

அ. சஞ்சுக்தா தாஷ் ☑ ஆ. இரஸ்கின் பாண்ட்

இ. அருந்ததி ராய் ஈ. விக்ரம் சேத்

✓ கவிஞர் சஞ்சுக்தா தாஷ் எழுதிய கவிதைகளின் தொகுப்பான, 'லாக் டௌன் லிரிக்ஸ்' என்ற நூலை ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் வெளியிட்டார். ஒடியா மொழிக் கவிஞரான தாஷ், ஒடியா மொழியில் மூன்று கவிதைத் தொகுப்புகளை எழுதியுள்ளார். 'லாக் டௌன் லிரிக்ஸ்' என்பது ஆங்கிலத்தில் வெளிவரும் இவரது முதல் நூலாகும். இது தொற்றுநோய் காலகட்டத்தில் ஏற்பட்ட அவரது அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது.

9. கூகுளுடன் இணைந்து போக்குவரத்து உமிழ்வுத் தரவை வெளியிட்ட முதல் இந்திய நகரம் எது?

அ. சென்னை

ஆ. புனே

இ. ஔரங்காபாத் ☑

ஈ. கௌகாத்தி

✓ கூகுளிலிருந்து Environmental Insights Explorer (EIE) தரவை வெளியிடும் நாட்டின் முதல் நகரமாக ஔரங்காபாத் மாறியுள்ளது. EIE அம்சத்தின்கீழ், நகரங்கள் CO_2 உமிழ்வு மூலங்களை அளவிடுகின்றன, பகுப்பாய்வு நடத்துகின்றன மற்றும் அவ்வுமிழ்வைக் குறைப்பதற்கான உத்திகளை அடையாளம் காணுகின்றன. இந்தியாவில், EIE அம்சமானது ஔரங்காபாத், பெங்களூரு, சென்னை மற்றும் புனே ஆகிய நகரங்களுக்கு மட்டுமே கிடைக்கிறது; மேலும், போக்குவரத்து உமிழ்வுத் தரவை பொதுவில் வெளியிடும் முதல் நகரம் ஔரங்காபாத் ஆகும்.

10. 'வைப்பீட்டாளருக்குப் போதித்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதலுக்கான' நிதியத்தைப் பராமரிக்கின்ற அமைப்பு எது?

அ. நிதி அமைச்சகம்

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ. இந்திய தேசிய கொடுப்பனவு கழகம்

ஈ. NITI ஆயோக்

✓ சேமிப்பு, நடப்புக்கணக்குகள் அல்லது முதிர்வு தேதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் கோரப்படாத வைப்புகள் யாவும் கோரப்படாத வைப்புத்தொகைகள் என வரையறுக்கப்படுகிறது. இந்தத் தொகைகள், வங்கிகளால் இந்திய ரிசர்வ் வங்கியால் பராமரிக்கப்படும், 'வைப்பீட்டாளருக்குப் போதித்தல் & விழிப்புணர்வு ஏற்படுத்துதலுக்கான' நிதியத்திற்கு மாற்றப்படுகின்றன. அந்தந்த வங்கிகளிலிருந்து இதுபோன்றுள்ள வைப்புத்தொகைகளை பெறுவதற்கு ரிசர்வ் வங்கி அவ்வைப்புக்குரிய மக்களை ஊக்குவித்து வருகிறது. இருப்பினும், கோரப்படாத வைப்புகளின் அளவு அதிகரித்துக் கொண்டேதான் செல்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. விடுதலையின் 75ஆவது ஆண்டில் 75 ராம்சர் தளங்கள். இராம்சர் தளங்களின் பட்டியலில் தமிழ்நாட்டில் நான்கு இடங்கள் உள்பட இந்தியா மேலும் 11 ஈரநிலங்களை சேர்த்துள்ளது.

சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டில் 13,26,677 ஹெக்டேர் பரப்பளவைக்கொண்ட 75 ராம்சர் தளங்களை உருவாக்க ராம்சர் தளங்களின் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த நான்கு இடங்கள் உள்பட மேலும் 11 ஈரநிலங்களை இந்தியா சேர்த்துள்ளது.

11 புதிய தளங்கள்: தமிழ்நாட்டில் நான்கு (4) தளங்கள், ஒடிசாவில் மூன்று (3), ஜம்மு & காஷ்மீரில் இரண்டு (2) மற்றும் மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா ஒன்று (1) ஆகியவை அடங்கும். இந்தத் தளங்களின் பெயர் சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மற்றும் அவற்றின் வளங்களை புத்திசாலித்தனமாக பயன்படுத்த உதவும்.

1971ஆம் ஆண்டு ஈரானின் ராம்சர் நகரில் கையெழுத்திடப்பட்ட ராம்சர் உடன்படிக்கை நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியா பிப்ரவரி 1, 1982இல் இதில் கையெழுத்திட்டது. 1982 முதல் 2013 வரை, ராம்சர் தளங்களின் பட்டியலில் மொத்தம் 26 தளங்கள் சேர்க்கப்பட்டன. 2014 முதல் 2022 வரை, நாடு 49 புதிய ஈரநிலங்களை ராம்சார் தளங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்த ஆண்டிலேயே (2022) மொத்தம் 28 இடங்கள் ராம்சர் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக ராம்சர் தளங்களுடன் (14 எண்கள்) தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அதைத் தொடர்ந்து உ.பி. யில் 10 ராம்சர் தளங்கள் உள்ளன.

260.47 ஹெக்டர் பரப்பளவு கொண்ட சித்திரங்குடி பறவைகள் சரணாலயம், 94.3 ஹெக்டர் பரப்பளவுகொண்ட சுசீந்திரம் தேரூர் சதுப்புநில வளாகம், 94.23 ஹெக்டர் பரப்பளவு கொண்டவடுவூர் பறவைகள் சரணாலயம், 112.64 ஹெக்டர் பரப்பளவு கொண்டகாஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் ஆகியவை தமிழகத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஈரநிலம் 1989 முதல் பாதுகாக்கப்பட்ட பகுதியாகவும், பறவைகள் சரணாலயமாகவும் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு வனத்துறை, ராமநாதபுரம் கோட்டத்தின் கீழ் வருகிறது. சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் குளிர்காலத்தில் புலம்பெயர்ந்த பறவைகளுக்கு ஏற்ற இடமாகும். 30 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 50 பறவைகள் தளத்தில் இருந்து பதிவாகியுள்ளன. இவற்றில் 47 நீர்ப்பறவைகள் மற்றும் 3 நிலப்பறவைகள். ஸ்பாட்-பில்ட் பெலிகன், லிட்டில் எக்ரெட், கிரே ஹெரான், பெரிய எக்ரேட், ஓபன் பில்ட் நாரை, ஊதா மற்றும் குளம் ஹெரான்கள் தளப்பகுதியில் இருந்து குறிப்பிடத்தக்க நீர்ப்பறவைகள் காணப்படுகின்றன. சித்திரங்குடி விவசாய வயல்களால் சூழப்பட்டுள்ளது, இங்கு ஆண்டு முழுவதும் பல்வேறு பயிர்கள் விளைகின்றன. ஈரநிலம் பல மீன்கள், நீர்வீழ்ச்சிகள், மொல்லஸ்கள், நீர்வாழ் பூச்சிகள் மற்றும் அவற்றின் லார்வாக்கள் ஆகியவை நீர்ப்பறவைகளுக்கு நல்ல உணவு ஆதாரங்களை உருவாக்குகின்றன. விவசாய நோக்கங்களுக்காக சதுப்பு நிலத்தை சுற்றியும் உள்ளேயும் பாசனத்திற்காக நிலத்தடி நீர் எடுக்கப்படுகிறது.

சுசீந்திரம் தேரூர் சதுப்பு நில வளாகம் சுசீந்திரம்-தேரூர் மணக்குடி பாதுகாப்பு காப்பகத்தின் ஒரு பகுதியாகும். இது ஒரு முக்கியமான பறவைப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு, மத்திய ஆசியாவின் புலம்பெயர்ந்த பறவைகளின் தெற்கு முனையில் அமைந்துள்ளது. இது பறவைகள் கூடு கட்டும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. இது ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பறவைகளை ஈர்க்கிறது. தேரூரை நம்பியுள்ள மொத்த மக்கள் தொகை சுமார் 10,500. மக்கள்தொகையில் 75% வாழ்வாதாரம் விவசாயத்தை சார்ந்துள்ளது, இது தேரூர் குளத்தில் இருந்து வெளியாகும் நீரை நம்பியே உள்ளது. மனிதனால் உருவாக்கப்பட்ட, இந்த உள்நாட்டு குளம் எப்போதும் வற்றாதது. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பேடுகள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் பசும்குளம், வெஞ்சிக்குளம், நெடுமருதுகுளம், பெரும்குளம், எலமிச்சிக்குளம், கோணடுங்குளம் ஆகிய இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பகுதியில் சுமார் 250 வகையான பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவற்றில் 53 புலம்பெயர்ந்தவை, 12 உள்ளூருக்கு உட்பட்டவை.

வடுவூர் பறவைகள் சரணாலயம் 112.638 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ளது, இது ஒரு பெரிய, மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்ப்பாசன ஏரியாகும். புலம்பெயர்ந்த பறவைகளுக்கான தங்குமிடமாகவும் இது உள்ளது. ஏனெனில் இது உணவு, தங்குமிடம் மற்றும் இனப்பெருக்கம் செய்வதற்கான பொருத்தமான சூழலை வழங்குகிறது. இந்த நீர்ப்பாசனக் குளங்கள் சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தாலும், அவற்றின் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் பற்றி மிகக் குறைவாகவே அறியப்படுகிறது. இந்த தொட்டிகள் குடியுரிமை மற்றும் குளிர்கால நீர் பறவைகளின் நல்ல எண்ணிக்கையை அடைக்கும் திறனைக் கொண்டுள்ளன, ஆனால் இதை உறுதிப்படுத்த எந்த ஆய்வும் செய்யப்படவில்லை.

காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே உள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இது1989 இல் அறிவிக்கப்பட்டது. பல புலம்பெயர்ந்த ஹெரான் இனங்களின் கூடு கட்டும் இடமாக இது குறிப்பிடத்தக்கது. அவை அங்குள்ள பாபுல் மரங்களின் முக்கிய வளர்ச்சியில் உள்ளன. புலம்பெயர்ந்த நீர்ப்பறவைகளின் இனப்பெருக்கம் அக்டோபர் மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கு இடையில் இங்கு வந்து சேர்க்கிறது. புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 11 தளங்களின் மொத்த பரப்பளவு 76316 ஹெக்டர் ஆகும்.

2. வெளிச்சந்தையில் தமிழ்நாடு அரசின் புதிய உப்பு விற்பனை: முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

வெளிச்சந்தையில் தமிழக அரசு புதிய உப்பு விற்பனை செய்யப்படவுள்ளது. 'நெய்தல்' எனப்பெயரிடப்பட்டுள்ள இந்த உப்பினை முதல்வர் மு க ஸ்டாலின் அறிமுகம் செய்து வைத்தார்.

---

3. நெல்லை, அகத்தியர் மலையில் நாட்டின் 32ஆவது யானைக்காப்பகம்

நாட்டிலுள்ள 31 யானைக்காப்பகங்களோடு 32ஆவது யானைக்காப்பகமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகத்தியர் மலை அர்ப்பணிக்கப்படுவதாக நடுவண் சுற்றுச்சூழல், வனம், பருவநிலை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தெரிவித்தார். இந்த அகத்தியர் மலையில் சுமார் 1,197 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் யானைகள் பாதுக்காக்கப்பட்ட பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

---

4. கடல்நீரை மின்பகு பொருளாக்கி எரிய வைக்கப்படும் LED விளக்கு: நடுவணரசு அறிமுகம்

கடல்நீரை மின்பகுபெருளாக (எலக்ட்ரோலைட்) பயன்படுத்தி எரிய வைக்கப்படும் நாட்டின் முதல் உப்பு நீர் LED விளக்கை சென்னையில் நடுவண் அமைச்சர் ஜிதேந்திர சிங் அறிமுகப்படுத்தினார்.

LED விளக்குகளை இயக்குவதற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மின்முனைகளுக்கு இடையே கடல்நீரை எலக்ட்ரோலைட்டாகப் பயன்படுத்தி விளக்குகளை எரிய வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த விளக்கிற்கு 'ரோஷினி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

---

5. இந்தியாவில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்ப்பயிற்சி: பாகிஸ்தான் பங்கேற்பு

இந்தியாவில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்ப்பயிற்சியில் பாகிஸ்தான் பங்கேற்கவுள்ளது. இதுதொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அசிம் இப்திகார் கூறியதாக அந்நாட்டில் வெளியாகும் 'தி எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன்' நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு சார்பில் இந்தியாவில் அக்டோபர் மாதம் பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச போர்ப்பயிற்சி நடைபெறவுள்ளது. இந்த ஆண்டு இந்தியா தலைமையில் அந்தப்பயிற்சி நடைபெறவுள்ளது. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் பாகிஸ்தான் உறுப்பினர் என்பதால் போர்ப்பயிற்சியில் பங்கேற்கும்.

இந்தியா, பாகிஸ்தான் இராணுவங்கள் இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிரான போர்ப்பயிற்சியில் ஏற்கெனவே ஈடுபட்டுள்ளன. எனினும் இந்தியாவில் நடைபெறும் போர்ப்பயிற்சியில் பாகிஸ்தான் இராணுவம் பங்கேற்பது இதுவே முதல்முறை என்று தெரிவித்துள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷியா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. அந்த அமைப்பு சார்பில் அக்டோபரில் நடைபெறவுள்ள போர்ப்பயிற்சி ஹரியானா மாநிலம் மானேசாரில் நடைபெறவுள்ளது.

---

6. வானொலி செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயணசுவாமி காலமானார்

அகில இந்திய வானொலியின் முதல் பெண் செய்தி வாசிப்பாளரான சரோஜ் நாராயணசுவாமி (87) வயது முதிர்வு காரணமாக மும்பையில் சனிக்கிழமை காலமானார். தஞ்சாவூரைப் பூர்விகமாகக் கொண்ட அவர் மும்பையில் வளர்ந்தவர். அகில இந்திய வானொலியில் சுமார் 35 ஆண்டு காலம் தமிழ் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றிய அவர், இத்துறையில் பெண்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். தமிழ்த்திரைப்படங்கள், ஆவணப்படங்களிலும் அவர் பணியாற்றியுள்ளார். செய்தி ஒலிபரப்புத்துறையில் அவரது பங்களிப்பை பாராட்டி தமிழக அரசு அவருக்கு 'கலைமாமணி' பட்டம் அளித்து கௌரவித்துள்ளது.

1. 'SMILE-75' என்ற முனைவை அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?

அ. பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

✓ இந்திய அரசாங்கத்தின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது, "SMILE: Support for Marginalised Individuals for Livelihood and Enterprise" என்பதன்கீழ், 'SMILE-75' என்ற முனைவைத் தொடங்கியுள்ளது. இரக்கும் செயலில் ஈடுபடும் நபர்களுக்கு மறுவாழ்வளிக்கும் நோக்கில் 75 மாநகராட்சிகளை நடுவண் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் அடையாளம் கண்டுள்ளது. 2025-26 வரையிலான 'SMILE' திட்டத்திற்காக சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் மொத்தம் ₹100 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது.

2. 'உதராசக்தி' என்ற இருதரப்பு விமானப்பயிற்சியை நடத்திய நாடு எது?

அ. ஜப்பான்

ஆ. வங்காளதேசம்

இ. மலேசியா ☑

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ 'உதராசக்தி' என்று பெயரிடப்பட்ட இருதரப்பு விமானப்பயிற்சியை மலேசியா நடத்துகிறது. இந்தப் பயிற்சியில் இந்திய வான்படையின் (IAF) ஒரு குழு பங்கேற்கிறது. 4 நாள் நடக்கும் இப்பயிற்சியில் இரு வான்படைகளுக்கு இடையே பல்வேறு வான்வழிப் போர் பயிற்சிகள் அடங்கும். சுகோய்-30 போர் விமானங்களைக் கொண்டு நடத்தப்படும் இந்த இருதரப்பு வான்படை பயிற்சியானது முதன்முதலாக கடந்த 2018-இல் நடத்தப்பட்டது.

3. 2022 ஜூலையில் பதிவான நுகர்வோர் விலைக்குறியீடு அடிப்படையிலான பணவீக்க சதவீதம் என்ன?

அ. 4.71%

ஆ. 5.71%

இ. 6.71% ☑

ஈ. 7.71%

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட தரவுகளின்படி, நுகர்வோர் விலைக்குறியீடு (CPI) அடிப்படையிலான பணவீக்கம் ஜூலை மாதத்தில் 7.01 சதவீதத்திலிருந்து 6.71 சதவீதமாக குறைந்துள்ளது. இருப்பினும், தொழிற்துறை உற்பத்திக்குறியீடு மே மாதத்தில் காணப்பட்ட 19.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதத்தில் 12.3 சதவீதமாக வளர்ந்துள்ளது.

4. அண்மையில், 'DST ஸ்டார்ட்அப் உற்சவத்தை' ஏற்பாடு செய்த நடுவண் அமைச்சகம் எது?

அ. MSME அமைச்சகம்

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஈ. பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

विज्ञान एवं प्रौद्योगिकी मंत्रालय
MINISTRY OF SCIENCE AND TECHNOLOGY
सत्यमेव जयते

✓ நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது DST ஸ்டார்ட்அப் உற்சவத்தை ஏற்பாடு செய்தது. நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சரின் கூற்றுப்படி, தற்போது 105 ஸ்டார்ட்அப்கள் உள்ளன;

அவற்றில் 49 சதவீத ஸ்டார்ட்–அப்கள் அடுக்கு–2 மற்றும் அடுக்கு–3 நகரங்களைச் சேர்ந்தவையாக உள்ளன. இந்த நிகழ்வில் 75 தாக்கம் நிறைந்த அடைவக ஸ்டார்ட்அப்கள், NIDHI–Seedஆல் ஆதரிக்கப்படும் 75 தாக்கம் நிறைந்த ஸ்டார்ட்அப்கள் மற்றும் NIDHI–EIRஆல் ஆதரிக்கப்படும் 75 தாக்கம் நிறைந்த ஸ்மார்ட் ஸ்டார்ட்அப்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சிறப்புவாய்ந்த நூல்கள் வெளியிடப்பட்டன.

5. அண்மையில் அறிவிக்கப்பட்ட, 'அகத்தியர் மலை யானைகள் காப்பகம்' அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. தெலுங்கானா

✓ அகத்தியர் மலையில் உள்ள 1,197.48 சதுர கிலோமீட்டர் நிலத்தை யானைகள் காப்பகமாக அறிவிக்கும் தமிழ்நாட்டு வனத்துறையின் பரிந்துரையை நடுவணரசு ஏற்றுக்கொண்டதாக நடுவண் சுற்றுச்சூழலமைச்சர் பூபேந்தர் யாதவ் அறிவித்துள்ளார். நீலகிரி–கிழக்குத்தொடர்ச்சிமலை, கோயம்புத்தூரில் அமைந்துள்ள நீலம்பூர் அமைதிப்பள்ளத்தாக்கு, திருவில்லிபுத்தூர் மற்றும் ஆனைமலை ஆகிய நான்கு யானைகள் காப்பகங்கள் ஏற்கனவே தமிழ்நாட்டில் உள்ள நிலையில் தற்போது இது தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மொத்தம் 31 யானைகள் காப்பகங்கள் உள்ளன.

6. 'மெய்நிகரான இந்திய மூலிகைத் தோட்டத்திற்கான' இணையதளத்தை உருவாக்கிய நிறுவனம் எது?

அ. இந்திய மானுடவியல் ஆய்வு நிறுவனம்

ஆ. இந்திய தாவரவியல் ஆய்வு நிறுவனம் ☑

இ. இந்திய வன ஆய்வு நிறுவனம்

ஈ. இந்திரா காந்தி தேசிய வன அகாதெமி

भारतीय वनस्पति सर्वेक्षण
BOTANICAL SURVEY OF INDIA

✓ இந்தியாவின் மிகப்பெரிய இணையவழி மூலிகைத் தோட்ட தரவுத்தளமான, 'Indian Virtual Herbarium' இணைய தளத்தை நடுவண் சுற்றுச்சூழலமைச்சர் பூபேந்தர் யாதவ் தொடங்கி வைத்தார். இந்த இணையதளம், 'விடுதலை அமுதப்பெருவிழா' மற்றும் 'டிஜிட்டல் இந்தியா' கட்டமைப்பின்கீழ் இந்திய தாவரவியல் ஆய்வு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய தாவரவியல் ஆய்வு நிறுவனம் என்பது நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு துணை அலுவலகமாகும்.

7. SEBI–இன் சந்தை தரவு ஆலோசனைக் குழுவின் தலைவர் யார்?

அ. அஜை தியாகி

ஆ. KV காமத்

இ. ஆஷிஷ்குமார் சௌகான்

ஈ. MS சாஹூ ☑

✓ ஒரு உறுப்பினரைக் குறைத்து மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை இருபதாக மாற்றுவதன்மூலம் SEBI அதன் சந்தை தரவு ஆலோசனைக் குழுவை மறுசீரமைத்துள்ளது. NSE–இன் முன்னாள் மேலாண்மை இயக்குநர் (MD) மற்றும் தலைமைச் செயல் அதிகாரி (CEO) விக்ரம் லிமாயேவுக்குப் பதிலாக ஆஷிஷ்குமார் சௌகான் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். IBBI–இன் முன்னாள் தலைவர் MS சாஹூ ஆலோசனைக்குழுவின் தலைவராக உள்ளார்.

8. அண்மையில் சுவிஸ் ஓபனை வென்ற காஸ்பர் ரூட் சார்ந்த நாடு எது?

அ. சுவிச்சர்லாந்து **ஆ. நார்வே ☑**

இ. பிரான்ஸ் ஈ. இத்தாலி

✓ ஸ்டாடில் நடந்த சுவிஸ் ஓபன் இறுதிப்போட்டியில் நார்வேயின் காஸ்பர் ரூட் இத்தாலியின் மேத்தியோ பெர்ரெத்தினி அவர்களை வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றினார். இது காஸ்பர் ரூட் பெறும் ஒன்பதாவது பட்டமாகும். சமீபத்தில் அவர் ஒற்றையர் தரவரிசையில் உலகின் நெ:5ஆவது வீரரானார். இதன்மூலம் வரலாற்றிலேயே இந்தத் தரவரிசையில் மிகவுயர்ந்த இடத்துக்குச் சென்ற முதல் நார்வே டென்னிஸ் வீரர் ஆனார் அவர்.

9. 2022–இல் காணப்படும் பருத்தி ரீதியான சவால்கள் குறித்த மாநாட்டை நடத்தும் நகரம் எது?

அ. திருப்பூர்

ஆ. கோயம்புத்தூர் ☑

இ. கரூர்

ஈ. சேலம்

✓ இந்திய பருத்தி கூட்டமைப்பானது இந்திய பருத்தி சங்கத்துடன் இணைந்து '2022ஆம் ஆண்டில் காணப்படும் பருத்தி ரீதியான சவால்கள்' குறித்த இரு நாள் மாநாட்டை நடத்துகிறது. இம்மாநாடு, தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் நகரத்தில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து பங்குதாரர்களுடனும் பல்வேறு குழு விவாதங்கள் நடைபெறும்.

10. இந்தியாவுக்காக தங்கப்பதக்கம் வென்ற ஹர்மீத் தேசாய் மற்றும் சத்தியன் ஞானசேகரன் சார்ந்த விளையாட்டு எது?

அ. பளு தூக்குதல்

ஆ. டேபிள் டென்னிஸ் ☑

இ. குத்துச்சண்டை

ஈ. பூப்பந்து

✓ 2022 காமன்வெல்த் விளையாட்டுகளின் இறுதிப்போட்டியில் சிங்கப்பூரை வீழ்த்தி இந்தியாவின் டேபிள் டென்னிஸ் அணி தனது ஆடவர் அணி சாம்பியன்ஷிப் பட்டத்தை தக்கவைத்துக்கொண்டது. அந்த அணியில் ஹர்மீத் தேசாய், சத்தியன் ஞானசேகரன் மற்றும் ஷரத் கமல் ஆகியோர் உள்ளனர். கலப்பு பாட்மிண்டன் போட்டியில் இந்திய அணி வெள்ளிப்பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சாதனங்கள் மற்றும் கருவிகளை பாதுகாப்புத்துறை அமைச்சர் புது தில்லியில் இராணுவத்திடம் ஒப்படைத்தார்

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சாதனங்கள் மற்றும் கருவிகளை பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங், புது தில்லியில் இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்தார்.

எதிர்கால காலாட்படை சிப்பாய்க்கான சாதனம் (F–INSAS), உள்ளிட்ட புதிய தலைமுறை கண்ணிவெடியான நிபுன், மேம்பட்ட திறன்கொண்ட தானியங்கி தகவல் தொடர்பு சாதனங்கள், பீரங்கிகளுக்கான மேம்படுத்தப்பட்ட குறி வைக்கும் சாதனம் மற்றும் அதிநவீன தெர்மல் இமேஜர்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

---

2. உலகளாவிய பொது சுகாதார மாநாடு: டிசம்பர்.6–இல் தொடக்கம்

உலகளாவிய பொது சுகாதார மாநாடு, சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் டிச.6–ஆம் தேதி தொடங்கவுள்ளதாக பொது சுகாதாரத்துறை இயக்குநரகம் தெரிவித்தது. உலகளாவிய பொது சுகாதார மாநாடு வரும் டிச.6 முதல் 8 வரை மாமல்லபுரத்தில் நடத்தப்படவுள்ளது. இந்த மாநாட்டின் கருப்பொருள், 'பொது சுகாதாரத்தின் சிறப்புகள்' என்பதாகும்.

---

3. Dr அப்துல் கலாம் விருது உள்பட பல்வேறு விருதுகள்: முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்

அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறப்பான பங்களிப்பைச் செய்த முனைவர் ச இஞ்ஞாசிமுத்துவுக்கு, Dr ஆ ப ஜெ அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. அவருக்கு, ₹5 இலட்சம் காசோலை, 8 கிராம் தங்கப்பதக்கம், சான்றிதழ் அடங்கிய Dr அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது.

துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினை, நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூரைச் சேர்ந்த பா எழிலரசி பெற்றார். இந்த விருதானது ₹5 இலட்சம் காசோலை, தங்க முலாம் பூசப்பட்ட பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

முதலமைச்சரின் நல் ஆளுமை விருது: திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டு மறு வாழ்வு அளித்த சிறப்பான செயலைப்பாராட்டி, அம்மாவட்ட ஆட்சியருக்கும், திருநங்கைகளின் வாழ்வில் நம்பிக்கை ஊட்டி அவர்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்த பணிகளுக்காக செங்கல்பட்டு மாவட்ட சமூக நல அலுவலகத்துக்கும் முதலமைச்சரின் நல் ஆளுமை விருது அறிவிக்கப்பட்டது.

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை சிறப்பாக செயல்படுத்தியதற்காக திண்டுக்கல் மாவட்டம், நீர்நிலைகளை மீட்டுருவாக்கி புனரமைப்பு செய்த பணிகளுக்காக சிவகங்கை மாவட்டம், கருவுற்ற தாய்மார்களின் உடல்நலனை தொழில்நுட்ப உதவியுடன் கண்காணிக்கும் 'தாய்கேர் நெல்லை' திட்டத்தை அறிமுகப்படுத்திய திருநெல்வேலி மாவட்டத்துக்கும் நல் ஆளுமை விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இந்த விருது தலா ₹2 இலட்சமும், பாராட்டுச் சான்றும் கொண்டது.

வேளாண் இயந்திரங்களை இணையதளம், கைப்பேசி செயலி மூலமாக ஆன்–லைன் வழியே வாடகைக்கு விடும் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக வேளாண்மைத் துறை தலைமை பொறியியல் துறைக்கு நல் ஆளுமை விருது அறிவிக்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்ட முதியோர், பெண்கள் ஆகியோரை காப்பகங்களில் வைத்து பராமரித்தும், உரிமை கோரப்படாத இறந்தோரின் உடல்களை உரிய மரியாதையுடன் அடக்கம் செய்யும் திட்டத்தையும் சென்னை பெருநகர காவல் துறை செய்து வருகிறது. இந்தப் பணியைப் பாராட்டி சென்னை பெருநகர காவல் ஆணையரகத்துக்கும் நல் ஆளுமை விருது அறிவிக்கப்பட்டது.

மகளிர் நலனுக்காக சிறந்த சேவைகளை ஆற்றியதாக நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த வானவில் அறக் கட்டளை, சிறந்த சமூக சேவகருக்கான விருது திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஜி பங்கஜம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டது. இந்த விருது 10 கிராம் தங்கப்பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

சிறந்த உள்ளாட்சி அமைப்புகள்: சிறந்த மாநகராட்சிக்கான விருதை சேலம் மாநகராட்சி பெற்றது. ₹25 லட்சத்துக்கான காசோலை அடங்கியது இந்த விருது.

சிறந்த நகராட்சிகளாக முதலிடத்தில் தேர்வான திருவில்லிபுத்தூருக்கு ₹15 இலட்சத்துக்கான காசோலையும், இரண்டாமிடம் பிடித்த குடியாத்தத்துக்கு ₹10 இலட்சத்துக்கான காசோலையும், மூன்றாம் இடம்பிடித்த தென்காசிக்கு ₹5 இலட்சத்துக்கான காசோலையும் வழங்கப்பட்டது.

சிறந்த பேரூராட்சிகளின் வரிசையில், செங்கல்பட்டு மாவட்டம் கருங்குழி பேரூராட்சி முதலிடத்தை பிடித்தது. இரண்டாமிடத்தை கன்னியாகுமரி பேரூராட்சி பிடித்தது. மதுரை மாவட்டம் சோழவந்தான் பேரூராட்சி மூன்றாமிடம் பிடித்தது.

---

4. சென்னை உயர்நீதிமன்றத்தின் 160–ஆவது ஆண்டு தினம்: அஞ்சல்தலை வெளியீடு

விடுதலை நாளையொட்டி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தேசியக்கொடி ஏற்றிவைத்து தலைமை நீதிபதி முனீசுவர் நாத் பண்டாரி மரியாதை செலுத்தியதுடன், நீதிமன்றத்தின் 160–ஆவது ஆண்டு தினத்தையொட்டி, சிறப்பு தபால் தலையையும் வெளியிட்டார்.

1862–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் தேதி தொடங்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் 160–ஆவது ஆண்டு நினைவைப் போற்றும் வகையில், சிறப்பு தபால் தலையை தலைமை நீதிபதி வெளியிட, உயர்நீதிமன்ற மூத்த நீதிபதி துரைசாமி பெற்றுக்கொண்டார்.

1. COVID ஒமைக்ரான் திரிபுக்கான தடுப்பூசிக்கு ஒப்புதல் அளித்த முதல் நாடு எது?

அ. இந்தியா

ஆ. அமெரிக்கா

இ. ஐக்கிய பேரரசு (UK) ☑

ஈ. இத்தாலி



✓ ஒமைக்ரான் திரிபுக்கு சிகிச்சையளிக்கும் COVID தடுப்பூசியை அங்கீகரிக்கும் முதல் நாடாக UK மாறியுள்ளது. UKஇன் மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் ஒழுங்குமுறை ஆணையமும், இதற்கு ஒப்புதல் அளித்த உலகின் முதல் நிறுவனமாக ஆனது. இத்தடுப்பூசி 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர்க்கு பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது கொரோனா வைரஸின் அசல் திரிபு மற்றும் ஒமைக்ரான் BA.1 ஆகிய இரண்டனையும் குறிவைக்கிறது.

2. 'முதலமைச்சர் அனுபிரதி பயிற்சி யோஜனா'வைச் செயல்படுத்துகிற இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. பஞ்சாப்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. குஜராத்

ஈ. கர்நாடகா

✓ இராஜஸ்தான் மாநில அரசாங்கமானது 2021–22இல் 'முதல்வர் அனுபிரதி பயிற்சி யோஜனா' அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின்கீழ், அத்தகைய மாணாக்கர்களுக்கு புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்களின்மூலம் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில், இராஜஸ்தான் மாநில அரசு, ₹17.15 கோடி ஒதுக்கீடு செய்து, இத்திட்டத்தின் கீழ் உள்ள இடங்களின் எண்ணிக்கையை 15,000ஆக உயர்த்தியது. இது பட்டியலினம், பட்டியல் பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கியுள்ளது.

3. நாசியுள் செலுத்தப்படும் COVID தடுப்பூசிக்கான சோதனைகளை முடித்துள்ள மருந்து நிறுவனம் எது?

அ. பாரத் பயோடெக் ☑

ஆ. பயோகான்

இ. டாக்டர் ரெட்டிஸ் நிறுவனம்

ஈ. சீரம் நிறுவனம்

✓ ஹைதராபாத்தைச் சார்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் அதன் நாசியுள் செலுத்தப்படும் COVID தடுப்பூசியான BBV154 இன் மூன்றாம் கட்ட மருத்துவப் பரிசோதனைகளின் தரவை மருந்து கட்டுப்பாட்டாளரிடம் சமர்ப்பித்துள்ளது. இது முதன்மையான இரு தவணை தடுப்பூசி மற்றும் ஒரு பன்முக பூஸ்டர் தடுப்பூசி ஆகிய இரண்டிற்கும் அனுமதி கோரியுள்ளது. ஒரு பன்முக பூஸ்டர் என்பது தடுப்பூசியின் மூன்றாவது அல்லது அடுத்தடுத்த தவணை தடுப்பூசிகள் அதன் முதன்மை தவணையிலிருந்து வேறுபட்டு காணப்படும்.

4. முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயங்கும் நடுவணரசின் பயணிகள் செயலாக்க அமைப்பின் பெயர் என்ன?

அ. டிஜியாத்ரா ☑

ஆ. பாரத யாத்ரா

இ. பிரதமர் டிஜிட்டல் யாத்ரா அபியான்

ஈ. பாரத் ஃபேஸ் RT

✓ தில்லி பன்னாட்டு வானூர்தி நிலைய லிட் (DIAL) நடுவண் அரசின் 'டிஜியாத்ரா' முனைவை அறிவித்தது. இது ஆண்ட்ராய்டு இயங்குதளங்களுக்கான அதன் செயலியின் பீட்டா பதிப்பையும் வெளியிட்டது. 'டிஜியாத்ரா' என்பது முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பயணிகள் செயலாக்க அமைப்பு ஆகும். இந்தத் தொழில்நுட்பத்தின்மூலம், அனைத்து சோதனைச் சாவடிகளும் முகத்தை அடையாளம் காணும் அமைப்பின் அடிப்படையில் பயணிகளின் உள்ளீடுகளை தாமாகவே செயல்படுத்தும்.

5. 'இந்திய பன்னாட்டு கடல்சார் உணவுகள் கண்காட்சி' நடைபெறும் இடம் எது?

அ. சென்னை

ஆ. மும்பை

இ. கொச்சி

ஈ. கொல்கத்தா ☑

✓ இந்திய பன்னாட்டு கடல்சார் உணவுகள் கண்காட்சியின் (IISS) 23ஆவது பதிப்பு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது. கடல் உணவுப்பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA) இந்திய கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கத்துடன் (SEAI) இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்யும்.

6. 2022 – காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், கீழ்க்காணும் எந்த விளையாட்டில் இந்தியா தனது முதல் பதக்கத்தை வென்றது?

அ. கூடைப்பந்து

ஆ. ஸ்குவாஷ்

இ. லான் பௌல்ஸ் (Lawn Bowls) ☑

ஈ. ரக்பி செவன்ஸ்

✓ 2022 – காமன்வெல்த் விளையாட்டுப்போட்டியில் இந்திய மகளிர் புல்வெளி பந்துவீச்சு அணி, அந்த விளையாட்டில் முதன்முறையாக தங்கம் வென்று வரலாறு படைத்தது. மேலும், இவ்விளையாட்டில் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் பதக்கம் இதுவாகும். லவ்லி சௌபே, பிங்கி சிங், நயன்மோனி சைகியா மற்றும் ரூபா இராணி டிர்கி ஆகியோர் தென்னாப்பிரிக்கா அணியை 17–10 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றனர்.

7. கீழ்க்காணும் எந்த மிகப்பெரிய மின்னணு வணிக நிறுவனம் அதன் டெலிவரி சேவைகளை அதிகரிப்பதற்காக இந்திய இரயில்வேயுடன் கூட்டு சேர்ந்துள்ளது?

அ. பிளிப்கார்ட்

ஆ. அமேசான் ☑

இ. பிக்பாஸ்கெட்

ஈ. ஜியோமார்ட்

amazon

✓ அமேசான் இந்தியா தனது ஒப்படைப்பு சேவைகளை அதிகரிப்பதற்காக இந்திய ரயில்வேயுடன் கூட்டிணைந்துள்ளது. 2019ஆம் ஆண்டில் ரயில்வே வலையமைப்புகள்மூலம் விரைவுச்சேவைகளை உருவாக்க இந்திய ரயில்வேயுடன் இணைந்த முதல் இணையவழி டெலிவரி நிறுவனம் இதுவாகும். இந்தக் கூட்டாண்மைமூலம், அமேசான் 110–க்கும் மேற்பட்ட நகரங்களுக்கு இடையேயான வழித்தடங்களில் பொதிகளை கொண்டுசெல்ல முடியும்.

8. 2022 – பார்ச்சூன் 500 பட்டியலில் இடம்பெற்ற ஒரே இந்திய வங்கி எது?

அ. ICICI வங்கி ஆ. HDFC வங்கி

இ. பாரத வங்கி ☑ ஈ. கனரா வங்கி

SBI

✓ அண்மையில் வெளியிடப்பட்ட பார்ச்சூன் 500 பட்டியலில், பாரத வங்கி (SBI) 236ஆவது இடத்தில் இடம்பெற்றுள்ளது. மேலும், இப்பட்டியலில் இந்தியாவிலிருந்து இடம்பெற்ற ஒரே வங்கி இதுவாகும். 2022ஆம் ஆண்டுக்கான பட்டியலில் அமெரிக்க சில்லறை விற்பனையாளர் வால்மார்ட் முதலிடம் பிடித்துள்ளது. ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (LIC) பார்ச்சூன் 500 பட்டியலில் முதன்முறையாக 98ஆம் இடத்தில் உள்ளது. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் 51 இடங்கள் முன்னேறி 104ஆவது இடத்தைப் பிடித்தது; அதே வேளையில் ஐஓசி, ஓஎன்ஜிசி, பிபிசிஎல் உள்ளிட்ட எண்ணெய் மற்றும் எரிசக்தி பொதுத்துறை நிறுவனங்களும் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்தப் பட்டியலில் ஒன்பது இந்திய நிறுவனங்கள் உள்ளன; அவற்றுள் ஐந்து அரசுக்குச் சொந்தமானவை மற்றும் நான்கு தனியார் துறையைச் சேர்ந்தவை.

9. தேஜஸ்வின் சங்கர் என்பவர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் எந்த விளையாட்டில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் ஆனார்?

அ. குண்டெறிதல்

ஆ. உயரந்தாண்டுதல் ☑

இ. மும்முறை தாண்டுதல்

ஈ. தண்டூன்றித் தாண்டுதல்

✓ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஆடவருக்கான உயரந்தாண்டுதலில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை தேஜஸ்வின் சங்கர் பெற்றார். தேசிய சாதனை படைத்த அவர் வெண்கலப்பதக்கத்திற்கான நிகழ்வில் மூன்றாமிடத்தைப் பிடித்தார். 2.29 மீ உயரந்தாண்டி, தேசிய சாதனையை அவர் படைத்துள்ளார்.

10. வழக்கத்திற்கு மாறாக மிகவறண்ட கோடை நிலவுவதைத் தொடர்ந்து, அண்மையில் தண்ணீர் தட்டுப்பாட்டை அறிவித்த நாடு எது?

அ. எகிப்து

ஆ. நெதர்லாந்து ☑

இ. நமீபியா

ஈ. சோமாலியா

✓ வழக்கத்திற்கு மாறாக மிகவறண்ட கோடை நிலவுவதைத் தொடர்ந்தும் எதிர்காலத்தில் மழைப் பொழிவதற்கான எந்தக் கணிப்பும் இல்லாததை அடுத்தும் டச்சு அரசாங்கம் (நெதர்லாந்து) அண்மையில் தண்ணீர் தட்டுப்பாட்டை அறிவித்தது. கடந்த மாதம் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் பெரும் பகுதிகளை கடுமையான வெப்ப–அலைகள் தாக்கியது; புவி வெப்பமடைதலைக் கையாளுவதற்கான முனைவுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு வருகின்றன. டச்சு மக்களில் 2/3 பங்கினர் கடல் மட்டத்திற்கு கீழே வசிப்பதால், நெதர்லாந்தில் வறட்சி என்பது ஒரு கடுமையான சிக்கலாக மாறும். இதனால் ஆறுகளில் வண்டல் மண் படிந்து, நீர் போக்குவரவுக்கு இடையூறு ஏற்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மொத்த விலை பணவீக்கம் 13.93%ஆக சரிவு

கடந்த ஐந்து மாதங்களில் இல்லாத அளவில் ஜூலை மாதம் மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் 13.93 சதவீதமாக குறைந்தது. கடந்த ஜூன் மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் 15.18 சதவீதமாகவும், மே மாதத்தில் 15.88 சதவீதமாகவும் பதிவானது. இதுவே கடந்த ஆண்டு ஜூலையில் 11.57 சதவீதமாக இருந்தது. மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் தொடர்ந்து இரண்டாவது மாதமாக குறைந்துள்ளது. இருப்பினும், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ந்து 16 மாதங்களாக இரட்டை இலக்கத்திலேயே பதிவாகி வருகிறது.

கடந்த ஜூலையில் உணவுப்பொருள் மீதான பணவீக்கம் 10.77 சதவீதமாகவும், ஜூனில் 14.39 சதவீதமாகவும் பதிவானது. மேலும் ஜூனில் காய்கறிகளின் விலை உயர்வு 56.75 சதவீதமாக இருந்த நிலையில், ஜூலையில் இது 18.25 சதவீதமாக சரிந்தது.

எரிபொருள், மின்சாரத்தைப் பொருத்தவரை ஜூலையில் 40.38 சதவீதமாகவும், ஜூனில் 40.38 சதவீதமாகவும் பணவீக்கம் பதிவானது. இதேபோல உற்பத்தி பொருள்கள், எண்ணெய் வித்துக்களின் பணவீக்கம் முறையே 8.16 சதவீதமாகவும், –4.06 சதவீதமாகவும் பதிவானது.

சில்லறை பணவீக்கத்தின் அடிப்படையில்தான் ரிசர்வ் வங்கி பணக்கொள்கையை வகுக்கிறது. அந்த வகையில், சில்லறை பணவீக்கம் கடந்த 7 மாதமாக ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டுக்கு உகந்த அளவில்தான் பதிவாகி வருகிறது. கடந்த ஜூலையில் சில்லறை பணவீக்கம் 6.71 சதவீதமாக பதிவானது. 2022–23 நிதியாண்டில் சில்லறை பண வீக்கம் சராசரியாக 6.7 சதவீதமாக பதிவாகும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

2. மூன்றரை கிமீ நீள 'வாசுகி' சரக்கு இரயில் வெள்ளோட்டம் – 27,000 டன் நிலக்கரியுடன் பயணம்

நாட்டிலேயே நீளமான மற்றும் அதிக சரக்குப்பெட்டிகளை எடுத்துச்செல்லக்கூடிய 'சூப்பர் வாசுகி' சரக்கு இரயில் (3.5 கிமீ நீளம்) திங்கள்கிழமை வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

சத்தீஸ்கர் மாநிலம், கோர்பாவில் இருந்து மகாராஷ்டிரத்தின் நாகபுரிக்கு 295 சரக்குப் பெட்டிகளில் 27 ஆயிரம் டன் நிலக்கரியை ஏற்றிக்கொண்டு, இந்த இரயில் சாதனைப்பயணத்தை மேற்கொண்டது. இந்த இரயிலில் 6 எஞ்சின்கள் பொருத்தப்பட்டிருந்தன. முதலிலும் இறுதியிலும் இரு எஞ்சின்களும் குறிப்பிட்ட இடைவெளிகளில் இடையிடையே மேலும் 4 எஞ்சின்களும் பொருத்தப்பட்டிருந்தன.

இந்திய விடுதலையின் 75 ஆண்டுகள் நிறைவு கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக 'சூப்பர் வாசுகி' இரயிலின் சோதனை இயக்கம் மேற்கொள்ளப்பட்டதென தென்கிழக்கு மத்திய இரயில்வே தெரிவித்தது. நிலக்கரி தட்டுப்பாடு காரணமாக, நாட்டில் இந்த ஆண்டு தொடக்கத்தில் மின்வெட்டுப் பிரச்னை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

3. ஒண்டிவீரன் நினைவு அஞ்சல்தலை ஆகஸ்ட்.20–இல் வெளியீடு: நடுவணரசு தகவல்

விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் நினைவு அஞ்சல்தலை ஆகஸ்ட்.20–ஆம் தேதி திருநெல்வேலியில் வெளியிடப்படுவதாக நடுவணரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரன் பூலித்தேவனின் படைத்தளபதியாக விளங்கி, ஆங்கிலேயரை எதிர்த்து போர் புரிந்தவர் மாவீரன் ஒண்டி வீரன். தமிழ்நாட்டில் கிளர்ந்தெழுந்த முதல் இந்திய விடுதலைப் போரின் தளபதிகளில் ஒருவராக திகழ்ந்த மாவீரன் இவர். ஒரு கையை இழந்த பிறகும் நம்பிக்கையை இழக்காமல் இறுதிவரை களம்நின்று ஆங்கிலேய படைகளை தனியாகச்சென்று அழித்தார் என்றும் அதனால் அவர் 'ஒண்டிவீரன்' எனவும் அழைக்கப்பட்டார்.

ஒண்டி வீரனின் 251–ஆவது நினைவு நாள் ஆகஸ்ட்.20–ஆம் தேதி அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு அன்றைய நாள் அவரின் நினைவு அஞ்சல்தலை வெளியிடப்படும் என நடுவணரசின் அஞ்சல்துறை அறிவித்துள்ளது.

---

1. முதல் இரண்டு ஆண்டுகளில் குழந்தைகளின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு தொடங்கப்பட்ட தேசிய அளவிலான இயக்கத்தின் பெயர் என்ன?

அ. மாத்ரித்வா 1000

ஆ. பாலன் 1000 ☑

இ. புத்ரா 1000

ஈ. சுகன்யா 1000

- ✓ நடுவண் சுகாதார அமைச்சகம் முதல் இரண்டு ஆண்டுகளில் குழந்தைகளின் வளர்ச்சியை மையமாகக்கொண்டு, 'பாலன் 1000' என்ற தேசிய அளவிலான இயக்கம் மற்றும் பெற்றோருக்குரிய செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியது. இச்செயலி குழந்தைப்பருவத்துக்கு முந்தைய மேம்பாடு குறித்த மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ இது பராமரிப்பாளர்களுக்கு அவர்களின் அன்றாட வழக்கத்தில் செய்யவேண்டிய விஷயங்கள் குறித்த நடைமுறை ஆலோசனைகளை வழங்கும் மற்றும் பெற்றோரின் ஐயங்களை தீர்க்க உதவும்.

2. 'வானிலிருந்து மருத்துவம்' என்ற டிரோன் அடிப்படையிலான மருத்துவ சேவையை அறிமுகப்படுத்திய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ. பஞ்சாப்

ஆ. அருணாச்சல பிரதேசம் ☑

இ. குஜராத்

ஈ. கர்நாடகா

- ✓ அருணாச்சல பிரதேச மாநிலமானது செப்பாவிலிருந்து சாயாங் தாஜோவிற்கு, 'வானிலிருந்து மருத்துவம்' என்ற டிரோன் அடிப்படையிலான மருத்துவ சேவையினை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியது. உலகப் பொருளாதார மன்றத்துடன் இணைந்து சுகாதாரம், உழவு மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகியவற்றில் டிரோன் விமானங்களைப் பயன்படுத்தும் முன்னோடித் திட்டத்தை அருணாச்சல பிரதேச அரசு செயல்படுத்த முடிவுசெய்துள்ளது.

3. அண்மையில் தொடங்கப்பட்ட மந்தன் தளத்துடன் தொடர்புடைய துறை எது?

அ. மின்னணு உற்பத்தி

ஆ. தடுப்பூசி

இ. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் ☑

ஈ. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

- ✓ இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் 'மந்தன்' தளத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. தொழிற்துறை மற்றும் அறிவியலாராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சுற்றுச்சூழல் அமைப்பு ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இந்தத் தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இந்தியாவில் தொழில்நுட்பம் சார்ந்த சமூக–தாக்க புத்தாக்கங்கள் மற்றும் தீர்வுகளை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

4. 2022 ஜூலையில் இந்தியாவின் மொத்த விலை பணவீக்கம் எவ்வளவு?

அ. 11.93%

ஆ. 13.93% ☑

இ. 15.93%

ஈ. 17. 93%

- ✓ கடந்த ஐந்து மாதங்களில் இல்லாத அளவில் ஜூலை மாதம் மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் 13.93 சதவீதமாக குறைந்தது. கடந்த ஜூன் மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் 15.18 சதவீதமாகவும், மே மாதத்தில் 15.88 சதவீதமாகவும் பதிவானது. காய்கறிகள், பால் மற்றும் எரிபொருளின் விலை குறைந்ததால் ஜூலை மாதத்தின் விலை குறைந்துள்ளது. இருப்பினும், பதினாறாவது மாதமாக பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் இருந்தது.
- ✓ கனிம எண்ணெய்கள், உணவுப்பொருட்கள், கச்சா பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு, அடிப்படை உலோகங்கள், மின்சாரம், இரசாயனங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள், உணவுப்பொருட்கள் ஆகியவற்றின் விலையேற்றமே இதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது.

5. நலவாழ்வு மையங்களை வலுப்படுத்துவதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்குச் செயல்திறன் அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டை அறிவித்த நிறுவனம் எது?

அ. NITI ஆயோக்

ஆ. தேசிய நலவாழ்வு ஆணையம் ☑

இ. AIIMS

ஈ. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம்

- ✓ தேசிய நலவாழ்வு ஆணையமானது நலவாழ்வு வல்லுநர்கள் மற்றும் நலவாழ்வு மையங்களின் பதிவேடுகளை வலுப்படுத்துவதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்குச் செயல்திறன் அடிப்படையிலான நிதி ஒதுக்கீடுகளை அறிவித்துள்ளது. இந்தச் செயல்திறன் அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தைச் செயல்படுத்த உதவும். 2025-26 நிதியாண்டுக்குள் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்க அலுவலகங்களை அமைப்பதற்காக ₹500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

6. HEI-இன் சமீபத்திய அறிக்கையின்படி, உலகின் அதிக மக்கள்தொகைகொண்ட நகரங்களில், நுண்துகள் PM 2.5-இன் அதிகபட்ச சராசரி அளவைக் கொண்டுள்ள நகரம் எது?

அ. டாக்கா

ஆ. வாரணாசி

இ. புது தில்லி ☑

ஈ. கொழும்பு

- ✓ 'நகரங்களில் காற்றின்தரம் மற்றும் நலம்' என்ற அறிக்கையை அமெரிக்காவைச் சேர்ந்த ஹெல்த் எபெக்ட்ஸ் இன்ஸ்டிடியூட் (HEI) வெளியிட்டுள்ளது. இது உலகெங்கிலும் உள்ள 7,000 நகரங்களின் காற்று மாசுபாடு மற்றும் உலகளாவிய சுகாதார விளைவுகளை பகுப்பாய்வு செய்கிறது; நுண்துகள்கள் (PM2.5) மற்றும் நைட்ரஜன் டை ஆக்சைடு (NO_2) ஆகியவற்றில் இது கவனம் செலுத்துகிறது. இந்த அறிக்கையின்படி, 2010 முதல் 2019 வரையில் ஆய்வு செய்யப்பட்ட 20 நகரங்களுள் 18 நகரங்களில், நுண்துகள் மாசுபாடுகள் (PM2.5) மிகக்கடுமையாக அதிகரித்து உள்ளது. அப்பதினெண் நகரங்களும் இந்தியாவில்தான் உள்ளன. உலகின் அதிக மக்கள்தொகைகொண்ட நகரங்களில், தில்லியில் அதிகபட்ச சராசரியான PM 2.5 அளவு காணப்படுகிறது.

7. 'வித்யா இரதம் – நடமாடும் பள்ளி' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

அ. மத்திய பிரதேசம்

ஆ. பீகார்

இ. அஸ்ஸாம் ☑

ஈ. அருணாச்சல பிரதேசம்

- ✓ அஸ்ஸாம் மாநில முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா ஷர்மா, 'வித்யா இரதம் – நடமாடும் பள்ளி' என்ற திட்டத்தைத் தொடங்கிவைத்தார். சமுதாயத்தில் அடிநிலையிலுள்ள குடும்பங்களைச்சார்ந்த குழந்தைகளுக்கு 10 மாதங்களுக்கு

தொடக்கக்கல்விக்கான அணுகலை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. பத்து மாதங்களுக்குப்பிறகு, குழந்தைகள் வழக்கமான கல்வி முறையில் ஒருங்கிணைக்கப்படுவார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு இலவச மதிய உணவு, சீருடைகள் மற்றும் பாடநூல்கள் வழங்கப்படும்.

8. கீழ்க்காணும் எந்த வரம்பு வரையிலான வேளாண் கடனுக்கு ஆண்டுக்கு 1.5% வட்டி மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது?

அ. ரூ.1 இலட்சம் ஆ. ரூ.2 இலட்சம்

இ. ரூ.3 இலட்சம் ☑ ஈ. ரூ.5 இலட்சம்

✓ பிரதமர் தலைமையிலான நடுவணமைச்சரவை, ₹3 இலட்சம் வரையில், விவசாயிகளுக்கு குறுகியக்காலக் கடன் வழங்கும் அனைத்து வகையான நிதி நிறுவனங்களுக்கும் ஆண்டுக்கு 1.5 சதவீத வட்டி மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. வட்டி மானிய அதிகரிப்பு, வேளாண் துறையில் தொடர்ந்து கடன் வழங்குவதை உறுதி செய்யும் என்பதோடு, கடன் வழங்கும் நிறுவனங்களின் குறிப்பாக மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றின் நிதி நிலையையும் சாத்தியத்தன்மையையும் உறுதி செய்யும்.

9. 'தேசிய பாதுகாப்பு உத்திகள் மாநாடு – 2022' நடைபெறும் இடம் எது?

அ. புனே

ஆ. விசாகப்பட்டினம்

இ. புது தில்லி ☑

ஈ. மைசூரு

✓ உள்துறை அமைச்சர் அமித் ஷா புது தில்லியில் இரு நாள் நடக்கும் தேசிய பாதுகாப்பு உத்திகள் மாநாடு – 2022ஐ தொடங்கி வைத்தார். மையப்படுத்தப்பட்ட கைரேகை தரவுத்தளத்தின் உதவியுடன் வழக்குகளை விரைவாகவும் எளிதாகவும் முடிக்க உதவும் தேசிய தானியங்கி கைரேகை அடையாள அமைப்பையும் அவர் திறந்து வைத்தார்.

10. சமீபத்தில் தங்களை, 'சபாய் மித்ரா சுரக்ஷித் ஷேஹர்' (2022 ஆகஸ்ட் வரையிலும்) என்று அறிவித்துக்கொண்ட நகரங்களின் எண்ணிக்கை என்ன?

அ. 100

ஆ. 250

இ. 500 ☑

ஈ. 750

✓ இந்தியா முழுவதுமுள்ள 500 நகரங்கள் தங்களை, 'சபாய் மித்ரா சுரக்ஷித் ஷேஹர்' என்று அறிவித்துக்கொண்டதாக நடுவண் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த நகரங்கள், அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்ட போதுமான நிறுவனத்திறன், மனிதவளம் மற்றும் உபகரண விதிமுறைகளை அடைந்தது மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணிச்சூழலை வழங்குகிறது. தூய்மை இந்தியா இயக்கம்–நகர்ப்புறம் நிலையான நலவாழ்வு நடைமுறைகளை ஊக்குவிக்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வியட்நாம் – இந்தியா இடையேயான இருதரப்பு இராணுவப் பயிற்சி நிறைவு

வியட்நாம் – இந்தியா இடையேயான இருதரப்பு இராணுவப்பயிற்சி (VINBAX) கடந்த ஆகஸ்ட்.1ஆம் தேதி முதல் ஹரியானாவின் சந்திமந்திரில் தொடங்கி நடைபெற்று வந்தது.

இப்பயிற்சியில், பேரிடர் காலங்களில் மனிதர்களை மீட்க உதவும் இந்தியாவில் தயாரிப்போம் மற்றும் தற்சார்பு இந்தியாவின்கீழ் உருவாக்கப்பட கருவிகள் காட்சிப்படுத்தப்பட்டன. ஐநா அமைதி குழு நடவடிக்கைகளில் ராணுவப் பொறியாளர் மற்றும் மருத்துவக் குழுக்களின் செயல்பாடு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தப் பயிற்சி நடைபெற்றது. வியட்நாமின் இராணுவம் முதன்முதலாக வெளிநாட்டுடன் மேற்கொண்ட முதல் இராணுவப்பயிற்சி இதுவாகும். அடுத்த 'VINBAX' பயிற்சி வியட்நாமில் 2023 ஆண்டு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

2. 'உத்ராசக்தி' இருதரப்பு வான்பயிற்சி நிறைவு

மலேசியாவின் குவான்டன் விமானத்தளத்தில் நடந்த இந்திய வான்படை மற்றும் இராயல் மலேசியன் வான்படை இடையேயான இருதரப்பு விமானப் பயிற்சி 'உத்ராசக்தி' கடந்த ஆகஸ்ட்.16 அன்று நிறைவு பெற்றது.

நான்கு நாட்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் இரண்டு வான்படைகளும் இணைந்து சிக்கலான வான்வெளித் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டன. இருதரப்பினரிடமிருந்தும் அதிகளவிலான போர் உத்திகள் வெளிப்படுத்தப்பட்டன. இருவான்படைகளும் தங்களது சிறப்பான போர் நடவடிக்கைகளை பகிர்ந்துகொள்ள உத்ராசக்தி பயிற்சி உதவியது. பயிற்சியின் நிறைவு விழாவில், 7 சுகோய்–30M KI & சுகோய்–30 MKM போர் விமானங்கள் வானில் பறந்து சாகத்தை நிகழ்த்தின. தொடர்ந்து இந்திய வான்படை குழுவினர் ஆஸ்திரேலியாவின் டார்வின் பகுதியில் நடக்கவுள்ள 'பிட்ச் பிளாக்–22' விமானப்பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

---

3. ₹3 இலட்சம் வரையிலான குறுகியகால விவசாயக்கடனுக்கு ஆண்டுக்கு 1.5% வட்டி மானியம் வழங்க நடுவண் அமைச்சரவை ஒப்புதல்

பிரதமர் தலைமையிலான நடுவணமைச்சரவை, ₹3 இலட்சம் வரையில், விவசாயிகளுக்கு குறுகியக்காலக்கடன் வழங்கும் அனைத்து வகையான நிதிநிறுவனங்களுக்கும் ஆண்டுக்கு 1.5 சதவீத வட்டி மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. விவசாயிகளுக்கு 2022–23 நிதியாண்டு முதல் 2024–25 வரை ₹3 இலட்சம் வரை குறுகியக்காலக் கடனுதவி அளிக்கும், பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள், சிறு நிதி நிறுவனங்கள், மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு மற்றும் கணினிமயமாக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வட்டி மானியம் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் கடன் வழங்க 2022–23 முதல் 2024–25 வரை உள்ள நிதியாண்டில் ₹34,856 கோடி கூடுதல் பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட்டி மானிய அதிகரிப்பு, வேளாண் துறையில் தொடர்ந்து கடன் வழங்குவதை உறுதிசெய்யும் என்பதோடு, கடன் வழங்கும் நிறுவனங்களின் குறிப்பாக மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றின் நிதி நிலையையும் சாத்தியத் தன்மையையும் உறுதிசெய்யும். உரியகாலத்தில் கடனை திருப்பிச்செலுத்தும் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 4% வட்டிவிகிதத்தில் குறுகிய கால கடன் வழங்குவது தொடரும்.

---

4. கேரள அரசு சார்பில் வாடகை கார் முன்பதிவு செயலி – முதல்வர் தொடங்கி வைத்தார்

கேரள மாநில அரசு சார்பில் வாடகை கார் முன்பதிவு செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 'கேரளா சவாரி' என்ற இந்தச்செயலிவழி முன்பதிவு சேவையை மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் திருவனந்தபுரத்தில் தொடங்கி வைத்தார். நாட்டிலேயே முதல்முறையாக கேரள அரசு சார்பில் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஓலா, உபேர் போன்ற வாடகை கார் முன்பதிவு செயலிகளுக்குப் போட்டியாக அரசு இதனை அறிமுகப்படுத்தியுள்ளது. கார் மட்டுமில்லாது ஆட்டோவையும் இந்தச்செயலிமூலம் முன்பதிவு செய்ய முடியும்.

---

5. பெயர்மாற்றம் பெற்றது குரங்கு அம்மையின் இரகம்

குரங்கம்மை தீநுண்மியின் துணை இரகங்களுக்கு 'காங்கோ படுகை, தென்னாப்பிரிக்க கிளேட்' என்றிருந்த பெயர்களை, 'கிளேட் 1', 'கிளேட் 2' என உலக நலவாழ்வு அமைப்பு மாற்றியுள்ளது.

1. இந்தியாவின் முதல், 'ஹர் கர் ஜல்' சான்று பெற்ற மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. கோவா ☑

இ. கர்நாடகா

ஈ. ஒடிஸா

✓ 'ஹர் கர் ஜல்' சான்றுபெற்ற நாட்டின் முதல் மாநிலமாக கோவா மாறியுள்ளது. தாத்ரா நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஆகியவை 'ஹர் கர் ஜல்' சான்றுபெற்ற யூனியன் பிரதேசமாக மாறியது. ஜல் ஜீவன் இயக்கமானது கடந்த 2019இல் அறிவிக்கப்பட்டது; 2024ஆம் ஆண்டுக்குள் நாட்டின் ஒவ்வொரு கிராமப்புற குடும்பங்களுக்கும் போதுமான அளவு, பரிந்துரைக்கப்பட்ட தரம் மற்றும் வழக்கமான மற்றும் நீண்டகால அடிப்படையில் குடிநீர் குழாய் வழி நீரை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. நாட்டின் 10 கோடி கிராமப்புற குடும்பங்கள், குழாய்கள் மூலம் தூய நீரை வழங்கும் வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

2. இந்தியாவின் முதல் இருதள குளிர்பதன வசதிகொண்ட மின்–பேருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இடம் எது?

அ. புது தில்லி

ஆ. மும்பை ☑

இ. ஹைதராபாத்

ஈ. பெங்களூரு

✓ இந்தியாவின் முதல் இருதள குளிர்பதன வசதிகொண்ட மின்–பேருந்தை நடுவண் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி மும்பையில் வைத்து அறிமுகம் செய்து வைத்தார். அசோக் லேலண்டின் துணை நிறுவனமான சுவிச், சுவிச் EiV 22 என்ற இந்தியாவின் முதல் இருதள குளிர்பதன வசதிகொண்ட மின்–பேருந்தை அறிமுகம் செய்தது. இது அரை–தாழ்தளம், குளிரூட்டப்பட்ட, இருதளம்கொண்ட முதல் மின்–பேருந்து ஆகும்.

3. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட, 'மத்ஸ்ய சேது' என்ற செயலியின் இணையவழி மீன்சந்தைக்கான சிறப்பு பகுதியின் பெயரென்ன?

அ. அக்வா பஜார் ☑

ஆ. மத்ஸ்ய பஜார்

இ. மீன்வளம் இந்தியா

ஈ. மத்ஸ்ய பாரதம்

✓ 'மத்ஸ்ய சேது' செயலியில் இணையவழி மீன்சந்தைக்கான 'அக்வா பஜார்' என்ற சிறப்பு பகுதியை நடுவண் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா தொடங்கிவைத்தார். பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டத்தின்மூலம் ஹைதராபாதில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் புவனேசுவரில் உள்ள ICAR – CIFAமூலம் இச்செயலி உருவாக்கப்பட்டது.

✓ மீன்குஞ்சுகள், தீவனம், மருந்துகள்போன்ற இடுப்பொருள்களுக்கான ஆதாரங்களை அறியவும், மீன்வளர்ப்புக்கு தேவையான சேவைகளை அறியவும், மீன்வளர்ப்போர் மற்றும் இதனோடு தொடர்புடையவர்களுக்கு இணைய வழி சந்தை உதவும். மேலும் மீனவர்கள் தங்களின் மீன்களை விற்பனைக்கும் இதில் பட்டியலிடலாம். மீன்வளர்ப்பு துறைகளில் உள்ள அனைவரையும், ஒருங்கிணைப்பது இதன் நோக்கமாகும்.

4. கிராமிய ஆஜீவிகா பூங்காக்களை (கிராமிய தொழிற்பூங்காக்கள்) அமைப்பதாக அறிவித்துள்ள மாநில அரசு எது?

அ. ஒடிஸா **ஆ. சத்தீஸ்கர் ☑**

இ. மேற்கு வங்கம் ஈ. கர்நாடகா

✓ சத்தீஸ்கர் மாநிலத்தில் கிராமப்புற தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது. காந்தி ஜெயந்தி அன்று இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்று முதலமைச்சர் பூபேஷ் பாகேல் அறிவித்தார். இது கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துவதையும், 'கௌ–தான்' (கால்நடை) வாழ்வாதார மையமாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், முதல் ஆண்டில் முந்நூறு கிராமப்புற தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும். சத்தீஸ்கரில் இதுபோன்ற பூங்கா முதலில் கான்கர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது; அதற்கு 'காந்தி கிராம்' என்று பெயரிடப்பட்டது.

5. 'உலக நிழற்பட நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட் 15

ஆ. ஆகஸ்ட் 19 ☑

இ. ஆகஸ்ட் 20

ஈ. ஆகஸ்ட் 22

✓ ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.19 அன்று 'உலக நிழற்பட நாள்' கொண்டாடப்படுகிறது. பண்டைய சீனர்கள் மற்றும் கிரேக்கர்கள் ஊசித்துளை அமைப்பைக்கொண்ட திரையில் ஒரு நிழற்படத்தைக் காட்டுவதற்கான முறைகளை அறிந்திருந்தனர். உலகின் முதல் நிழற்படத்தை பிரெஞ்சு விஞ்ஞானி ஜோசப் நிஸ்ஃபோர் நீப்ஸ் எடுத்தார். அதற்கு 'வியூ பிரம் தி விண்டோ அட் லு கிராஸ்' என்று தலைப்பிடப்பட்டிருந்தது.

6. ஆண்டுதோறும் சர்வதேச பழங்குடிகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.09 ☑

ஆ. ஆகஸ்ட்.10

இ. ஆகஸ்ட்.11

ஈ. ஆகஸ்ட்.12

✓ சர்வதேச பழங்குடிகளின் நாளானது ஆண்டுதோறும் ஆக.9 அன்று கொண்டாடப்படுகிறது. "The Role of Indigenous Women in the Preservation and Transmission of Traditional Knowledge" என்பது நடப்பாண்டில் (2022) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். உலகம் முழுவதும் 90 நாடுகளில், 476 மில்லியனுக்கும் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இது, உலக மக்கள்தொகையில் 6.2% ஆகும். பழங்குடி மக்கள் தனித்துவமான கலாசாரம், மரபுகள் மற்றும் மொழிகள் ஆகியவற்றின் பரந்த பன்முகத்தன்மையைக் கொண்டவர்கள்.

7. உலக சிங்கங்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.09

ஆ. ஆகஸ்ட்.10 ☑

இ. ஆகஸ்ட்.11

ஈ. ஆகஸ்ட்.12

✓ சிங்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆக.10 அன்று உலக சிங்கங்கள் நாள் கொண்டாடப்படுகிறது. சிங்கத்தின் பாதுகாப்பிற்கான ஆதரவைத் திரட்டவும் இந்த நாள் முயற்சி செய்கிறது. விலங்குகளுக்கான உலகளாவிய நிதியத்தின்படி (WWF) சிங்கங்கள், புல்வெளிகள் மற்றும் சமவெளிகளில் மட்டுமே வாழ்கிறது. சசன்–கிர் தேசியப்பூங்காவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் கம்பீரமான ஆசிய சிங்கங்களின் தாயகம் இந்தியாவாகும்.

✓ WWFஇன் கூற்றுப்படி, சிங்கங்கள் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா முழுவதும் காணப்பட்டன. ஆனால் சமீப காலமாக, அவற்றின் எண்ணிக்கை இந்தக் கண்டங்களில் குறைந்து வருகிறது. சிங்கங்களைப் பாதுகாப்பதற்கான முன்னெடுப்பு, 2013இல் தொடங்கப்பட்டது. முதல் உலக சிங்கங்கள் நாள் 2013இல் அனுசரிக்கப்பட்டது.

8. பன்னாட்டு இளையோர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.07

ஆ. ஆகஸ்ட்.10

இ. ஆகஸ்ட்.10

ஈ. ஆகஸ்ட்.12 ☑

✓ உலக இளையோர் நாளானது ஆக.12 அன்று கொண்டாடப்படுகிறது "Intergenerational Solidarity: Creating a World for All Ages" என்பது நடப்பாண்டு (2022) வரும் இந்த நாளுக்கான கருப்பொருள் ஆகும். முதல் உலக இளையோர் நாள், கடந்த 1999ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

9. உலக யானைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.07

ஆ. ஆகஸ்ட்.10

இ. ஆகஸ்ட்.12 ☑

ஈ. ஆகஸ்ட்.20

✓ உலக யானைகள் நாளானது ஆக.12 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. யானைகள் பாதுகாப்பில் இந்நாள் கவனம் செலுத்துகிறது. யானைகளுக்குச் சிறந்த பாதுகாப்பை வழங்குதல், தந்தம் சார்ந்த வணிதகத்தைத் தடுப்பது, அமலாக்க கொள்கைகளை மேம்படுத்தல், யானைகளின் வாழ்விடத்தை பாதுகாத்தல், சட்டத்துக்குப் புறம்பான வேட்டையைத் தடுத்தல், சிறைபிடிக்கப்பட்ட யானைகளை அவற்றின் இயற்கை வாழ்விடங்களில் கொண்டுவிடுதல்போன்ற முயற்சிகளை மேற்கொள்வதை உலக யானைகள் நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

10. உலக இடதுகை பழக்கமுள்ளவர்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.12

ஆ. ஆகஸ்ட்.13 ☑

இ. ஆகஸ்ட்.14

ஈ. ஆகஸ்ட்.15

✓ உலக இடதுகை பழக்கமுள்ளவர்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.13 அன்று கொண்டாடப்படுகிறது. பெரும்பான்மையான மக்களைப் போலல்லாமல், இடதுகை பழக்கத்துடன் பிறந்தோரை அங்கீகரிக்கும் விதமாக இந்த நாள் உள்ளது. உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 10–12 சதவீதத்தினர், இடதுகை பழக்கமுடையோராக உள்ளனர். இடதுகை பழக்கமுடையோரைக் கண்டு அஞ்சும் மக்களும் உள்ளனர். இந்நிலை சினிஸ்ட்ரோபோபியா (Sinistrophobia) என்று அழைக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மத்திய உள்துறை செயலர் அஜை பல்லா பதவிக்காலம் மேலும் ஓராண்டு நீட்டிப்பு

மத்திய உள்துறை செயலர் அஜைகுமார் பல்லாவின் பதவிக்காலம் மேலும் ஓராண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2023–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 22–ஆம் தேதி வரை அவர் பதவியில் இருப்பார். ஏற்கெனவே இரண்டு முறை அவர் பதவிக்காலம் நீட்டிப்பு செய்யப்பட்ட நிலையில், மூன்றாவது முறையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 1984ஆம் ஆண்டு அஸ்ஸாம்–மேகாலயம் பிரிவு இந்திய ஆட்சிப்பணி அதிகாரியான பல்லா, கடந்த 2019, ஆகஸ்டில் மத்திய உள்துறை செயலராக நியமிக்கப்பட்டார்.

2020, நவம்பர் மாதத்தில் 60 வயதை எட்டியதைத் தொடர்ந்து, அவர் பணிஓய்வு பெறவிருந்தார். ஆனால், அவரது பதவிக்காலத்தை 2021, ஆக.22 வரை நீட்டித்து மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டது. அதன்பின்னர், மேலும் ஓராண்டுக்கு பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில், வரும் 22–ஆம் தேதியுடன் அவரது பதவிக்காலம் நிறைவடையவிருந்த நிலையில், அதனை அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 22–ஆம் தேதி வரை நீட்டிக்க அமைச்சரவையின் நியமனங்கள் குழு ஒப்புதல் வழங்கியது. அகில இந்திய பணிகள் தொடர்பான விதி தளர்வுகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக, மத்திய பணியாளர் அமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. பொலிவுறு நகரத்திட்ட முறைகேடு: முதல்வரிடம் விசாரணை அறிக்கை தாக்கல்

கடந்த அதிமுக ஆட்சியில் பொலிவுறு நகரத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் எழுந்த முறைகேடு தொடர்பான புகார்கள்குறித்து விசாரித்த அதிகாரி ஓய்வுபெற்ற இஆப அதிகாரி பி டபிள்யூ சி டேவிதார், தனது அறிக்கையை முதல்வர் மு க ஸ்டாலினிடம் சனிக்கிழமை தாக்கல் செய்தார்.

கடந்த 2015–ஆம் ஆண்டு நடுவணரசு சார்பாக பொலிவுறு நகரத் திட்டம் (ஸ்மார்ட் சிட்டி) அறிமுகப்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் நாடு முழுவதும் 100 நகரங்களைத் தேர்வுசெய்து பொலிவுறு நகராக மாற்ற திட்டமிடப்பட்டது. முதல் கட்டமாக தமிழகத்தில் 11 நகரங்கள் தேர்வுசெய்யப்பட்டன. அதற்கான அரசு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. திட்ட செலவில் 50 சதவீதத்தை மத்திய அரசும், 50 சதவீதத்தை மாநில அரசும் பகிர்ந்துகொள்கின்றன. இதனிடையே, கடந்த ஆண்டு பெய்த மழைகாரணமாக சென்னை தியாகராய நகரில் மழைநீர் தேங்கியது. இதற்கு பொலிவுறு நகரத் திட்டங்களை சரியாக வடிவமைக்காததே காரணம் என்று குற்றம்சாட்டப்பட்டது. இந்தத்திட்டத்தில் முறைகேடு நடந்துள்ளதாகவும் புகார் எழுந்தது.

இதனைத் தொடர்ந்து மழைநீர் தேங்கிய இடங்களில் முதல்வர் மு க ஸ்டாலின் ஆய்வுமேற்கொண்டார். அப்போது பொலிவுறு நகரத்திட்டத்தில் நடந்த ஊழல் குறித்து விசாரிக்க குழு அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

டேவிதார் தலைமையில் குழு: விசாரணைக்குழுவின் தலைவராக ஓய்வுற்ற இஆப அதிகாரி பி டபிள்யூ சி டேவிதார் நியமிக்கப்பட்டார். அவர் தனது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டுமென தமிழக அரசு கேட்டுக்கொண்டிருந்தது. இதையடுத்து, திட்டம் தொடர்பாக நடந்த பல்வேறு முறைகேட்டுப் புகார்கள்குறித்து விசாரணை அதிகாரி பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தினார்.

இந்நிலையில் திட்டப்பணிகளில் நடந்துள்ள முறைகேடுகள் குறித்த விசாரணை அறிக்கையை ஓய்வுற்ற இஆப அதிகாரி டேவிதார், முதல்வர் மு க ஸ்டாலினிடம் வழங்கினார்.

---

1. எந்தச் சட்டத்தின்கீழ், நிதிக்கொள்கைக் குழுக் கூட்டத்தின் நிகழ்வுக்குறிப்புகள் வெளியிடப்படுகின்றன?

அ. வங்கி ஒழுங்குமுறை சட்டம்

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் ☑

இ. நிதிக்கொள்கை சட்டம்

ஈ. கொடுப்பனவு மற்றும் தீர்வு சட்டம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934இன் பிரிவு 45ZLஇன்படி, நிதிக்கொள்கைக்குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்குப் பிறகு பதினான்காவது நாளில், ரிசர்வ் வங்கி, நிதிக்கொள்கை கூட்டத்தின் நிகழ்வுக்குறிப்புகளை வெளியிடுகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட MPC கூட்டத்தின் நிகழ்வுக்குறிப்புகளின்படி, RBI ஆளுநர் சக்திகாந்த தாஸ், மற்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து ரெப்போ விகிதத்தை 5.40%ஆக 50 அடிப்படைப்புள்ளிகள் உயர்த்த முன்மொழிந்தார்.

2. குரங்கம்மை நோயைப் பரிசோதிப்பதற்காக இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட RT-PCR கருவியை உருவாக்கிய நிறுவனம் எது?

அ. பயோகான்

ஆ. பாரத் பயோடெக்

இ. டிரான்ஸாசியா பயோ-மெடிக்கல்ஸ் ☑

ஈ. இந்திய சீரம் நிறுவனம்

✓ குரங்கு அம்மை நோயைப் பரிசோதிப்பதற்கான இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட RT-PCR கருவியை டிரான்ஸாசியா பயோ-மெடிக்கல்ஸ் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்தக் கருவியை நடுவண் அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அஜை குமார் சூட் சமீபத்தில் வெளியிட்டார். WHOஇன் கூற்றுப்படி, குரங்கு அம்மை என்பது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப்பரவும் ஒரு தீநுண்ம (வைரசு) நோயாகும். இது பெரியம்மைபோன்ற அறிகுறிகளைக் கொண்டுள்ளது.

3. "பொதுத்துறை வங்கிகளின் தனியார்மயமாக்கல்: ஒரு மாற்றுக்கண்ணோட்டம்" என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்றை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. NITI ஆயோக்

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ. பாரத வங்கி

ஈ. பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில்

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனது 2022 ஆகஸ்ட் இதழில், "பொதுத்துறை வங்கிகளின் தனியார்மயமாக்கல்: ஒரு மாற்றுக்கண்ணோட்டம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டது. அந்தக் கட்டுரையின் ஆசிரியர்களின் கூற்றுப்படி, "Big-bang" அணுகுமுறைக்குப் பதிலாக, அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட படிப்படியான அணுகுமுறை சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும்.

4. 'பிட்ச் பிளாக்' என்ற விமானப் போர்ப்பயிற்சியை நடத்தும் நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ஆஸ்திரேலியா ☑

இ. பிரான்ஸ்

ஈ. ஜப்பான்

✓ இந்திய வான்படை, அதன் நான்கு சுகோய்–30 MKI போர் விமானங்கள் மற்றும் இரண்டு C–17 விமானங்களுடன் 'பிட்ச் பிளாக்' பயிற்சியில் இணைந்தது. இது ஆஸ்திரேலியாவில் நடைபெறும் 17 நாடுகள் பங்கேற்கும் விமானப்போர் பயிற்சியாகும்; இதனை இராயல் ஆஸ்திரேலிய வான்படை (RAAF) நடத்துகிறது. ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 17 நாடுகளைச் சேர்ந்த 100–க்கும் மேற்பட்ட விமானங்களும், 2,500 விமானப்படை வீரர்களும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

5. ஆர்ட்டெமிஸ் III என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் நிலவு ஆய்வுத்திட்டமாகும்?

அ. ஜப்பான்

ஆ. அமெரிக்கா ☑

இ. இங்கிலாந்து

ஈ. ஆஸ்திரேலியா

✓ ஆர்ட்டெமிஸ் III என்பது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASAஇன் நிலவு ஆய்வுத் திட்டமாகும். இந்தத் திட்டத்தின்கீழ், நிலவுக்கு முதன்முறையாக கறுப்பினத்தவரும் பெண்மணியுமான ஒருவரை அனுப்ப NASA திட்டம் வகுத்துள்ளது. இது 2025–இல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நிலவின் தென் துருவத்திற்கு அருகாமையில் உள்ள இடங்களில் தரையிறங்குவாதற்கான 13 சாத்தியமான தளங்களை NASA சமீபத்தில் அறிவித்தது. நிலவின் தென் துருவம் மனிதர்களால் ஆராயப்படாத ஒன்று என்பதால் அதன் ஒவ்வொரு தளமும் அறிவியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படுகிறது.

6. 2022ஆம் ஆண்டில், ASEAN சங்கத்திற்கான தலைவராக உள்ள நாடு எது?

அ. இந்தியா

ஆ. சிங்கப்பூர்

இ. கம்போடியா ☑

ஈ. தாய்லாந்து

✓ கம்போடியாவானது "ASEAN சட்டம்: சவால்களை ஒன்றாக எதிர்கொள்வது" என்ற கருப்பொருளின்கீழ், நடப்பு 2022ஆம் ஆண்டிற்கு ASEAN அமைப்புக்குத் தலைமைதாங்குகிறது. கம்போடியாவின் தலைநகரமான புனோம் பென் நகரத்தில் ASEAN–இந்தியா வெளியுறவு அமைச்சர்களின் வருடாந்திர கூட்டத்திற்குச் சிங்கப்பூர் தலைமை தாங்குகிறது. தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) – இந்திய வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்துகொண்டார்.

7. இந்தியாவுக்காக பதக்கங்கள் வென்ற துலிகா மான் மற்றும் சுசீலா லிக்மாபம் சார்ந்த விளையாட்டு எது?

அ. டேபிள் டென்னிஸ்

ஆ. பூப்பந்து

இ. ஜூடோ ☑

ஈ. வாள்சண்டை

✓ 2022 – காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 78 கிலோ பிரிவில் ஜூடோவில் இந்தியாவுக்காக துலிகா மான் வெள்ளிப்பதக்கம் வென்றார். முன்னதாக, ஜூடோவில் பெண்கள் 48 கிலோ பிரிவில் சுசீலா லிக்மாபம் வெள்ளிப் பதக்கமும், ஆடவர் 60 கிலோ பிரிவில் விஜய் குமார் யாதவ் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கிண்டி தேசியப்பூங்கா அமைந்துள்ள மாவட்டம் எது?

அ. சென்னை ☑ ஆ. செங்கல்பட்டு

இ. காஞ்சிபுரம் ஈ. திருவாரூர்

✓ கிண்டி தேசியப்பூங்காவானது சென்னை மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஒரு நகரத்திற்குள் அமைந்துள்ள மிகச்சில தேசியப்பூங்காக்களுள் இதுவும் ஒன்றாகும். காயமடைந்த மற்றும் மீட்கப்பட்ட வனவிலங்குகளுக்கு உதவுவதற்காக தமிழ்நாடு வனத்துறையால் இந்தத் தேசியப் பூங்காவில் முதன்முறையாக, 'நகர்ப்புற விலங்குகள் மீட்பு மையம்' அண்மையில் அமைக்கப்பட்டது.

9. கண்காணிப்பு பணியை முடித்த லெப்டினன்ட் கமாண்டர் ஆஞ்சல் சர்மா தலைமையிலான பெண்கள் குழுவுடன் தொடர்புடைய ஆயுதப்படை எது?

அ. இந்திய வான்படை

ஆ. இந்திய இராணுவம்

இ. இந்திய கடற்படை ☑

ஈ. இந்திய கடலோர காவல்படை

✓ குஜராத்தின் போர்பந்தரில் உள்ள இந்திய கடற்படையின் வான்படை 314–ஐச் சேர்ந்த ஐந்து பெண் அதிகாரிகள், டோர்னியர் 228 விமானத்தில் வட அரபிக்கடலில் அனைத்து கடல்சார் உளவு மற்றும் கண்காணிப்பு பணியை முடித்து வரலாறு படைத்தனர். மிஷன் கமாண்டர் லெப்டினன்ட் கமாண்டர் ஆஞ்சல் ஷர்மா இந்த விமானத்தின் கேப்டனாக இருந்தார்; அதில் விமானிகள் லெப்டினன்ட் ஷிவாங்கி மற்றும் லெப்டினன்ட் அபூர்வ கீட் மற்றும் அவரது குழுவில் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரிகள் இருந்தனர்.

10. தனது முதல் நிலவு திட்டத்தை சுற்றுக்கலனான 'தனூரி'மூலம் தொடக்கிய நாடு எது?

அ. இந்தியா **ஆ. தென் கொரியா ☑**

இ. இஸ்ரேல் ஈ. நியூசிலாந்து

✓ தென் கொரியா தனது முதல் நிலவு திட்டத்தை அண்மையில் தொடங்கியது. அதன் நிலவு சுற்றுக்கலனான, 'தனூரி' கொரிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் (KARI) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டது. இந்தச் சுற்றுக்கலன் என்பது பால்கன் 9 ஏவுகலத்தில் இருந்து வெற்றிகரமாகப் பிரிந்த, "நிலவை அனுபவியுங்கள்" என்று பொருள்படும். இது ஓராண்டு கண்காணிப்பு பணியைத் தொடங்குவதற்கு முன் டிசம்பரில் நிலவின் சுற்றுப்பாதையில் நுழையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வெற்றிபெற்றால், தென் கொரியா, நிலவினை ஆயும் உலகின் ஏழாம் நாடாகவும், ஆசியாவின் நான்காம் நாடாகவும் மாறும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் பேருந்து புணேயில் தொடக்கம்

ஹைட்ரஜன் எரிபொருள்மூலம் இயங்கும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட முதல் பேருந்தை நடுவண் அறிவியல் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் புணேயில் தொடக்கி வைத்தார். நடுவண் அறிவியல் தொழில் ஆராய்ச்சி கவுன்சிலும் (CSIR) – கேபிஐடி தனியார் நிறுவனம் இணைந்து இந்தப் பேருந்தை உருவாக்கியுள்ளன.

---

2. தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை இன்று தமிழ்நாடு ஆளுநரிடம் வழங்கப்பட்டது

2021– மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையை தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநரிடம் வழங்கினார். இந்த அறிக்கை மாநில சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும். தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்ய தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி தணிக்கை அறிக்கையை ஆளுநரிடம் அளிக்க இந்திய அரசியல் சட்டம் பிரிவு 152 (2) வகை செய்கிறது.

1. ஹைட்ரஜன் எரிபொருள்மூலம் இயங்குகின்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் பேருந்து அறிமுகப்படுத்தப்பட்ட நகரம் எது?

அ. மைசூரு

ஆ. ஹைதராபாத்

இ. புனே ☑

ஈ. அகமதாபாத்

✓ ஹைட்ரஜன் எரிபொருள்மூலம் இயங்குகின்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் பேருந்து புனேவில் உள்ள KPIT–CSIRஆல் உருவாக்கப்பட்டுள்ளது. இதை நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் அறிமுகம்செய்துவைத்தார். ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலமானது ஹைட்ரஜன் மற்றும் வளியைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்குகிறது. அதன் செயலாக்கத்தின்போது வெப்பம் மற்றும் நீர் மட்டுமே உற்பத்தியாகிறது. FCEV–கள் (Fuel Cell Electric Vehicle) சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறைமையாக உள்ளன.

2. 2022–இல் தேசிய விதை மாநாடு நடைபெறும் இடம் எது?

அ. ஹைதராபாத்

ஆ. மைசூரு

இ. குவாலியர் ☑

ஈ. விசாகப்பட்டினம்

✓ நடுவண் உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், குவாலியரில், 2022 – தேசிய விதை மாநாட்டைத் தொடங்கி வைத்தார். ஸ்டேட் அகாடமி ஆஃப் அக்ரிகல்சுரல் அண்ட் அலைட் சைன்சஸ் (SAAS) அப்போது தொடங்கப்பட்டது. தேசிய அளவில் NAAS மற்றும் பிராந்திய அளவில் SAAS–இன் முனைவுகள் விவசாயம், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு அறிவியல் மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் கல்வியை மேம்படுத்துதல் ஆகியவற்றின் செயல்பாடுகளை மேலும் விரைவுப்படுத்தும்.

3. அண்மையில் சோதனையோட்டம் செய்யப்பட்ட 3.5 கிமீ நீள சரக்கு இரயிலின் பெயர் என்ன?

அ. பாரத் ஃபிரைட்

ஆ. சூப்பர் வாசுகி ☑

இ. இந்தியா ஃபிரைட்

ஈ. பாரத் கூட்ஸ்

✓ இந்திய இரயில்வே அண்மையில் 3.5 கிமீ நீளமுள்ள, 'சூப்பர் வாசுகி' என்ற சரக்கு இரயிலின் சோதனை ஓட்டத்தை நடத்தியது. இந்திய இரயில்வேயால் இதுவரை இயக்கப்பட்ட மிக நீளமான மற்றும் அதிக எடைகொண்ட சரக்கு இரயில் இதுவாகும். இது சத்தீஸ்கரில் உள்ள கோர்பா மற்றும் நாக்பூரில் உள்ள ராஜ்நந்த்காவ் இடையே 27,000 டன் நிலக்கரியை ஏற்றிச்செல்லும் பெட்டிகளைக் கொண்டுள்ளது.

4. கீழ்க்காணும் எந்த மாநிலத்துடன் இணைந்து, 'மாவட்ட நல்லாட்சி இணையதளத்தை' உருவாக்க நடுவணரசு திட்டமிட்டுள்ளது?

அ. அருணாச்சல பிரதேசம் ☑ ஆ. அஸ்ஸாம்

இ. சிக்கிம் ஈ. கர்நாடகா

✓ அருணாச்சல பிரதேச மாநில அரசுடன் இணைந்து, 'மாவட்ட நல்லாட்சி இணையதளத்தை' உருவாக்க நடுவணரசு திட்டமிட்டுள்ளது. இந்த இணையதளம், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்தின் செயல்திறனையும் மாதந்தோறும்

கண்காணித்து செயல்திறனை தரப்படுத்துவதில் உதவுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. நடுவண் தொழிலாளர் அமைச்சகத்தின்கீழ் உள்ள நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்பு துறை, 'மாவட்ட நல்லாட்சி இணையதாளத்தை' உருவாக்கும்.

5. இராஜீவ்காந்தி அட்வான்ஸ் டெக்னாலஜி (R–CAT) மையத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ. சத்தீஸ்கர்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. சிக்கிம்

ஈ. பஞ்சாப்

✓ இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் இராஜீவ்காந்தி அட்வான்ஸ் டெக்னாலஜி மையத்தை (R–CAT) தொடங்கி வைத்தார். R–CAT ஆனது பட்டதாரிகளுக்கு மேம்பட்ட மற்றும் வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சித்திட்டங்களை நடத்தும். இந்த மையம் வென்றவர்களுக்கு தொழிற்தரச்சான்றிதழ்களை வழங்கும்.

6. 'சர்வதேச பால் பண்ணை கூட்டமைப்பு உலக பால் மாநாடு' நடைபெறும் இடம் எது?

அ. பாட்னா

ஆ. புது தில்லி ☑

இ. அமிர்தசரசு

ஈ. அகமதாபாத்

✓ 4 நாள் நடக்கும் சர்வதேச பால் பண்ணை கூட்டமைப்பு உலக பால் உச்சிமாநாடு (IDF WDS 2022) ஆனது செப்.12 முதல் புது தில்லியில் நடைபெறவுள்ளது. இந்தியாவானது அதிக எண்ணிக்கையிலான கால்நடைகளுடன் உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக உள்ளது; ஆனால் அதே வேளையில் விளைச்சலில் இந்தியா பின்தங்கியுள்ளது. இந்த உச்சிமாநாட்டின்மூலம், இந்தியா, முன்னேறிய நாடுகளிடம் இருந்து பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான பாடங்களைக் கற்றுக்கொள்ளும்.

7. கனிமங்கள் பாதுகாப்பு கூட்டாண்மைக்குத் தலைமை வகிக்கும் நாடு எது?

அ. சீனா

ஆ. ஜப்பான்

இ. அமெரிக்கா ☑

ஈ. இந்தியா

✓ சமீபத்தில் உருவாக்கப்பட்ட பதினொரு நாடுகளின் அமெரிக்க தலைமையிலான கூட்டாண்மை, முதன்மையான கனிம விநியோகச் சங்கிலிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கனிமங்கள் பாதுகாப்பு கூட்டாண்மை கோபால்ட், நிக்கல், லித்தியம் மற்றும் 17 'அருமண் கனிமங்கள்'போன்ற கனிமங்களின் விநியோகச் சங்கிலிகளில் கவனம் செலுத்துகிறது. இந்தக் கூட்டணி சீனாவுக்கு மாற்றான கூட்டணியாகக் கருதப்படுகிறது.

8. 'மாபெரும் வெங்காய சவால்' போட்டியைத் தொடங்கிய நடுவண் அமைச்சகம் எது?

அ. நடுவண் வேளாண் அமைச்சகம்

ஆ. நடுவண் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ. நடுவண் MSME அமைச்சகம்

ஈ. நடுவண் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

✓ நடுவண் நுகர்வோர் விவகாரங்கள் துறையானது அண்மையில், 'மாபெரும் வெங்காய சவால்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தச் சவால் இளம் தொழில் வல்லுநர்கள், பேராசிரியர்கள் மற்றும் விஞ்ஞானிகளிடமிருந்து வடிவமைப்பு மற்றும் அறுவடைக்கு முந்தைய நுட்பங்களை மேம்படுத்துதல், முதன்மை செயலாக்கம், சேமிப்பு மற்றும் நாட்டில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தை கொண்டு செல்வதற்கான யோசனைகளை நாடுகிறது.

9. கலா அசாரை ஒழிப்பதற்கான இந்தியாவின் புதிய இலக்கு ஆண்டு என்ன?

அ. 2023 ☑

ஆ. 2025

இ. 2027

ஈ. 2030

✓ வரும் 2023ஆம் ஆண்டுக்குள் கலா அசாரை நாட்டிலிருந்து ஒழிப்பதற்கு இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மக்களவையில் நடுவண் சுகாதார அமைச்சர் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில், 633 காலா–அசார் தொகுதிகளில், கடந்த ஆண்டு 625 தொகுதிகள் ஒழிப்புக்கான இலக்கை எட்டியுள்ளன. உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் செயல்திட்டம் கலா–அசார் ஒழிப்புக்கான இலக்கு ஆண்டை 2030 என நிர்ணயித்துள்ளது.

10. 'பொது பதிவு வசதி' (எனது ரேஷன்–எனது உரிமை) இணையதளத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஆ. நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் ☑

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

उपभोक्ता मामले विभाग
DEPARTMENT OF
CONSUMER AFFAIRS

✓ நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், 'பொது பதிவு வசதி' (எனது ரேஷன்–எனது உரிமை) என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டும் இப்பதிவு செய்யும் வசதி, வீடற்ற மக்கள், ஆதரவற்றோர், புலம்பெயர்ந்தோர் மற்றும் தகுதியுடைய பிற பயனாளிகள் ரேஷன் அட்டைகளுக்கு விண்ணப்பிக்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரே நாடு ஒரே குடும்ப அட்டைத்திட்டத்தின்கீழ் அனைத்து 36 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'விக்ராந்த்' போர்க்கப்பல் செப்.2–இல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு

உள்நாட்டிலேயே கட்டப்பட்ட, 'விக்ராந்த்' விமானந்தாங்கி போர்க்கப்பலை பிரதமர் மோடி செப்.2ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். விமானந்தாங்கி போர்க்கப்பல்களை உள்நாட்டிலேயே கட்டுவதற்கான திட்டத்தை கடந்த 2007–ஆம் ஆண்டு மத்திய அரசு செயல்படுத்தியது. அத்திட்டத்தின்கீழ் முதல் விமானந்தாங்கி போர்க்கப்பலாக 'விக்ராந்த்', சுமார் ₹20,000 கோடி மதிப்பில் கட்டப்பட்டது. கொச்சி கப்பல் கட்டுமான நிறுவனம் அக்கப்பலைக் கட்டும் பணியை 2009–ஆம் ஆண்டு தொடங்கியது.

---

2. கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது

சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில், கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கும் விழா நடந்தது. விழாவில், கடந்த 2020–ஆம் ஆண்டுக்கான விருது தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ம இராஜேந்திரனுக்கும், கடந்த 2021–ஆம் ஆண்டுக்கான விருது முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் க நெடுஞ்செழியனுக்கும், 2022–ஆம் ஆண்டுக்கான விருது பிரெஞ்சு நாட்டு அறிஞர் ழான் லூய்க் செவ்வியாருக்கும் வழங்கப்பட்டது.

---

1. UNESCOஇன் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரிய பட்டியலில் இணைக்க இந்தியாவால் பரிந்துரைக்கப்பட்ட 'கார்பா' என்றால் என்ன?

அ. திருவிழா

ஆ. நடன வடிவம் ☑

இ. கலை வடிவம்

ஈ. நினைவுச்சின்னம்

✓ UNESCOஇன் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரிய பட்டியலில் இணைக்க 'கார்பா' என்ற நடன வடிவத்தை இந்தியா சமீபத்தில் பரிந்துரைத்துள்ளது. UNESCOஇன் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியப் பிரதிநிதிகளில் 'துர்கா பூஜை' கடந்த ஆண்டு இணைக்கப்பட்டது. கடந்த 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்தைக் காப்பதற்கான அரசுகளுக்கிடையேயான குழுவில் பணியாற்ற UNESCOஆல் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2. எந்த நாட்டுடன் இணைந்து நாடுகடந்த கல்விக்கான பணிக்குழுவை நிறுவுவதாக இந்தியா அறிவித்தது?

அ. அமெரிக்கா

ஆ. ஆஸ்திரேலியா ☑

இ. இங்கிலாந்து

ஈ. ஜெர்மனி



✓ இந்தியாவின் நடுவண் கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் மற்றும் அவருக்கிணையான ஆஸ்திரேலிய பிரதிநிதி இணையமைச்சர் ஜேசன் கிளேர் ஆகியோர் நாடுகடந்த கல்விக்கான பணிக்குழுவை நிறுவுவதாக அறிவித்தனர். இந்தப்பணிக்குழு இருநாடுகளிலும் உள்ள ஒழுங்குமுறை அமைப்புகளைப்பற்றிய பகிரப்பட்ட புரிதலை உருவாக்குவதையும் நிறுவனங்களின் இருவழி இயக்கத்திற்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆஸ்திரேலியா இந்திய கல்வி கவுன்சிலின் (AIEC) ஆறாவது கூட்டத்திற்கு நடுவண் அமைச்சர் இணைத் தலைமைதாங்கினார்.

3. இந்தியாவின் முதல் வணிக ரீதியிலான விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு கூர்நோக்ககம் நிறுவப்படவுள்ள மாநிலம் / UT எது?

அ. குஜராத்

ஆ. உத்தரகாண்ட் ☑

இ. சிக்கிம்

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ இந்தியாவின் முதல் வணிக ரீதியிலான விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு கூர்நோக்ககம் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள கர்வால் பகுதியில் விண்வெளித்துறை துளிர் நிறுவனமான திகந்தாராவால் நிறுவப்படவுள்ளது. பூமியைச்சுற்றி வரும் 10 செமீ அளவுள்ள பொருட்களைக் கண்காணிப்பதை இந்த ஆய்வகம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஏற்கனவே விண்ணில் இருக்கும் பொருட்களைக் கண்காணித்தல் மற்றும் அடையாளம் காண்பதன் செயல்திறனை மேம்படுத்தும்.

4. இந்தியா, சமீபத்தில் (2022 ஆகஸ்ட்) எந்த நாட்டில் புதிய இந்தியத் தூதரகத்தை திறந்து வைத்தது?

அ. மால்டா **ஆ. பராகுவே ☑**

இ. ஈரான் ஈ. வெனிசுலா

- ✓ இந்தியாவின் நடுவண் வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர், பராகுவேயில் உள்ள அசன்சியனில் புதிய இந்தியத் தூதரகத்தை கூட்டாகத் திறந்து வைத்தார். இருநாடுகளும் தூதரக உறவுகளை நிறுவி 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், பராகுவே குடியரசிற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஒருவர் செல்வது இதுவே முதல்முறையாகும்.

5. அரசாங்கத்தால் நடத்தப்படும் மருத்துவ நிறுவனங்களில் உள்ள மருந்துகளை இணையவழியில் கண்காணிப்பு செய்வதற்காக அமைப்பு ஒன்றை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா ☑

இ. கர்நாடகா

ஈ. அஸ்ஸாம்

- ✓ அரசாங்கம் நடத்தும் மருத்துவ நிறுவனங்களிலுள்ள மருந்துகளைக் கண்காணிக்க இணையவழி கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்த உள்ளதாக கேரள அரசு அறிவித்துள்ளது. மருந்துகளின் இருப்பு மற்றும் விநியோகத்தை கண்காணிப்பதை இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. மருந்துகள் கிடைப்பை உறுதி செய்ய, கேரள மருத்துவச்சேவை கழகத்தின் இணையவழி முறைமையை மருத்துவமனை ஊழியர்கள் பயன்படுத்த வேண்டும் என்று அம்மாநில சுகாதார அமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

6. 2022-இல் நடைபெற்ற, 'SCO பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம்' நடைபெறும் இடம் எது?

அ. பெய்ஜிங்

ஆ. தாஷ்கண்ட் ☑

இ. ஷாங்காய்

ஈ. நூர்சுல்தான்

- ✓ உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்புநாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் வருடாந்திர கூட்டத்தில் நடுவண் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்துகொண்டார். இந்தியாவைத் தவிர, சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் அக்கூட்டத்தில் பங்கேற்றனர். சமர்கண்டில் நடைபெறவுள்ள SCO நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

7. 2022ஆம் ஆண்டுக்கான லிபர்ட்டி பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்ட தலைவர் யார்?

அ. இம்ரான் கான்

ஆ. நரேந்திர மோடி

இ. வோலோடிமிர் ஜெலென்ஸ்கி ☑

ஈ. ஃபுமியோ கிஷிடா

- ✓ தேசிய அரசியலமைப்பு மையத்தால் நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான, 'லிபர்ட்டி பதக்கத்திற்கு' உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உருசிய கொடுங்கோன்மைக்கு எதிரான அவரது சிறப்பு வாய்ந்த நடவடிக்கைகளுக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2019 மே முதல் உக்ரைன் அதிபராக பணியாற்றி வரும் வோலோடிமிர் ஜெலென்சுகி, ரொனால்ட் ரீகன் விடுதலை விருது மற்றும் ஜான் F கென்னடி துணிச்சல் விருது மற்றும் பிற அரசாங்கங்களின் விருதுகளைப் பெற்றவராவார்.

8. 2022 – உலக நீர் வாரத்திற்கான கருப்பொருள் என்ன?

அ. Seeing the Unseen: The Value of Water ☑

ஆ. Transforming the global water challenges

இ. Global collaboration for water

ஈ. Biodiversity and climate change

✓ ஸ்டாக்ஹோம் பன்னாட்டு நீர் நிறுவனமானது (SIWI) ஒவ்வோர் ஆண்டும் உலக நீர் வாரத்தை நடத்துகிறது. இந்த ஆண்டு, இது ஆக.23 முதல் செப்.1 வரை கொண்டாடப்படுகிறது. "Seeing the Unseen: The Value of Water" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் கொண்டாடப்படும் உலக நீர் வாரத்திற்கானக் கருப்பொருளாகும். இது உலகளாவிய நீர் சவால்களை மாற்றுவதை நோக்கமாகக்கொண்ட ஓர் இயக்கமாகும்.

9. 2022 – புலிட்சர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஃபஹ்மிதா அசிம் சார்ந்த நாடு எது?

அ. இந்தியா

ஆ. வங்காளதேசம் ☑

இ. ஈரான்

ஈ. ஓமன்

✓ வங்காளதேசத்தில் பிறந்து அமெரிக்காவின் இன்சைடர் ஆன்லைன் இதழில் பணிபுரிந்து வரும் ஃபஹ்மிதா அசிம், 2022ஆம் ஆண்டுக்கான புலிட்சர் பரிசுக்குத் தெரிவாகியுள்ளார். உய்குர்களின் மீதான சீன அடக்குமுறை குறித்த பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இன்சைடரின் நான்கு பத்திரிகையாளர்களுள் இவரும் ஒருவராவார். 'நான் ஒரு சீனத்தடுப்பு முகாமிலிருந்து தப்பித்தேன்' என்ற படைப்பில் அவரது விளக்கப்படங்களுக்காக, 'விளக்கப்பட செய்தி' மற்றும் 'வர்ணனை' என்ற பிரிவின்கீழ் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற, அந்திம் பங்கல் சார்ந்த விளையாட்டு எது?

அ. மல்யுத்தம் ☑

ஆ. பளு தூக்குதல்

இ. ஹாக்கி

ஈ. பூப்பந்து

✓ 20 வயதுக்குட்பட்ட மல்யுத்த உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்திய பெண் மல்யுத்த வீராங்கனை என்ற பெருமையை அந்திம் பங்கல் பெற்றுள்ளார். பல்கேரியாவின் சோபியா நகரத்தில் நடைபெற்று வரும் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 53 கிலோ பிரிவில் முதலிடம் பிடித்தார். U20 உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற மற்ற இந்தியர்கள் – தீபக் புனியா (2019) ரமேஷ் குமார் (2001) பல்விந்தர் சிங் சீமா (2001) மற்றும் பப்பு யாதவ் (1992).

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் உலக வங்கி நிதியுதவி திட்டங்கள்

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் ஆலோசிக்கப்பட்டது.

வீட்டுவசதித்துறையை வலுப்படுத்தவும், அதன் திட்டங்களில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்கப்படுத்தவும் உலக வங்கி நிதியுதவியுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு வீட்டுவசதித்துறை வலுவூட்டல்

திட்டத்தின்கீழ், கொள்கை மேம்பாட்டு கடனுதவியாக ₹1,492.40 கோடி நிதி உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

---

2. வானில் உள்ள இலக்குகளை அழிக்கும் ஏவுகணை சோதனை வெற்றி

தரையிலிருந்து செங்குத்தாக மேலெழும்பி, வானிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் 'VL–SRSAM' என்ற ஏவுகணையை DRDO வெற்றிகரமாகப் பரிசோதனை செய்துள்ளது.

இந்தியக் கடற்படைக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட 'VL–SRSAM' ஏவுகணை, வானில் பறக்கவிடப்பட்ட ஆளில்லா சிறியரக விமானத்தைத் துல்லியமாகத் தாக்கியது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவிகள் அந்த ஏவுகணையில் பொருத்தப்பட்டிருந்தன. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம், ஹைதராபாதில் உள்ள RCI ஆராய்ச்சி மையம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் புணேவில் உள்ள ஆய்வு–மேம்பாட்டு பொறியாளர்களும் ஏவுகணையை வடிவமைத்தனர்.

---

1. ஆண்டுதோறும் எந்த மாதத்தில், 'உலக தாய்ப்பால் வாரம்' கடைப்பிடிக்கப்படுகிறது?

அ. ஜூலை

ஆ. ஆகஸ்ட் ☑

இ. செப்டம்பர்

ஈ. அக்டோபர்

✓ குழந்தைகளுக்குத் தொடர்ந்து தாய்ப்பால் கொடுப்பதை வலியுறுத்தும் வகையில், ஆண்டுதோறும் ஆக.1–7 வரை 'உலக தாய்ப்பால் வாரம்' கடைப்பிடிக்கப்படுகிறது. உலக தாய்ப்பால் வாரத்திற்கான இந்த ஆண்டு கருப்பொருள் "Step Up for Breastfeeding: Educate and Support". கடந்த 1990ஆம் ஆண்டில், உலக நலவாழ்வு அமைப்பு (WHO) மற்றும் UNICEF ஆகியவை தாய்ப்பாலூட்டலை ஆதரிப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமாக குறிப்பாணையொன்றை உருவாக்கியது. 1991ஆம் ஆண்டு தாய்ப்பாலூட்டும் நடவடிக்கைக்கான உலகக் கூட்டணி (WABA) நிறுவப்பட்டது. கடந்த 1992ஆம் ஆண்டில், முதல் உலக தாய்ப்பால் வாரம் அனுசரிக்கப்பட்டது.

2. நடுவண் கலாச்சார அமைச்சகமானது கீழ்க்காணும் எந்நிறுவனத்துடன் இணைந்து, 'இந்தியா கி உடான்' என்ற முனைவைத் தொடங்கியது?

அ. மைக்ரோசாப்ட்

ஆ. கூகுள் ☑

இ. மெட்டா

ஈ. அமேசான்

✓ கடந்த 75 ஆண்டுகளில் இந்தியா புரிந்த அதன் சாதனைகளைக் கொண்டாடும் வகையில், கலாச்சார அமைச்சகமும் கூகுளும் இணைந்து, 'இந்தியா கி உதான்' என்ற முனைவைத் தொடங்கின. இந்தக் கொண்டாட்டம், புது தில்லியில் தொடங்கியது. இந்தக் கூட்டு முனைவானது விடுதலை அமுதப்பெருவிழாவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவில் உருவாகிய சாதனையாளர்களைக் கௌரவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு கண்காட்சியை கூகுள் கலை மற்றும் கலாச்சார பிரிவு வெளியிட்டது.

3. தனது சுற்றுலா வளர்ச்சியின் ஒருபகுதியாக 'மோதி சுற்று' என்றவொன்றை உருவாக்குவதாக அறிவித்துள்ள மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. உத்தரகாண்ட் ☑

இ. சிக்கிம்

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ கார்பெட் புலிகள் சரணாலயத்தில், 'மோதி சுற்று' ஒன்றை உருவாக்கப்போவதாக உத்தரகாண்ட் சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில், 'மேன் vs வைல்ட்' தொலைக்காட்சி நிகழ்ச்சியின் படப்பிடிப்பின்போது பிரதமர் நரேந்திர மோதி சென்ற இடங்களை உள்ளடக்குவதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, V பிரணவ் என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. துப்பாக்கி சுடுதல்

ஆ. சதுரங்கம் ☑

இ. பளு தூக்குதல்

ஈ. தடகளம்

✓ சென்னையைச்சேர்ந்த செஸ் வீரர் V பிரணவ் ருமேனியாவில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்று இந்தியாவின் 75ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆனார். 15 வயதான அவர், ருமேனியாவின் பையா மாரில் லிம்பீடியா ஓபனில் தனது மூன்றாவது மற்றும் இறுதி GM நெறியைப்பெற்று கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்றார். அவர் ஒன்பது சுற்றுகளில் 7 புள்ளிகள் பெற்று போட்டியை நிறைவுசெய்தார். பிரணவ், தமிழ்நாட்டின் 27ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆவார்.

5. உலகின் மிகவுயரமான இரயில்வே பாலம் அமைந்துள்ள இந்திய மாநிலம்/UT எது?

அ. சிக்கிம்

ஆ. ஜம்மு காஷ்மீர் ☑

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. அஸ்ஸாம்

✓ ஜம்மு–காஷ்மீரில் அமைந்துள்ள செனாப் பாலம் உலகின் மிகவுயரமான இரயில்பாலமாகும். உலகின் மிகவுயரமான இந்த இரயில்வே பாலத்தின் எஃகு வளைவு கடந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது; அதே வேளையில் மேம்பாலத்தளம் கட்டி முடிக்கப்படவுள்ளது. செனாப் இரயில்வே பாலத்தின் மேல்தளம் பொன்னிணைப்புடன் கட்டி முடிக்கப்படும் போது அது உலகின் மிகவுயரமான இரயில் பாலத்திற்கான சாதனையை அடையும்.

6. அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சிக் கவுன்சிலின் (CSIR) முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. Dr N கலைச்செல்வி ☑

ஆ. மார்கரெட் அல்வா

இ. Dr இரஞ்சினி இரகுநாத்

ஈ. ஜெயஸ்ரீ சத்தியநாராயணா

✓ Dr N கலைச்செல்வி, அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கவுன்சிலின் (CSIR) முதல் பெண் தலைமை இயக்குநராக ஆனார். ஆற்றல் ஆராய்ச்சியாளரான அவர் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சித் துறையின் செயலாளராக இருப்பார். நடுவண் அரசின் அறிவியல் துறையின் செயலாளராக பதவி வகிக்கும் நான்காவது பெண் அறிவியலாளர் இவர் ஆவார்.

7. லடாக்கின் மிகவுயரிய குடிமக்கள் விருதான, 2022 – 'dPal rNgam Duston' விருதைப் பெற்றவர் யார்?



அ. நரேந்திர மோதி

ஆ. தலாய் லாமா ☑

இ. திரௌபதி முர்மு

ஈ. M வெங்கையா

✓ திபெத்திய ஆன்மீகத்தலைவர் தலாய் லாமாவுக்கு லடாக்கின் மிகவுயரிய குடிமக்கள் விருதான, 'dPal rNgam Duston' விருது வழங்கப்பட்டது. லேவில் உள்ள லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலால் ஆறாம் முறையாக இந்த விருது வழங்கப்படுகிறது. மனிதகுலத்திற்கு, குறிப்பாக லடாக் யூனியன் பிரதேசத்திற்கு தலாய் லாமா ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

8. '12ஆவது இராணுவக் கண்காட்சி' நடைபெறும் இடம் எது?

அ. மைசூரு **ஆ. காந்திநகர் ☑**

இ. புனே ஈ. விசாகப்பட்டினம்

✓ 2022 அக்.18–22ஆம் தேதிகளுக்கு இடையே குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் 12ஆவது இராணுவக் கண்காட்சி நடைபெறும் என நடுவண் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது. இது தரை, கடற்படை மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு அமைப்புகள் குறித்த இந்தியாவின் முதன்மையான கண்காட்சியாகும்.

✓ "Path to Pride" என்பது இந்தப் பதிப்பிற்கானக் கருப்பொருளாக உள்ளது. ஆயுதப்படைகள், பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறையின் இராணுவ உபகரணங்கள் மற்றும் திறன்களை வெளிப்படுத்தும் நேரடி செய்முறை விளக்கங்கங்கள் சபர்மதி ஆற்றின் முகப்பில் நடைபெறும்.

9. உலக U20 தடகள சாம்பியன்ஷிப்பில் 2 பதக்கங்களை வென்ற முதல் இந்திய தடகள வீராங்கனையான ரூபல் சௌத்ரி சார்ந்த விளையாட்டு எது?

அ. ஈட்டியெறிதல்

ஆ. குண்டெறிதல்

இ. தொடரோட்டம் மற்றும் குறுவிரைரோட்டம் ☑

ஈ. உயரந்தாண்டுதல்

✓ உலக U20 தடகள சாம்பியன்ஷிப்பில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்திய தடகள வீராங்கனை என்ற வரலாற்றுச் சாதனையை ரூபல் சௌத்ரி படைத்தார். அவர் 4x400 மீ தொடரோட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தையும், பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றார். உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் என்றும் அழைக்கப்படும் இந்த நிகழ்வு கொலம்பியாவில் நடைபெற்றது.

10. 'வஜ்ர பிரஹார் – 2022' என்பது இந்தியாவுக்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான இராணுவப் பயிற்சியாகும்?

அ. ஜப்பான்

ஆ. அமெரிக்கா ☑

இ. பிரான்ஸ்

ஈ. இலங்கை

✓ இந்தியாவும் அமெரிக்காவும் தங்கள் சிறப்புப் படைகளுக்கு இடையே இயங்குதிறனை மேம்படுத்துவதற்காக ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் பக்லோவில், 'வஜ்ர பிரஹார் – 2022' என்ற இராணுவப் பயிற்சியைத் தொடங்கின. இந்திய–அமெரிக்க கூட்டு சிறப்புப் படைகளின் பதிமூன்றாவது பதிப்பான, 'வஜ்ர பிரஹார் – 2022' ஆனது இந்திய இராணுவத்தின் கூற்றுப்படி, பக்லோவில் உள்ள சிறப்புப்படைகள் பயிற்சிப்பள்ளியில் தொடங்கியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சாகித்திய அகாதெமி: யுவ புரஸ்கார், பால சாகித்திய விருதுகள் அறிவிப்பு – தமிழ்மொழிப்பிரிவில் பி காளிமுத்து, ஜி மீனாட்சி தேர்வு

2022ஆம் ஆண்டுக்கான யுவ புரஸ்கார், பால சாகித்திய புரஸ்கார் விருதுகளை சாகித்திய அகாதெமி அறிவித்துள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பி காளிமுத்து, ஜி மீனாட்சி ஆகியோரின் படைப்புகள் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இலக்கிய உலகில் உயரிய விருதாக, 'சாகித்திய அகாதெமி' விருது கருதப்படுகிறது. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கியப்படைப்புகளுக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது. இலக்கியப் படைப்பாளிகளை கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் இளம் எழுத்தாளர்களுக்கு 'யுவ புரஸ்கார்' விருதையும், சிறுவர் இலக்கியத்துக்கான 'பால சாகித்திய புரஸ்கார்' விருதையும் இந்திய பிராந்திய மொழிப்படைப்புகளுக்கு சாகித்திய அகாதெமி வழங்கி வருகிறது. அதன்படி, இந்த ஆண்டுக்கான (2022) இரு விருதுகளும் அறிவிக்கப்பட்டன.

சாகித்திய அகாதெமியின் தலைவர் சந்திரசேகர கம்பார் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தின் முடிவில், மேலும் 23 எழுத்தாளர்களுக்கு யுவ புரஸ்கார் விருதும், 22 எழுத்தாளர்களுக்கு பால சாகித்திய புரஸ்கார் விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழிப்பிரிவில்...: தமிழ்மொழிப்பிரிவில், "தனித்திருக்கும் அரளிகளின் மதியம்" எனும் கவிதை தொகுப்புக்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் பி காளிமுத்துவுக்கு 'யுவ புரஸ்கார்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான 'பால சாகித்திய புரஸ்கார்' விருது பிரிவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஜி மீனாட்சி எழுதிய, "மல்லிகாவின் வீடு" எனும் சிறுகதை நூலுக்கு 'பால சாகித்திய புரஸ்கார்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு விருதுகளும் தாமிரப்பட்டயம் மற்றும் ₹50,000 காசோலை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். 'பால சாகித்திய புரஸ்கார்' விருது, குழந்தைகள் தினமான நவம்பர் 14–ஆம் தேதி வழங்கப்படும் என்றும், 'யுவ புரஸ்கார்' விருது வழங்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் சாகித்திய அகாதெமி தெரிவித்துள்ளது.

தமிழ் தவிர, அஸ்ஸாமி, பெங்காலி, போடோ, ஹிந்தி, கன்னடம், காஷ்மீரி, கொங்கணி, மலையாளம், மணிப்புரி, நேபாளி, ஒடியா, தெலுங்கு, சமற்கிருதம், உருது உள்ளிட்ட பிராந்திய மொழிகளின் எழுத்தாளர்களுக்கும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

---

2. பிரிட்டனுக்கான அடுத்த இந்தியத்தூதர் விக்ரம் துரைசுவாமி

பிரிட்டனுக்கான அடுத்த இந்தியத்தூதராக மூத்த வெளியுறவுப்பணி அதிகாரி விக்ரம் கே துரைசுவாமி நியமனம் செய்யப்பட்டுள்ளார். பிரிட்டனுக்கான தூதர் காயத்ரி இஸ்ஸார் குமார் கடந்த ஜூன்.30 அன்று ஓய்வுற்றார். தற்போது வங்கதேசத்துக்கான தூதராக உள்ள விக்ரம் துரைசுவாமி, பிரிட்டனுக்கான அடுத்த இந்தியத்தூதராக விரைவில் பொறுப்பேற்பார் என வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்தது.

இருநாடுகளுக்கு இடையே வளர்ந்துவரும் இராஜீய ரீதியிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் முக்கியப்பொறுப்புக்கு விக்ரம் துரைசுவாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய வெளியுறவுப்பணி அதிகாரியான விக்ரம் துரைசுவாமி, 1992–ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்தவர். வங்கதேசத்துக்கான இந்தியத்தூதராக கடந்த 2020, அக்டோபர் மாதம் இவர் பொறுப்பேற்றதிலிருந்து இந்தியா–வங்கதேச உறவு வலுவடைந்தது குறிப்பிடத்தக்கது.

---

3. உலகின் முதல் ஹைட்ரஜன் இரயில் சேவை: ஜெர்மனியில் தொடக்கம்

உலகிலேயே முதன்முறையாக ஹைட்ரஜனை எரிபொருளாகக்கொண்டு இயங்கும் இரயில்களின் சேவை ஜெர்மனியில் தொடங்கப்பட்டது. லோயர் சாக்ஸோனி மாகாணத்துக்கு வழங்கப்பட்டுள்ள 14 ஹைட்ரஜன் இரயில்கள் மூலம், 4 நகரங்களை இணைக்கும் 100 கிமீ இரயில் பாதையில் இந்தச் சேவை வழங்கப்படுகிறது. இதுவரை பயன்படுத்தப்பட்ட டீசல் இரயில்களுக்கு மாற்றாக, புவியை வெப்பமாக்கும் வளிகளை முற்றிலும் வெளியிடாத ஹைட்ரஜன் இரயில்கள் இயக்கப்படவுள்ளன.

9.3 கோடி யூரோ (சுமார் ₹737 கோடி) செலவில் தொடங்கப்பட்டுள்ள இந்த ரயில் திட்டத்தால் ஆண்டுக்கு 4,400 டன் கரியமில வாயு காற்றில் கலப்பது தடுக்கப்படும் எனக் கருதப்படுகிறது.

---

4. முதலாவது கேலோ இந்தியா மகளிர் ஜூடோ போட்டி கௌகாத்தியில் 27–ந்தேதி தொடங்குகிறது

முதலாவது கேலோ இந்தியா மகளிர் ஜூடோ போட்டி ஆகஸ்ட்.27 முதல் இந்தியாவில் நான்கு மண்டலங்களில் நடைபெறவுள்ளது. நடுவணரசின் முதன்மைத் திட்டத்தின்மூலம் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை முன்னெடுக்க இளையோர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சகத்தால் எடுக்கப்பட்ட மற்றொரு முயற்சியாகும் இது. தேசிய சுற்றுக்கு முன் நான்கு மண்டலங்களில் நடைபெறும் இந்தப் போட்டி, ஒரு திறந்த மண்டல அளவிலான தரவரிசைப் போட்டியாகும். போட்டியாளர்கள் 4 வித வயது பிரிவுகளில் உள்ளனர்.

1. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்ட, 'அனங் தால் ஏரி' அமைந்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ. கர்நாடகா

ஆ. புது தில்லி ☑

இ. கேரளா

ஈ. தெலுங்கானா

✓ தென் தில்லியில் அமைந்துள்ள அனங் தால் ஏரி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னமாக நடுவண் கலாச்சார அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருட்கள் குறித்த தேசிய இயக்கத்தின் இணையதளத்தின்படி, அனங் தால் பொது ஆண்டு 1,060–க்கு முந்தையது ஆகும்.

2. 'இந்திய கனிமங்கள் மற்றும் உலோகத் தொழிற்துறை தொடர்பான சர்வதேச மாநாடு' நடைபெறுகிற இடம் எது?

அ. புது தில்லி ☑

ஆ. மும்பை

இ. மைசூரு

ஈ. வாரணாசி

✓ இந்தியாவின் சுரங்க நிறுவனமான NMDC ஆனது FICCI உடன் இணைந்து இந்திய கனிமங்கள் மற்றும் உலோகத் தொழிற்துறை குறித்த மாநாட்டை புது தில்லியில், '2030–ஐ நோக்கிய மாற்றம் & தொலைநோக்குப்பார்வை 2047' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்தது. விடுதலை அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக, நடுவண் எஃகு அமைச்சகம் மற்றும் நடுவண் சுரங்க அமைச்சகத்துடன் இணைந்து இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. தொலைநோக்குப் பார்வை–2047ஐ அடைவதற்கான கனிமங்கள் மற்றும் உலோகத் தொழிற்துறைக்கான செயல்திட்டம் குறித்து விவாதிப்பதே இந்த நிகழ்வின் நோக்கமாகும்.

3. இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) தரவு சேமிப்பக விதிமுறைகளுக்கு இணங்கியதை அடுத்து கீழ்க்காணும் எந்தக் கடனட்டை சேவையின் மீதான கட்டுப்பாடுகளைத் திரும்பப்பெற்றது?

அ. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் ☑

ஆ. டிஸ்கவர்

இ. மாஸ்டர்கார்டு

ஈ. விசா

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கிக் கழகம் மீதான கட்டுப்பாடுகளைத் திரும்பப் பெற்றது. மேலும் தரவு சேமிப்பக விதிமுறைகளுடன் அதன் திருப்திகரமான இணக்கத்தைத் தொடர்ந்து புதிய வாடிக்கையாளர்களை சேர்க்கவும் அந்நிறுவனத்தை அனுமதித்தது. ரிசர்வ் வங்கியின் தரவு சேமிப்பக விதிகளுக்கு, அமெரிக்காவைச் சார்ந்த கடனட்டை சேவை நிறுவனமான அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இணங்காத காரணத்தால், கடந்த 2021ஆம் ஆண்டில், அந்நிறுவனத்திற்கு RBI தடை விதித்தது.

4. உக்ரைனின் விடுதலை நாளை $3 பில்லியன் மதிப்பிலான இராணுவ உதவி அளித்து கொண்டாடிய நாடு எது?

அ. இங்கிலாந்து

ஆ. அமெரிக்கா ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஜெர்மனி

- ✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன், உக்ரைனின் விடுதலை நாளை $3 பில்லியன் மதிப்பிலான ராணுவ உதவி வழங்கி கொண்டாடினார். உருசியாவின் படையெடுப்பிற்குப் பிறகு, அமெரிக்காவால் அளிக்கப்படும் மிகப்பெரிய நிதியுதவி இதுவாகும். வரும் நாட்களில் புதிய தாக்குதல்களை நடத்த உருசியா திட்டமிட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது. அப்புதிய தொகுப்பில் 'NASAMS' எனப்படும் ஆறு கூடுதல் ஏவுகணை அமைப்புகள், பீரங்கியை எதிர்க்கும் ரேடார்கள், பூமா டிரோன்கள் மற்றும் 'VAMPIRE' என்னும் டிரோன் எதிர்ப்பு அமைப்புகளும் அடங்கும்.

5. NHAI, IWAI மற்றும் RVNL ஆகியவை எந்தத் திட்டத்தின்கீழ் நவீன பன்மாதிரி போக்குவரத்துப் பூங்காக்களை மேம்படுத்துவதற்கான முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன?

அ. பாரத்மாலா பரியோஜனா ☑

ஆ. PM கிராம சதக் யோஜனா

இ. சீர்மிகு நகரங்கள் திட்டம்

ஈ. அம்ருத் திட்டம்

BHARATMALA
ROAD TO PROSPERITY

- ✓ தேசிய நெடுஞ்சாலைகள் போக்குவரத்து மேலாண்மை லிட் (NHLML), இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் (IWAI) மற்றும் இரயில் விகாஸ் நிகாம் லிட் (RVNL) ஆகியவை நவீன பன்மாதிரி போக்குவரத்துப் பூங்காக்களை விரைவாக மேம்படுத்துவதற்காக ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. நாடு முழுவதும் 'பாரத்மாலா பரியோஜனா' திட்டத்தின்கீழ் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. சரக்குப்போக்குவரத்து ஒருங்கிணைப்பை மையப்படுத்தவும், சரக்குச்செலவை 14%–லிருந்து 10%–க்கும் குறைவாக குறைக்கவும் இது உதவும்.

6. எந்த இந்தியத்தலைவரின் இல்லத்திற்கு லண்டனின், 'நீலத்தகடு' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது?

அ. Dr B R அம்பேத்கர்

ஆ. தாதாபாய் நௌரோஜி ☑

இ. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

ஈ. கான் அப்துல் கபார் கான்



- ✓ இந்தியத்தலைவர் தாதாபாய் நௌரோஜியின் லண்டன் இல்லம், லண்டனில் வாழ்ந்து பணியாற்றிய குறிப்பிடத்தக்க நபர்களுக்காக ஒதுக்கப்பட்ட, 'நீலத்தகடு' பெறவுள்ளது. பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஆசியர் தாதாபாய் நௌரோஜி ஆவார். கடந்த 1866ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 'நீலத்தகடு' திட்டம், தற்போது ஆங்கில பாரம்பரிய அமைப்பால் நடத்தப்பட்டு வருகிறது.

7. ஜேம்ஸ் மராப் என்பவர் எந்த நாட்டின் பிரதமராகப் பதவியேற்றார்?

அ. பப்புவா நியூ கினி ☑

ஆ. சிங்கப்பூர்

இ. மலேசியா

ஈ. மாலத்தீவுகள்

- ✓ தென் பசிபிக் தீவு நாடான பப்புவா நியூ கினியாவில் நடைபெற்ற தேர்தலுக்குப்பிறகு, ஜேம்ஸ் மராப் பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜேம்ஸ் மராப் இரண்டாவது முறையாக பிரதமராகப் பதவியேற்றார். இப்புதிய அரசாங்கத்தை மராபும் அவருக்கு முன் பிரதமராகப் பதவியிலிருந்து கடந்த 2019–இல் பதவி விலகிய பீட்டர் ஓ'நீலும் வழி நடத்துவர். பப்புவா நியூ கினியா என்பது பலதரப்பட்ட பழங்குடிகள் வாழும் ஒரு தீவு நாடாகும். இது, கடந்த 1975ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிலிருந்து விடுதலை அடைந்தது.

8. 'SMILE–75' என்ற முனைவுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ. சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

ஈ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது, விடுதலை அமுதப்பெருவிழா என்ற உணர்வின்கீழ், இரக்கும் செயலில் ஈடுபடுவோர்க்கு விரிவான மறுவாழ்வளிக்க 75 மாநகராட்சிகளை அடையாளம் கண்டுள்ளது. இந்த முனைவானது. 'SMILE: Support for Marginalised Individuals for Livelihood and Enterprise' அல்லது 'SMILE–75' முனைவு என்று அழைக்கப்படுகிறது. மறுவாழ்வு, மருத்துவ வசதிகள், ஆலோசனை, விழிப்புணர்வு, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் பிற அரசின் நலத்திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு போன்றவற்றில் இது கவனம் செலுத்தும்.

9. இந்திய விடுதலையின் 75ஆம் ஆண்டைக் குறிக்கும் வகையில், 'விடுதலைச் சுவரோவியக் கலைத்திட்டத்தை'த் தொடங்கிய இந்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா ☑

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்காளம்

✓ இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், 'விடுதலைச் சுவரோவியக் கலைத் திட்டத்தை' கேரள உயர்கல்வி அமைச்சகம் முறையாகத் தொடக்கி வைத்தது. இத்திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள அரசுக்கல்லூரிகளில் கல்லூரிக் கல்வி இயக்குநரகம் மற்றும் மாநில தேசிய சேவைத் திட்ட அலகு ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 20,000 அடி பரப்பளவைக் கொண்டிருக்கும் இந்தச்சுவரோவியம், நாட்டிலேயே வரையப்பட்ட சுவரோவியங்களின் மிகப்பெரிய தொகுப்பாகக் கூறப்படுகிறது.

10. 'இளையோருக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் – 2022' என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ. WEF

ஆ. IMF

இ. உலக வங்கி

ஈ. ILO ☑

International
Labour
Organization

✓ 'இளையோருக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் – 2022' என்ற அறிக்கை அண்மையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, இந்தியா, 2020 மற்றும் 2021இல் கடுமையான வேலைநேரம் மற்றும் வேலையிழப்புகளைச் சந்தித்தது; மேலும், 2020 உடன் ஒப்பிடும்போது 2021இல் இந்திய இளையோர்களின் வேலைவாய்ப்பு மிகவும் மோசமடைந்தது. 2020ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து, 15–24 வயதுக்குட்பட்ட இளையோர்கள் பெரியவர்களைவிட அதிக சதவீத வேலையிழப்பைச் சந்தித்துள்ளனர். 2022ஆம் ஆண்டில், மொத்த உலகளாவிய வேலைவாய்ப்பற்ற இளையோர்களின் எண்ணிக்கை 73 மில்லியனை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தென்னை மேம்பாட்டு வாரியம் உலக தென்னை நாள் – 2022 மற்றும் விருது வழங்கும் விழாவை நடத்த உள்ளது

தென்னை மேம்பாட்டு வாரியம் வரும் செப்.2ஆம் தேதி 23ஆவது உலக தென்னை நாள் கொண்டாட்டங்களை நடத்தவுள்ளது. வேளாண் துறைக்கான நடுவண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், இந்த ஆண்டின் (2022) உலக தென்னை நாள் கொண்டாட்டங்களை குஜராத்தில் உள்ள ஜூனாகாட்டில் மெய்நிகர் முறையில் தொடக்கி வைக்க உள்ளார். இந்த ஆண்டுக்கான (2022) உலக தென்னை நாள் கொண்ட்டாட்டங்களுக்கான கருப்பொருளாக "நாளைய நன்மைக்காகவும், வாழ்க்கைக்காகவும் தென்னை வளர்ப்பு" அமைந்துள்ளது.

---

2. தமிழக, புதுவை ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது

நிகழாண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருது பெறும் 46 பேர்கொண்ட பட்டியலில், தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தைச்சேர்ந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர் கே ராமச்சந்திரன், புதுவையைச் சேர்ந்த அரவிந்த் ராஜா ஆகியோர் இடம்பெற்றுள்ளார்.

மறைந்த முன்னாள்குடியரசுத்தலைவர் இராதாகிருஷ்ணனின் பிறந்தநாளான செப்.5–ஆம் தேதி ஆண்டுதோறும் ஆசிரியர் நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நாளில் சிறந்த ஆசிரியர்களுக்கு நடுவணரசு சார்பில் தேசிய நல்லாசிரியர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும். இந்த விருது ₹50,000 ரொக்கம், பாராட்டுச்சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியது.

---

3. IMF செயல் இயக்குநராக கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் நியமனம்

சர்வதேச நிதியத்தின் (IMF) செயல் இயக்குநராக முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் நியமிக்கப்படுவதாக நடுவண் பணியாளர் அமைச்சகம் தெரிவித்தது. இதன்மூலம் அந்த அமைப்புக்கான இந்திய பிரதிநிதியாக அவர் செயல்படுவார்.

கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் தற்போது இந்தியன் ஸ்கூல் ஆப் பிசினஸில் நிதித்துறை பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். நவ.1–ஆம் தேதி முதல் சர்வதேச நிதியத்தில் இந்தியா சார்பில் செயல் இயக்குநராக அவர் பொறுப்பு ஏற்கவுள்ளார். அவரது நியமனத்துக்கு நடுவண் அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் 3 ஆண்டுகள் அல்லது அடுத்த உத்தரவு வரும்வரை இந்தப்பொறுப்பில் நீடிப்பார் என நடுவண் பணியாளர் அமைச்சகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சர்வதேச நிதியத்தில் இந்தியா சார்பில் செயல் இயக்குநராக செயல்பட்டு வரும் சுர்ஜித் எஸ் பல்லா கடந்த 2019 அக்டோபரில் இந்தப்பொறுப்பை ஏற்றார். அவரது பணிக்காலம் அக்.30–இல் நிறைவடைகிறது.

---

1. பரிவார் கல்யாண் அட்டைத் திட்டத்தைத் தொடங்கிய மாநிலம்/UT எது?

அ. பீகார்

ஆ. உத்தர பிரதேசம் ☑

இ. கர்நாடகா

ஈ. மத்திய பிரதேசம்

✓ பரிவார் கல்யாண் அட்டைத் திட்டம் என்பது உத்தர பிரதேச மாநில அரசாங்கத்தின் குடும்ப அடையாள அட்டைத் திட்டமாகும். மாநிலத்தில் உள்ள குடும்பங்கள் குறித்த ஒருங்கிணைந்த தரவுத்தளத்தை நிறுவவும் அதன் பல்வேறு திட்டங்களுக்கு பயனாளிகளை அடையாளம் காணவும் இது பயன்படும். PKC ஆனது ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனிப்பட்ட பன்னிரண்டிலக்க அடையாள எண்ணை வழங்கும். மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆதார் தரவை PKCஉடன் இணைக்க மாநில அரசுக்கு அனுமதி தந்துள்ளது.

2. 2022–இல் பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பின் (DRDO) புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. சமீர் V காமத் ☑

ஆ. K சிவன்

இ. மயில்சாமி அண்ணாதுரை

ஈ. டெஸ்ஸி தாமஸ்

✓ மூத்த அறிவியலாளர் Dr சமீர் V காமத், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டமைப்பின் (DRDO) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நடுவண் பாதுகாப்பு அமைச்சரின் அறிவியல் ஆலோசகராகப் பொறுப்பேற்ற Dr G சதீஷுக்குப் பிறகு அவர் இப்பதவிக்கு வந்துள்ளார். முன்னதாக, Dr சமீர் V காமத், 2017ஆம் ஆண்டு முதல் DRDOஇல் கடற்படை அமைப்புகள் இயக்குநராக பணியாற்றி வந்தார்.

3. மா–ஆன் என்ற வெப்பமண்டலச் சூறாவளியால் பாதிக்கப்பட்ட நாடு எது?

அ. சீனா

ஆ. ஜப்பான்

இ. பிலிப்பைன்ஸ் ☑

ஈ. இந்தோனேசியா

✓ பிலிப்பைன்ஸ் நாட்டின் லூசன் தீவைச் சேதப்படுத்திய மா–ஆன் என்ற வெப்பமண்டலச் சூறாவளியால் அந்த நாடு பாதிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் தேசிய பேரிடர் இடர் குறைப்பு மற்றும் மேலாண்மை கவுன்சிலின் கூற்றுப்படி, அந்தச்சூறாவளி காரணமாக குறைந்தது மூவர் இறப்பெய்தினர் மற்றும் நால்வர் காயமடைந்தனர். இந்த ஆண்டில் (2022) தென்கிழக்காசிய நாட்டைத் தாக்கிய ஆறாவது வெப்பமண்டலச் சூறாவளி "மா–ஆன்" ஆகும்.

4. பன்னாட்டு செலாவணி நிதியத்தில் (IMF) இந்தியாவின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியப் பொருளாதார நிபுணர் யார்?

அ. உர்ஜித் படேல்

ஆ. K சுப்ரமணியன் ☑

இ. வைரல் ஆச்சார்யா

ஈ. அனந்த நாகேஸ்வரன்

✓ முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் K V சுப்ரமணியன், பன்னாட்டு செலாவணி நிதியத்தில் (IMF) இந்தியாவின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். K V சுப்ரமணியனின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் அல்லது மறு ஆணை வரும் வரை தொடரும். தற்போது சர்வதேச நிதியத்தில் இந்தியா சார்பில் செயல் இயக்குநராக செயல்பட்டு வரும் சுர்ஜித் எஸ் பல்லா கடந்த 2019 அக்டோபரில் இந்தப்பொறுப்பை ஏற்றார். அவரது பணிக்காலம் அக்.30–இல் நிறைவடைகிறது.

5.'மின்கல கழிவு மேலாண்மை விதிகள், 2022'ஐ வெளியிட்டுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் ☑

ஆ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது சமீபத்தில் மின்கல கழிவு மேலாண்மை விதிகள், 2022ஐ வெளியிட்டது. இப்புதிய விதிகள் மின்கலங்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001–க்கு மாற்றாக, கழிவு மின்கலங்களின் சுற்றுச்சூழலுக்கு உகந்த மேலாண்மையை உறுதிசெய்யும். மின்–வாகனங்களின் மின்கலங்கள், எடுத்துச்செல்லக்கூடிய மின்கலங்கள், தானுந்து மின்கலங்கள் மற்றும் தொழிற்துறை மின்கலங்கள் உட்பட அனைத்து வகையான மின்கலங்களையும் இந்த விதிகள் உள்ளடக்கியுள்ளது.

6. 'இயற்கை குறியீடு (Nature Index) – 2022' தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ள பல்கலைக்கழகம் எது?

அ. தில்லி பல்கலைக்கழகம்

ஆ. ஹைதராபாத் பல்கலைக்கழகம் ☑

இ. பஞ்சாப் பல்கலைக்கழகம்

ஈ. மெட்ராஸ் பல்கலைக்கழகம்

✓ சமீபத்திய நேச்சர் இன்டெக்ஸ்–2022 தரவரிசையில் ஹைதராபாத் பல்கலைக்கழகம் (UoH) தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. நேச்சர் இன்டெக்ஸ் என்பது இயற்கை மற்றும் இயற்பியல் அறிவியலில் உயர்தர ஆராய்ச்சிகளை தர வரிசைப்படுத்தும் ஒரு குறியீடாகும். UoH, இந்தியப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும், கல்வித்துறையில் உள்ள அனைத்து நிறுவனங்களில் 16ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. 2021 ஏப்ரல்.1 முதல் 2022 மார்ச்.31 வரையிலான தரவுகளின் அடிப்படையில் இந்தத் தரவரிசை உள்ளது.

7. "Intergenerational solidarity: creating a world for all ages" என்பது ஆகஸ்ட் மாதத்தில் கொண்டாடப்படும் கீழ்க்காணும் எந்தச் சர்வதேச நாளுக்கானக் கருப்பொருளாகும்?

அ. சர்வதேச இளையோர் நாள் ☑

ஆ. சர்வதேச மூத்தோர்கள் நாள்

இ. சர்வதேச வளரிளம்பருவத்தில் உள்ள குழந்தைகள் நாள்

ஈ. சர்வதேச ஜென்–Z நாள்

✓ சமூகத்தின் வளர்ச்சிக்கு இளையோரின் பங்களிப்பைக்குறிக்கவும், உலகம் முழுவதும் இளையோர் எதிர்கொள்ளும் அநீதிகளுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தவுமாக ஒவ்வோர் ஆண்டும் ஆக.12 அன்று சர்வதேச இளையோர் நாள் கொண்டாடப்படுகிறது. "Intergenerational solidarity: creating a world for all ages" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் சர்வதேச இளையோர் நாளுக்கானக் கருப்பொருளாகும். 2022ஆம் ஆண்டு சர்வதேச இளையோர் நாளுக்கானத் தலைப்பு, 'வயதுசார் பாரபட்சம்' ஆகும். ஒரு தனிநபரின் வயதை அடிப்படையாகக்கொண்ட பாகுபாடு செய்யும் நடைமுறையே 'வயதுசார் பாரபட்சம்' ஆகும்.

8. வடகிழக்கிந்திய விழா – 2022 ஆனது இந்தியா மற்றும் கீழ்க்காணும் எந்த நாட்டின் உறவுகளின் 75ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது?

அ. ஜப்பான்

ஆ. தாய்லாந்து ☑

இ. மியான்மர்

ஈ. சிங்கப்பூர்

✓ இந்தியா–தாய்லாந்து உறவின் 75ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், வடகிழக்கிந்திய விழா நடைபெறும் என மேகாலயா மாநில முதலமைச்சர் கான்ராட் சங்மா அறிவித்துள்ளார். வடகிழக்குத் திருவிழாவான, 'கலாசாரத்தைக்கொண்டாடும் மக்களை இணைக்கிறது' என்பது வடகிழக்கிந்தியாவின் மிகப்பெரிய முனைவாகும். வடகிழக்கின் தனித்துவத்தை வெளிப்படுத்தவும், சுற்றுலா மற்றும் முதலீட்டு அடிப்படையில் ஆராயப்படாத வழிகளை மேம்படுத்தவுமாக இந்த விழா பாங்காக்கில் நடைபெறும்.

9. முதல் கேலோ இந்தியா மகளிர் ஹாக்கி லீக் போட்டியை (U–16) நடத்துகிற மாநிலம்/UT எது?

அ. புது தில்லி ☑

ஆ. ஒடிஸா

இ. கர்நாடகா

ஈ. ஹரியானா

✓ U–16 பெண்களுக்கான முதல், 'கேலோ இந்தியா மகளிர் ஹாக்கி லீக்' ஆக.16 அன்று புது தில்லியில் உள்ள மேஜர் தியான்சந்த் அரங்கில் தொடங்கவுள்ளது. கேலோ இந்தியா மகளிர் ஹாக்கி லீகானது (U–21) இந்த ஆண்டின் தொடக்கத்தில் புது தில்லி மற்றும் லக்னௌவில் மூன்று கட்டங்களாக நடைபெற்றது. நாடு முழுவதும் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கும் இந்த லீக்கில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

10. நடுவணரசு வசூலிக்கும் வரியில் எத்தனை சதவீதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது?

அ. 40%

ஆ. 41% ☑

இ. 42%

ஈ. 45%

✓ தற்போது, ஒரு நிதியாண்டில், நடுவணரசு வசூலிக்கும் வரியில், 41 சதவீதம், 14 தவணைகளாக, மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ₹1.16 இலட்சம் கோடி நிதியை மாநில அரசுகளுக்கு இரண்டு தவணைகளாக நடுவணரசு அண்மையில் வழங்கியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இமாச்சல பிரதேசத்தின் பாக்லோவில் இந்தியா – அமெரிக்கா சிறப்புப்படைகளின் கூட்டுப்பயிற்சி நிறைவடைந்தது

வஜ்ரா பிரஹார் 2022 எனும் இந்தியா – அமெரிக்கா சிறப்புப் படைகளின் 13வது கூட்டுப்பயிற்சி பாக்லோவில் 2022 ஆக.28 அன்று நிறைவடைந்தது. இந்தியா – அமெரிக்கா இடையேயான இந்த வருடாந்தரப் பயிற்சி அடுத்தடுத்த ஆண்டுகளில் நடைபெறுகிறது. இதன்படி 12ஆவது பயிற்சி வாஷிங்டனில் உள்ள லெவிஸ் மெக் கார்ட் கூட்டுப் படைதளத்தில் 2021 அக்டோபரில் நடைபெற்றது.

ஐநா சாசனப்படி 21 நாள் நடைபெற்ற இந்தக் கூட்டுப்பயிற்சி இருநாட்டு சிறப்புப் படைகளுக்கும் சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளது. இந்தப்பயிற்சி இரண்டு கட்டங்களாக நடைபெற்றன. முதல் கட்டத்தில் எதிர்ப்பை முறியடிக்கும் நிலைமை, போர்தந்திர நிலையில் சிறப்பு நடவடிக்கைகள் ஆகியவையும் இரண்டாவது கட்டத்தில் 48 மணி நேர மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட பயிற்சியும் நடைபெற்றது.

---

2. ஊராட்சிகளுக்கு ₹751 கோடி மானியம் தமிழ்நாடு அரசு உத்தரவு

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாக ₹751.99 கோடியை விடுவித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கான உத்தரவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வெளியிட்டுள்ளது. அவ்வுத்தரவு விவரம்:

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் இருந்து 10% உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படுகிறது. இதில், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 56 சதவீதமும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 44 சதவீதமும் நிதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கான மாநில நிதி ஆணையத்தின் மானியங்கள் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படவுள்ளன.

---

3. வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண்ணாலான கற்கால மண்பானைகள் கண்டெடுப்பு

வெம்பக்கோட்டையில் நடந்துவரும் அகழாய்வில் சுடுமண்ணாலான கற்கால பானைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே வெம்பக்கோட்டையில் உள்ள வைப்பாற்றங்கரை விஜயகரிசல்குளம் ஊராட்சிக்குள்பட்ட வடகரை உச்சிமேட்டில் 25 ஏக்கர் பரப்பளவிலான தொல்லியல்மேட்டில் கடந்த மார்ச்.16ஆம் தேதி முதல் அகழ்வாராய்ச்சிப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த அகழாய்வில் சுடுமண்ணாலான பகடைக்காய், தக்கலி, ஆட்டக்காய்கள், முத்துமணிகள், சங்கு வளையல்கள், பெண்ணுருவம், காளை உருவம், விளையாட்டுப்பொருள்கள், கோடரி, தங்க அணிகலன்கள் உள்ளிட்டவை கண்டறியப்பட்டுள்ளன.

---

4. 'பாரத்' பெயரில் மானிய உரங்கள் அக்டோபர் முதல் விற்பனை: 'ஒரே நாடு ஒரே உரம்' திட்டம்

'ஒரே நாடு ஒரே உரம்' திட்டத்தின்கீழ், 'பாரத்' என்ற ஒற்றைப்பெயரில் மானிய உரங்கள் அனைத்தும் அக்டோபர் மாதம் முதல் விற்பனை செய்யப்படவுள்ளன. விவசாயிகளுக்கு குறித்த நேரத்துக்குள் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதுடன், அதன் போக்குவரத்துக்கான மானிய சுமையைக் குறைப்பதுமே இத்திட்டத்தின் நோக்கம் என நடுவண் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

பிரதமரின் உரங்கள் மானியத்திட்டத்தின்கீழ் (பிரதமரின் பாரதிய ஜனுர்வாரக் பரியோஜனா–பிஎம்பிஜேபி) 'ஒரே நாடு ஒரே உரம்' திட்டத்தை அறிவித்து, அவர் மேலும் கூறியதாவது:

உரப்பைகளின் மீது 1/3 இடத்தில், சம்பந்தப்பட்ட தயாரிப்பு நிறுவனத்தின் வணிகப்பெயர், இலச்சினை, பொருள் தொடர்பான இதர விவரக்குறிப்புகள் இடம்பெற அனுமதிக்கப்படும். 2/3 பங்கு இடத்தில் 'பாரத்' என்ற வணிகப் பெயரும், பிஎம்பிஜேபி திட்டத்தின் இலச்சினையும் இடம்பெற வேண்டும். உர நிறுவனங்கள், தங்களிடமுள்ள பழைய இருப்புகளை காலிசெய்ய இந்த ஆண்டு இறுதிவரை அவகாசம் அளிக்கப்படும்.

கடந்த நிதியாண்டில் உர மானியங்களுக்கான செலவு ₹1.62 லட்சம் கோடியாக இருந்தது. நடப்பு நிதியாண்டில் இது ₹2.25 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதுதவிர உரங்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு கொண்டு செல்வதற்கு ஆண்டுதோறும் ₹6,000 கோடி முதல் 9,000 கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது.

யூரியாவின் சில்லறை விற்பனை விலையில் 80 சதவீதம், டை அமோனியம் பாஸ்பேட்டுக்கு 65 சதவீதம், என்பிகே உரத்துக்கு 55 சதவீதம், எம்ஓபி உரத்துக்கு 31 சதவீதம் நடுவணரசு மானியம் வழங்குகிறது.

உரங்கள் விநியோகத்தில் ஏற்படும் தடைகளைக் களைந்து, உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையிலான ஆரோக்கியமற்ற போட்டியை தடுப்பதே ஒரே நாடு, ஒரே உரம் திட்டத்தின் நோக்கமாகும். ஒரே பெயரில் மானிய உரங்களை விற்பனை செய்யும்போது, உர தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது அருகிலுள்ள இடங்களிலேயே விற்பனை செய்ய வழி ஏற்படும். தேவையற்ற போக்குவரத்து தடுக்கப்படும். உர நிறுவனத்தை தேர்வுசெய்வதில் விவசாயிகளுக்கு ஏற்படும் குழப்பம் தீரும். அதேசமயம், உரத்தின் தரத்திலும் எந்த சமரசமும் இருக்காது. விவசாயிகள் மீதான இடைத்தரகர்களின் ஆதிக்கமும் இருக்காது என்றார் அவர்.

1. இந்திய அரசால் முன்மொழியப்பட்ட ஆறுகளின் நீடித்த மேம்பாட்டுக்கான புதிய மாதிரியின் பெயரென்ன?

அ. நமாமி பாரத்

ஆ. அர்த்த கங்கை ☑

இ. ஆறு SDG

ஈ. நமாமி நதி

✓ தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் அண்மையில் ஸ்டாக்ஹோமில் கடைப்பிடிக்கபட்ட 2022 உலக நீர் வாரம் கொண்டாட்டத்தில் ஆற்றிய தனது உரையின்போது, 'அர்த்த கங்கை மாதிரி'பற்றி குறிப்பிட்டார். இது ஆறுகளின் நிலையான மேம்பாட்டிற்கான புதிய மாதிரியாகும்; இது பொருளாதாரத்தின்மூலம் மக்களை ஆற்றுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 'அர்த்த கங்கை' முனைவானது, 'GDPஇல் குறைந்தது 3 சதவீதத்தை கங்கைப்படுகையிலிருந்து பெறுவதற்கு' எண்ணுகிறது.

2. 'சிறார்கள் பாதுகாப்பு கருவித்தொகுப்பு' மற்றும் 'இணையவெளிப்பாதுகாப்பு குறித்த திறனூட்டுப் பயிற்சித் திட்டத்தை' வெளியிட்டுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?

அ. மைக்ரோசாப்ட்

ஆ. கூகுள் ☑

இ. ஆப்பிள்

ஈ. அமசான்

✓ கூகுள் நிறுவனம் அதன் இரண்டாம் பதிப்பு, 'Safer with Google' முனைவு நிகழ்வில் சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. அவற்றில் சில நாடு முழுவதும் உள்ள சுமார் 100,000 டெவலப்பர்கள், ஐடி மற்றும் துளிர் நிறுவல் நிபுணர்களுக்கான, 'சிறார்கள் பாதுகாப்பு கருவித்தொகுப்பு' மற்றும் 'இணையவெளிப்பாதுகாப்பு குறித்த திறனூட்டுப் பயிற்சித்திட்டம்' ஆகும்.

3. 'தேசிய விளையாட்டு நாளானது' கீழ்க்காணும் எந்த விளையாட்டு வீரரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது?

அ. மேஜர் தியான் சந்த் ☑

ஆ. மில்கா சிங்

இ. PT உஷா

ஈ. பல்பீர் சிங்

✓ இந்தியாவின் ஹாக்கி மேதையான மேஜர் தியான் சந்தின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய விளையாட்டு நாள்' கொண்டாடப்படுகிறது. இது, ஆண்டுதோறும் ஆகஸ்ட்.29 அன்று கொண்டாடப்படுகிறது. மேலும் இது, விளையாட்டு மற்றும் உடலியல் செயல்பாடுகளை நமது அன்றாட வாழ்வில் இணைப்பதன் அவசியம் மற்றும் நன்மைகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. மேஜர் தயான்சந்த் 1928, 1932 மற்றும் 1936ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இந்தியாவிற்காக தங்கப்பதக்கத்தை வென்றதில் முக்கியப்பங்கு வகித்தார்.

4. பாதசாரிகள் மற்றும் மிதிவண்டி ஓட்டுவோருக்காக 300 மீ நீளமுள்ள 'அடல் பாலம்' திறக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ. உத்தர பிரதேசம்

ஆ. பீகார்

இ. குஜராத் ☑

ஈ. கர்நாடகா

✓ ஆமதாபாத்தில் சபர்மதி ஆற்றின் குறுக்கே பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுவோருக்காக 300 மீ நீளமுள்ள, 'அடல் பாலத்தை' பிரதமர் மோடி திறந்து வைத்தார். 'அடல் பாலமானது' சபர்மதி ஆற்றின் இருகரைகளையும் புகழ்பெற்ற காத்தாடி திருவிழாவால் ஈர்க்கப்பட்ட வடிவமைப்பைக்கொண்டு இணைக்கிறது. 'காதி உத்சவ்' நிகழ்ச்சியின் போது இந்தப் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற லிந்தோய் சனம்பம் என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. டென்னிஸ்

ஆ. பூப்பந்து

இ. ஜூடோ ☑

ஈ. வாள்சண்டை

✓ ஜூடோ உலக சாம்பியன்ஷிப்பில், மகளிர் 57 கிகி பிரிவில் தங்கத்துடன் இந்தியாவுக்கு முதல் பதக்கத்தை வென்று லிந்தோய் சனம்பம் வரலாற்றுச் சாதனையைப் படைத்தார். மணிப்பூரைச் சார்ந்த 15 வயதான ஜூடோ வீராங்கனை உலக ஜூடோ கேடட் (U18) சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றார். உலக சாம்பியன்ஷிப்பின் எந்த வயதுப்பிரிவிலும் பதக்கம் வென்ற முதல் இந்திய ஜூடோ வீராங்கனை இவராவார். அவர், இந்திய அரசாங்கத்தின் TOPS திட்டத்தின் ஒருபகுதியாகவும் வீற்றுள்ளார்.

6. விளையாட்டின் மூன்று வடிவங்களிலும் தலா 100 போட்டிகளில் விளையாடிய முதல் இந்திய வீரர் யார்?

அ. M S தோனி

ஆ. விராட் கோலி ☑

இ. ரோகித் சர்மா

ஈ. ஷிகர் தவான்

✓ விராட் கோலி, சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மூன்று வடிவங்களிலும் தலா 100 போட்டிகளில் விளையாடிய முதல் இந்திய வீரர் மற்றும் இரண்டாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். கோலி, 2008 ஆகஸ்டில் சர்வதேச அரங்கில் அறிமுகமானதிலிருந்து 102 டெஸ்ட் மற்றும் 262 ஒருநாள் போட்டிகளுடன் சேர்த்து இப்போது 100 T20 போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். அண்மையில் ஓய்வுற்ற நியூசிலாந்து பேட்டர் ராஸ் டெய்லர்தான் இந்தச் சாதனையைப் படைத்த முதல் வீரராவார்.

7. தேசிய மருந்து விலையிடல் ஆணையத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. நடுவண் சுகாதார அமைச்சகம்

ஆ. நடுவண் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑

இ. நடுவண் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. நடுவண் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

रसायन एवं उर्वरक मंत्रालय
MINISTRY OF CHEMICALS AND FERTILIZERS
सत्यमेव जयते

✓ நடுவண் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தேசிய மருந்து விலையிடல் ஆணையத்தின் (NPPA) வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களில் உரையாற்றினார். NPPA என்பது இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்தாக்கத் தொழிற்துறையின் ஓர் இணைக்கப்பட்ட அலுவலகமாகும். இது மருந்துகளின் விலை நிர்ணயம் மற்றும் மலிவு விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் ஒரு தன்னாட்சிமிக்க கட்டுப்பாட்டாளராக செயல்படுகிறது.

8. 2022 – BWF உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற விளையாட்டு வீரர் / வீராங்கனை யார்?

அ. P V சிந்து ஆ. K ஸ்ரீகாந்த்

இ. விக்டர் ஆக்சல்சென் ☑ ஈ. கரோலினா மரின்

- ✓ டோக்கியோவில் நடந்த இறுதிப்போட்டியில் தாய்லாந்தின் குன்லெளட் விடிட்சானை வீழ்த்தி டென்மார்க்கின் விக்டர் ஆக்செல்சன் தனது இரண்டாவது பேட்மிண்டன் உலக பட்டத்தை வென்றார். கடந்த ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற உலகின் நெ:1 வீரரான ஆக்செல்சன், 2017இல் கிளாஸ்கோவில் உலகப்பட்டத்தையும் வென்றார். 28 வயதான அவர் ஓர் ஆட்டத்தில்கூட தோல்வியடையாமல் இறுதிப்போட்டிக்கு வந்துள்ளார். இந்தச் சீசனில் இது அவர் வெல்லும் ஆறாவது பட்டமாகும்.

9. அணுவாற்றல் சோதனைகளுக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.26

ஆ. ஆகஸ்ட்.28

இ. ஆகஸ்ட்.29 ☑

ஈ. ஆகஸ்ட்.31

- ✓ ஐநா அவை ஆகஸ்ட்.29 அன்று, 'அணுவாற்றல் சோதனைகளுக்கு எதிரான உலக நாளை' அனுசரிக்கிறது. அணு ஆயுதங்களைச் சோதிப்பதால் ஏற்படும் பேரழிவு விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. அணுவாயுதப் பெருக்கத்தை நிறுத்தவும், அத்தகைய சோதனைகளை நிறுத்தவும் உலக அரசாங்கங்களை இந்த நிகழ்வு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது. 1945 ஜூலை.16 அன்று அமெரிக்காவால் 'டிரினிட்டி' எனப்படும் முதல் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது.

10. ஷுமாங் லீலா என்பது கீழ்க்காணும் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் நிகழும் ஒரு பாரம்பரிய விழாவாகும்?

அ. கேரளா

ஆ. ஹிமாச்சல பிரதேசம்

இ. மணிப்பூர் ☑

ஈ. அஸ்ஸாம்

- ✓ 50ஆவது அனைத்து மணிப்பூர் ஷுமாங் லீலா விழா 2021–2022 ஆனது இம்பாலில் உள்ள இபோயைமா ஷுமாங் லீலா ஷாங்லெனில் தொடங்கியது. மணிப்பூர் ஆளுநர் இல கணேசன், முதலமைச்சர் N பைரன் சிங் ஆகியோர் இதன் தொடக்க விழாவில் கலந்துகொண்டனர். 'ஷுமாங் லீலா' என்பது மணிப்பூரில் உள்ள ஒரு பாரம்பரிய நாடக வடிவமாகும். இதில் பெண் கலைஞர்களின் பாத்திரங்கள் அனைத்தும் ஆண் நடிகர்களாலும் ஆண் கதாபாத்திரங்கள் பெண் கலைஞர்களாலும் நடிக்கப்படுகின்றன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வகங்களுக்கு தேசிய தர உறுதி அங்கீகாரம்

தமிழகத்தில் செயல்படும் 5 ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வகங்களுக்கு நாட்டிலேயே முதன்முறையாக தேசிய தர உறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை தேசிய தர நிர்ணய அங்கீகார வாரியம் (என்ஏபிஎல்) வழங்கியது.

தமிழகத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறையின்கீழ் இயங்கும் திருப்பூர் மாவட்டம், தளவாய்பட்டினம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், திருப்பத்தூர் மாவட்டம், பாச்சூர் ஆரம்ப சுகாதார நிலையம், இராமநாதபுரம் மாவட்டம், வெங்கிட்டாங்குறிச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், தூத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய 5 ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வகங்கள் தேசிய தர நிர்ணய அங்கீகார வாரிய அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்து, நாட்டிலேயே முதன்முறையாக தர உறுதிச்சான்றிதழைப்பெற்றுள்ளன.

---

1. புளூம்பெர்க் பில்லியனர் குறியீட்டின்படி, அண்மையில் உலகின் மூன்றாவது செல்வந்தரான இந்திய வணிகர் யார்?

அ. முகேஷ் அம்பானி

ஆ. கௌதம் அதானி ☑

இ. சைரஸ் பூனவல்லா

ஈ. இராதாகிஷன் தமானி

✓ இந்திய தொழிலதிபர் கௌதம் அதானி அண்மையில் உலகின் மூன்றாவது மிகப்பெரிய செல்வந்தர் ஆனார். இந்த ஆண்டு தனது நிகர சொத்து மதிப்பில் அதிகரிப்பைக்கண்ட உலகின் 10 பணக்காரர்களுள் இவரும் ஒருவராவார். $137.4 பில்லியன் டாலர் நிகர மதிப்புடன், அதானி இந்த ஆண்டு மட்டும் $60.9 பில்லியன் டாலர்களை ஈட்டியுள்ளார். முதல் ஐந்நூற்றுவர் பட்டியலில் இந்தியாவிலிருந்து 18 செல்வந்தர்கள் இடம்பெற்றுள்ளனர்.

2. 'இந்தியா @100' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம்/கவுன்சில் எது?

அ. NITI ஆயோக்

ஆ. பொருளாதார ஆலோசனைக் குழு ☑

இ. பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில்

ஈ. கொள்கை ஆராய்ச்சி மையம்

✓ 'இந்தியா@100' என்ற போட்டித்தன்மை பெருந்திட்டத்தை பிரதம அமைச்சரின் பொருளாதார ஆலோசனைக் குழு வெளியிட்டது. அக்குழுவின் தலைவராக Dr பிபேக் தெப்ராய் இருந்தார். 2047–ஆம் ஆண்டுக்குள் அதிக வருவாய் ஈட்டக்கூடிய நாடாக இந்தியாவை திகழச்செய்வதற்கான வழிவகைகள் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போட்டித்தன்மை பெருந்திட்டம் என்பது போட்டித்தன்மைக்கான நிறுவனமான EAC–PM மற்றும் ஹார்வர்ட் வணிகப் பள்ளியின் Dr கிறிஸ்டியன் கெட்டல்ஸ் ஆகியோரின் கூட்டு முனைவாகும்.

3. 'இராஜீவ் காந்தி கிராமப்புற ஒலிம்பிக் போட்டிகளை'த் தொடங்கியுள்ள இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. அஸ்ஸாம்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. சத்தீஸ்கர்

ஈ. தெலுங்கானா



✓ இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட், ஜோத்பூரில் ஒரு மாத காலம் நடைபெறும் இராஜீவ்காந்தி கிராமப்புற ஒலிம்பிக் போட்டிகளை தொடங்கிவைத்தார். இக்கிராமப்புற ஒலிம்பிக்கில் இராஜஸ்தான் முழுவதுமுள்ள 44,000 கிராமங்களும் 30 இலட்சம் பேரும் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பங்கேற்கும் 30 இலட்சம் பேரில் 9 இலட்சம் பேர் பெண்களாவர். இதில் இடம்பெறும் விளையாட்டுகளில் கைப்பந்து, ஹாக்கி, டென்னிஸ் பால் கிரிக்கெட் மற்றும் கோ–கோ ஆகியவை அடங்கும்.

4. 'பல்லுயிர்களைக் காப்பதற்கான ஐநா கூட்டத்தொடரை' நடத்திய நகரம் எது?

அ. நியூயார்க் ☑

ஆ. பாரிஸ்

இ. ரோம்

ஈ. டோக்கியோ

✓ நியூயார்க்கில் உள்ள ஐநா அவையின் தலைமையகத்தில், 'பல்லுயிர்களைக் காப்பதற்கான ஐநா அமர்வு' நடந்தது. இருப்பினும், ஐநா–இன் உறுப்புநாடுகள் இரண்டு வார காலம் நீண்ட இந்தப் பேச்சுவார்த்தையை, ஆழ்கடல்களில் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தம் ஏதுமின்றி முடித்துக்கொண்டன. அது வளர்ந்துவரும் சுற்றுச் சூழல் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் ஓர் ஒப்பந்தமாகும்.

5. நூறாண்டுக்குப் பிறகு தனக்கென 2ஆவது இரயில் நிலையம் கிடைக்கப்பெற்ற மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. அருணாச்சல பிரதேசம்

ஆ. நாகாலாந்து ☑

இ. அஸ்ஸாம்

ஈ. மிசோரம்

✓ நூறாண்டுக்குப்பிறகு நாகாலாந்து மாநிலத்திற்கு இரண்டாவது இரயில் நிலையம் கிடைத்துள்ளது. ஷோகுவி ரயில் நிலையத்திலிருந்து டோனி போலோ விரைவு இரயிலை அம்மாநில முதலமைச்சர் நெய்பியு ரியோ கொடியசைத்து தொடங்கிவைத்தார். அஸ்ஸாமின் கௌகாத்தி மற்றும் அருணாச்சல பிரதேசத்தில் உள்ள நஹர்லாகுன் இடையே தினமும் இந்த இரயில் இயக்கப்படும். நாகாலந்தின் முதல் இரயில் நிலையமான திமாபூர் இரயில் நிலையம் கடந்த 1903ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

6. லாங்யா ஹெனிபா வைரஸ் அல்லது 'LayV' என்ற புதிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்ட நாடு எது?

அ. இத்தாலி

ஆ. இஸ்ரேல்

இ. சீனா ☑

ஈ. இந்தியா



✓ சீனாவின் இரு கிழக்கு மாகாணங்களில் லாங்யா ஹெனிபா என்ற விலங்கினத்தில் இருந்து மனிதர்க்குப் பரவும் புதிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வகை ஹெனிபா வைரஸ் லாங்யா ஹெனிபாவைரஸ் அல்லது 'LayV' என்றும் அழைக்கப்படுகிறது. அறிவியலாளர்களின் கூற்றுப்படி, இந்த வைரஸ் விலங்குகளிடமிருந்து மனித இனத்திற்குப் பரவுகிறது; அதே வேளையில் இந்தக் குறிப்பிட்ட வைரஸ் ஒரு மனிதரிடத்தில் இருந்து மற்றொரு மனிதனுக்கு பரவுவதாக இதுவரை அறியப்படவில்லை.

7. கால்நடைகளில் காணப்படும் தோல் கழலை நோய்க்கு உள்நாட்டிலேயே தடுப்பூசியொன்றை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?

அ. NIV

ஆ. ICAR ☑

இ. IISc

ஈ. NABARD

✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் (ICAR) உழவு ஆராய்ச்சி அமைப்பின் இரு நிறுவனங்கள், கால்நடைகளில் காணப்படும் தோல் கழலை நோய்க்கு உள்நாட்டிலேயே தடுப்பூசியொன்றை உருவாக்கியுள்ளன. கடந்த சில மாதங்களாக இந்த நோய் பல மாநிலங்களில் பரவிவந்தது. LSD தடுப்பூசியான 'Lumpi–ProVacInd'ஐ வணிகரீதியாக விற்பனை செய்ய நடுவணரசு திட்டமிட்டுள்ளது. இந்த நோய் காரணமாக இராஜஸ்தானில் 2000 கால்நடைகள் இறந்துள்ளன. அதைத்தொடர்ந்து குஜராத் மற்றும் பஞ்சாப் முதலான மாநிலங்களில் இதன் பாதிப்பு காணப்பட்டது.

8. இந்தியாவில், 'அரிசி செறிவூட்டலை' மேற்கொள்கின்ற நடுவண் அமைச்சகம் எது?

அ. வேளாண் அமைச்சகம்

ஆ. நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு வழங்கல் அமைச்சகம் ☑

இ. சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

ஈ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

- ✓ நடுவண் நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு வழங்கல் அமைச்சகத்தின் கூற்றுப்படி, 24 மாநிலங்களில் உள்ள 151 மாவட்டங்கள் பொது வழங்கல் முறையின்கீழ் செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்கி வருகின்றன. 2022 ஏப்ரல் மாதம் முதல் இரண்டாம் கட்டமாக பொது வழங்கல் முறையின்கீழ் சுமார் 6.83 இலட்சம் டன் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் கூறியுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள் (ICDS) மற்றும் பிரதம மந்திரி போஷான் சக்தி நிர்மானின் (PM POSHAN) கீழ் செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்குவதற்காக இதன் முதல் கட்டம் கடந்த 2021 அக்டோபரில் தொடங்கியது.

9. 'பூரண சுயராஜ்யம்' என்ற கொள்கை மற்றும் 'வந்தே மாதரம்' என்ற நாளிதழுடன் தொடர்புடைய இந்தியத் தலைவர் யார்?



அ. சுபாஷ் சந்திர போஸ்

ஆ. அரவிந்த கோஷ் ☑

இ. பாலகங்காதர திலகர்

ஈ. தாதாபாய் நௌரோஜி

- ✓ 1930ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸின் பிரகடனத்திற்கு 20 ஆண்டுகளுக்கும் முன்பாக, 'பூரண சுயராஜ்யம்' என்ற கொள்கையை முதன்முதலில் பரப்பியவர் அரவிந்த கோஷ் ஆவார். அவரது 150ஆவது பிறந்தநாள் அண்மையில் கொண்டாடப்பட்டது. அரவிந்தர், கடந்த 1872 ஆகஸ்ட்.15இல் அரவிந்த கோஷ் என்ற பெயரில் பிறந்தார்.
- ✓ அவர் ஒரு தத்துவஞானி, கவிஞர், பத்திரிகையாளர் மற்றும் புரட்சியாளராவார். அவர் தனது செய்தித்தாளான, 'வந்தே மாதரத்தில்' முழுமையான விடுதலை பற்றிய எண்ணத்தை வெளிப்படுத்தினார். மேலும் அந்த இலக்கை அடைய ஒத்துழையாமை, செயலறு எதிர்ப்பு மற்றும் சுதேசி பொருட்களின் பயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய அணுகுமுறையை அவர் உருவாக்கினார்.

10. தேசிய நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்ட, 'பதங்' அமைந்துள்ள நாடு எது?

அ. ஜப்பான்

ஆ. இந்தியா

இ. சிங்கப்பூர் ☑

ஈ. நேபாளம்

- ✓ சிங்கப்பூர் அதன் இருநூறாண்டு பழமையான பசுமைவெளியான 'பதங்'கை அதன் எழுபத்தைந்தாவது தேசிய நினைவுச்சின்னமாக அறிவித்தது. அந்நகர அரசு அதன் 57ஆவது தேசிய நாளைக்கொண்டாடுகிறது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் கடந்த 1943ஆம் ஆண்டு தனது 'தில்லி சலோ' முழக்கத்தை வழங்கிய தளம் 'பதங்' ஆகும். சிங்கப்பூரின் தேசிய நினைவுச்சின்னங்களின் பட்டியலில் பசுமைவெளியாக இருந்த இடம்பிடித்த முதல் தளம் 'பதங்' ஆகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பல்லுயிர் பாதுகாப்புத் துறையில் இந்தியா – நேபாளம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது

வனங்கள், வனவுயிரிகள், சுற்றுச்சூழல், பல்லுயிர் பாதுகாப்பு, வழித்தடங்கள் மற்றும் ஒன்றோடொன்று இணைக்கும் பகுதிகளை மீட்டெடுப்பது உள்ளிட்ட பருவநிலை மாற்றம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி விரிவுபடுத்துவது, இருநாடுகளுக்கிடையே அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது என்ற கண்ணோட்டத்துடன் நேபாள அரசுடன் பல்லுயிர் பாதுகாப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் முன்மொழிவுக்குப் நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

2. செப். 5–இல் தமிழக அரசின் 3 கல்வித் திட்டங்கள் தொடக்க விழா

சென்னையில், 'புதுமைப்பெண்', 'தகைசால் பள்ளிகள்', 'மாதிரிப்பள்ளிகள்' ஆகிய மூன்று திட்டங்களுக்கான தொடக்க விழா (செப்.5) நடைபெறவுள்ளது.

அவற்றின் விவரம்:

1. தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித்திட்டத்தின்கீழ், அரசுப்பள்ளியில் படித்த அனைத்து மாணவிகளுக்கும் உயர்கல்வி உதவித்தொகையாக மாதம் ₹1,000 வழங்கும் 'புதுமைப்பெண்' திட்டம்.

2. சிறந்த பள்ளிகள் – தில்லியைப் போலவே, தமிழக அரசும் மாநகராட்சி, நகராட்சிப்பகுதிகளில் அதிநவீன 26 'தகைசால் பள்ளிகளை' அறிமுகப்படுத்துகிறது. தொலைநோக்குப்பார்வையுடன் வலுவான அடித்தளத்தையும், கற்றலின் தேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் மேம்படுத்தப்பட்டதாக இப்பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

3. தமிழகத்தில் ஏற்கெனவே கடந்த 2021 அக்டோபர் மாதம் தொழிற்முறை படிப்புகளை வழங்கும் 10 ஸ்டீம் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை, மருத்துவம்) 'மாதிரிப்பள்ளிகள்' தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 15 இடங்களில் ₹125 கோடியில் இந்த மாதிரிப்பள்ளிகள் தொடங்கப்படுகின்றன.

---

3. INS விக்ராந்த் போர்க்கப்பல்: செப். 2–இல் அர்ப்பணிக்கிறார் பிரதமர்

முற்றிலும் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட முதலாவது விமானந்தாங்கி போர்க் கப்பலான INS விக்ராந்தை பிரதமர் நரேந்திர மோடி செப்.2–ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இதுகுறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம்: போர்க்கப்பல் வடிவமைப்பு பணியகத்தால் வடிவமைக்கப்பட்டு, கொச்சி கப்பல்கட்டும் தளத்தால் கட்டப்பட்ட இந்தக் கப்பல், அதிநவீன தானியங்கி வசதிகளைக் கொண்டுள்ளது. இந்திய கடற்படை வரலாற்றிலேயே உள்நாட்டில் கட்டப்பட்ட மிகப்பெரிய கப்பல் INS விக்ராந்த் ஆகும். இதன்மூலம் இந்திய கடற்படையின் பலம் மேலும் அதிகரிக்கும்.

---

4. பிரபல பொருளாதார நிபுணர் அபிஜித் சென் காலமானார்

பிரபல பொருளாதார நிபுணரும், திட்டக்குழு முன்னாள் உறுப்பினருமான அபிஜித் சென் (72) 29–08–2022 அன்று காலமானார். பொருளாதாரப் பேராசியராக நாற்தாண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியவர் அபிஜித் சென். மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது 2004 முதல் 2014 வரை திட்டக்குழு உறுப்பினராக அபிஜித் சென் பதவி வகித்தார். இவருடைய சிறந்த பொதுச் சேவையைப் பாராட்டி 2010–ஆம் ஆண்டு அவருக்கு 'பத்ம பூஷண்' விருது வழங்கப்பட்டது.